


பாட்டில் பூதம்!


# பாட்டில் பூதம்


சமுக விரோத சக்திகளை வேரறுக்கும் இலட்சிய கதாநாயகனை ஸ்பைடரிடம் வியத்தகு ஆற்றல்மிக்க வலை துப்பாக்கியும், வாயு துப்பாக்கியும் எப்போதும் கை வசம் இருக்கும். புரபஸர் பெல்ஹாமும் ராய் ஆர்டினியும் அவனுடைய உதவியாளர்கள், ஒரு வித்தியாசமான சூழலில், ஒரு நெருக்கடியான கட்டத்தில் ஸ்பைடர் குழுவினர் சிக்கித் தவிக்கும் அவலத்தோடு இந்தக் கதை தொடங்குகிறது!
புரபஸர் ஆர்டினி! இந்த சாபக்கேடான பாட்டிலிலிருந்து என்னை விடுவியுங்கள்!
அட- இடிக் கதிரலையினால்கூட பாட்டிலை உடைக்க முடியவில்லையே? புதிரான சங்கதி!
ஹேய் புரபஸர்! பின்னால் சிங்க முக வெறியர்கள் கூட்டம் ஒன்று ஓடோடி வருது - சீக்கிரம் ஏதாவது செய்யுங்க!


கதிரலைகளால் இந்த சிங்க - முக வெறியர்கள் கொஞ்சமும் பாதிக்கப்படவில்லையே! ஏன்?
ஐயோ- தொலைந்தோம்!
பட்!



மறுகணம்-
ஹரா-ஹரா-
ஹரா-ஹரா-
யீயீயீ-
விடு
என்னே!



ஸ்பைடரை சிறைப்படுத்தி வைத்
திருந்த பாட்டிலேயும் விண்ணில்
தூக்கி கடாசினார்கள்-
ஆ-ஆ-ஆ-
யீயீயீ-


கீழே நின்றிருந்த ஒரு ராட்சஸ
ரோபோ அம்மூவரையும் கை
களில் வாங்கிக் கொண்டது-
ஹீ-ஹீ-



பளார்!
ஆனால் இந்த படுபயங்கர அனுபவம் ஓர் உண்மைச் சம்பவம் அல்ல! ஸ்பைடர் கண்ட ஒருதீக் கனவு அது! பாதுகாப்பான தன் இருப்பிடத்தில் தூங்கிக்கொண்டிருந்த ஸ்பைடர் ஓர் அலறலோடு கண்விழித்தபோது அவனுடைய சகாக்களின் தூக்கமும் கலைந்துவிட்டது-
ஐ யோ...
பயந்துவிட்டீங்களா பாஸ்? கெட்ட சொப்பனம் போலிருக்கு!
கோபத்தால் வெகுண்டெழுந்த ஸ்பைடர் வலைப் படுக்கையில் இருந்து கீழே குதித்தான்-
நான் பயந்துவிட்டதாக உளற உனக்கு எவ்வளவு நெஞ்சழுத்தம் இருக்கணும்? படவா ராஸ்கல்-உன்னை-
சும்மா ஒரு பேச்சுக்குச் சொன்னேன் பாஸ் அதுக்குப் போயி நீங்க இப்படி-


உலகத்திலேயே நீசத்தனமான தப்பு எதுன்னு ஸ்பைடரை பரிகாசம் பண்றதுதாண்டா!


உங்க ரெண்டு பேரையும், பார்க்கும் போதே எரிச்சல் பத்திக்கிட்டு வருது! கையாலாகாத உதவாக்கரைகள், எப்போதோ ஒழிச்சுக் கட்டியிருக்கணும்-உங்களை!
தொப்!


பாஸ்-எங்களோட வரைமுறை யற்ற விசுவாசத்தை கொஞ்சம் நெனைச்சுப்பாருங்க. உங்களோட ஈடிணை யற்ற மதிநுட்பத்தையும், அசகாய சூரத்தன்மையும் கண்டு நாங்கள் வியக்காத நாளே கிடையாது!
நெஜமாத்தான் சொல்றீங் களா பாஸ்-எங்களை தொலைச்சுக் கட்டி டப் போறீங்களா?
மூடு வாயை! கொதிச்சுப் போயிருக்கேன். இன்னொருவாட்டி அந்த கேள்வியை கேட்டா நெஜமாகவே தலைமுழுகிடுவேன்-ஜாக்கிரதை!
சரி-சரி-போய் படுங்க! அடேய் ஆர்டினி-குறட்டைச் சப்தம் கேட்டதோ-தொலைச் சுப்புட்டேன்-ஆமாம்!
குறட்டை வராமலிருக்க எங்க மாமா உத்தர வாதமான ஒரு வழி சொல்லிக் கொடுத்தார்! மூச்சை வெளியே விடவே கூடாதுங்கிறது தான் அது. அட-சரிதான் போடா குரங்கு மூஞ்சிப் பயலே!
ஸ்பைடரின் சிந்தனை சற்று முன் கண்ட தீக்கனவைப் பற்றியே சுற்றிச்சுற்றி வந்தது-
அந்தக் கனவு வரப்போகும் விபரீதத்தை முன்கூட்டி எச்சரிக்கும் ஒரு கெட்ட சகுனமோ?
ஸ்பைடரின் அந்த மனக் கிலேசம் மறுநாளே உண்மையாகிப் போனது-


மறுநாள்-கைதிகள் குழாம் அன்றாட பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்த இடத்தில்-
ஏய்-கார்கோ-மசமசன்னு நிற்காதே- ரெளடிக் கும்பலின் தலைவரு இருந்தப்போ, அனுபவிச்ச சுகபோகங்களைப் பற்றி கனவு காணும ஒழுங்கா வேலையைப் பாரு!
நீ சொன்னாலும் சொல்லாவிட்டாலும் நேற்று வரை நான் ஒரு ராஜா தான் அப்பனே!
இன்னும் தண்டனைக் காலம் பத்து வருஷம் மிச்சமிருக்கு-இங்கேர்ந்து தப்பிக்க வழியே கிடையாதுன்னு சொல்றாங்க-ஆனா என்னோட அதிர்ஷ்டம் எப்போதுமே என்னை கைவிட்டதில்லை!
எல்லோரும் இப்போ பத்து நிமிடம் ஓய்வு எடுத்துக்கலாம்!
உழைத்து ஓய்ந்து போன கைதிகள் ஆற்றோரம் அமர்ந்து ஓய்வெடுத்த வேளையில், நீரில் ஒரு பாட்டில் மிதந்து வருவதை கண்டான் கார்கோ-
ஹோ! இம்மாதிரி மிதந்து வரும் பாட்டில்களுக்குள்ளே சில வேளைகளில் ஏதாவது செய்திக் குறிப்பு இருப்பதுண்டு-


அடடே-'அரேபியன் நைட்ஸ்' கதையிலே வர்ற குட்டிச்சாத்தான் மாதிரி உள்ளே ஒரு உருவம் தெரியுது! வெறும் பிரமையோ?
பிரமையில்லே கர்கோ! நான்-நிஜம்! உடனே நான் வெளியேற உதவி செய்!
சரி அந்த உதவியை நான் உனக்கு செய்தால் எனக்கு என்ன பிரதியுபகாரம் செய்வாய் சொல்?
இந்த மாயக்குடுவையிலிருந்து என்னை நீ மீட்டால் அந்தக் கணத்திலிருந்து நான் உனக்கு அடிமையாவேன். பாட்டிலைவிட்டு வெளியேறியதும் எனக்கு திரும்பக்கிடைக்கும் மாய ஆற்றலைக்கொண்டு நீ விரும்பியதெல்லாம் நிறைவேற்றித் தருவேன்!
பேச்சு மாற மாட்டாயே?


அஹ்-!
ஏய்ய்-என்ன அது?


சாத்தான்! நாங்கள் கல்லுடைத்தது போல் இனி இந்த போலீஸ் பட்டா ளத்தை கல்லுடைக்கச் செய். இது தான் என் முதல் கட்டளை!
இதோ நிறைவேற்று கிரேன்-மாஸ்டர்!
நிச்சயமாக இது பில்லிசூனிய விவகாரம்தான்- அவனை தொடாமலே தோட்டாக்கள் தெறித்து விலகுகின்றனவே!


சாத்தானின் ஆணையைப் புறக்கணிக்க இயலவில்லை!.
ஹோ-ஹோ-என்ன ஒரு பரிதாபம் பார்! சாத்தானே-என் அடுத்த ஆணை-என்னை அப்படியே தூக்கிக்கொண்டு பறந்து போ-இங்கிருந்து!
கர்கோவை சுமந்து கொண்டு சாத்தான் மேலெழும்பிய சற்றைக்கெல்லாம், தங்களுடைய ஹெலிகாரில் அந்தப் பக்கம் ரோந்து வந்த ஸ்பைடர் குழு அவர்களை கண்டுகொண்டது-
நாசமாகப் போக! கைதி ஒருத்தன் தப்பிச்சுப் போக சாத்தான் ஒத்தாசை பண்றதைப் பார்! அவன்-என்னால் கைதான கர்கோ அல்லவா?
கோணங்கித்தனமான தோற்றத்தில் அதோ வர்றவன்-ஸ்பைடர்! நம்மை மடக்க யத்தனித்தால் கொஞ்சமும் யோசிக்காம ஒழிச்சுக் கட்டிடு!
ஹெலிகாரிலிருந்து எஃகைவிட வலிய இழைகளை உமிழ்ந்தது ஒரு கருவி-
என்னைப் பிடித்து மீண்டும் சிறையில் அடைக்கப் பார்க்கிறான்-விடாதே-
தீர்த்துக்கட்டு ர்களை!


சட்டென்று வட்டமடித்தான் சாத்தான்-
இழைகளால் பிணைக்கப்பட்ட ஹெலி
காரும் கன்னு பின்னுவென்று
அலைக்கழிக்கப்பட்டது-
இழைகளை நாசம் பண்ணியாச்சு-
இழைகளை துண்டித்து தன் ஹெலிகாரை
விடுவித்துக்கொண்டு விட்டான் ஸ்பை
டர்-அதே கணத்தில் தன் வியத்தகு ஆற்
றலால் தன்னை பிணைத்திருந்த இழைகளை
அப்படியே தவிடு பொடியாகச்
செய்தான் சாத்தான்-
விண்ணில் சுழன்று சுழன்று பறந்ததில் எனக்கு தலை கிறுகிறுக்கிறது-
அரை மயக்க நிலையிலிருந்த கர்கோ
தன் பிடியை விட்டுவிட
ஊய்ய்-ப்ப்-


தரையை நோக்கி விழ்ந்து கொண்டிருந்த கர்கோவை ஹெலி காரிலிருந்து நீண்ட ஒரு வலை தாங்கிப் பிடித்தது.
அஹ்-
தப்பிச்சுக்கிட்டோமா இல்லே மாட்டிக்கிட்டோமான்னு குழப்புது-இல்லியா?
வலை 'மளக்'கென மடிந்து ஹெலி காரின் திறப்பின் வழியே கர்கோவை உள்ளே தூக்கி எறிந்தது.
உள்ளே வாடா-நாயே!
துள்ளாதே! இன்னும் ஓரிரு நிமிடத்தில் என் சாத்தான் வந்து உன்னிடமிருந்து என்னை மீட்டுச் சென்று விடும்-பாரேன்!
மனக்கோட்டை கட்டாதே கர்கோ-அங்கே பார்-உன் சாத்தான் எங்கோ விலகிப் போவதை!


நன்றிகெட்ட பயல்! அவனை நான் பாட்டிலில் இருந்து விடுவித்தேன்- ஆனால் அவனே நான் நேராக மீண்டும் சிறைக்குப் போக வகை செய்து விட்டான்!
நேராக ஜெயிலுக்கு விடு பெல்ஹாம்! தப்பியோட முயன்ற குற்றத்திற்காக கர்கோவை தனிமை சிறையில் அடைக்க வேண்டும்!
ஆனால் சாத்தானே வேறொரு சூழ்ச்சித் திட்டத்தோடு காத்திருந்தான்-
ஓம்-ரீம் ஜிம்பா-பாதாளம் வாய் திறக்கட்டும ஆங்கார ஜந்துக்கள் அணி அணியாக வெளிவரட்டும்-
திடீரென்று உருவான ஒரு குகைப் பாதையினுள் ளிருந்து இறக்கை முளைத்த ராட்சஸ ஜந்துக்கள் ஏகப்பட்ட எண்ணிக்கையில் வெளிப்பட்டன-
நீங்க என் ஆணைக்கு கட்டுப் பட்ட அடிமைகள்



ஸ்பைடர் என்று தன்னை சொல்லிக் கொள்ளும் தலைக்கனம் பிடித்தவனை ராட்சஸ ஸ்பைடர்களே துவம்ஸம் செய்யப் போகிற விதியின் திருவிளையாடலை என்னவென்பது ஹா-ஹா-
டம்!
பெல்ஹாம்-வாயு பீரங்கியை இயக்கு-சீக்கிரம்!
ஊஊஷ்



ராட்சஸ சிலந்திகள் ஆக்ரோஷ மாக தாக்கின.
ஸ்பைடர்-! மாஸ்டர் கர்கோவை நீ விடுவித்தால் பிழைத்துப் போங்கள் என்று உங்களை நழுவ விட்டு விடுவேன்!
ஆபத்தான வாயுவை இதோ- என் மாய சக்தியால் சாதா ரண காற்றாக மாற்றி விட்டேன்-ஸ்பைடர்!
அவன் சொல்கிற படி செய்வதுதான் புத்திசாலித்தனம்!
சாத்தானை வெல்ல யாரால் முடியும்-ஹும்ம்!
மரணத்திற்குப் பயந்து சரணடைகிற கோழை அல்ல இந்த ஸ்பைடர்!


ஆனால் துள்ளி எழுந்த
கர்கோ மின்னல் வேகத்தில்
செயல்பட்டான்.
என்னைத் தடுத்து நிறுத்த
இனி எவனாலும் முடியாது.
ஹே சாத்தான் என்னை
தாங்கிப் பிடி!


அம்மாடி-பொழைச்சுக்கிட்டேன் ஒரு வழியா!
நான் உங்கள் அடிமை-உங்கள் ஆணையை நிறைவேற்றாமல் இருந்து விடுவேனா?
ராட்சஸ சிலந்திகளை ஏவி ஸ்பைடர் குழுவை ஒரேயடியாக பரலோகம் அனுப்பி விடட்டுமா மாஸ்டர்?
வேண்டாம்! அவ்வளவு சுலபத்தில் அந்த சண்டாளன் செத்துவிடக்கூடாது. அணு அணுவாக வதைபட்டுச் சாகவேண்டும்!
என் அருமை சிலந்திப் படையே-மீண்டும் பாதாள குழிக்குள் நுழைந்து கொள்ளுங்கள். குகை வாயில் முன்போல் மூடிக் கொண்டு மறைந்து போகட்டும்!
இடி அலை கதிர்வீச்சை பாய்ச்சு பயல்கள் சுக்கு நூறாக வெடித்து சிதறட்டும்!


இடி முழக்கத்தோடு ஒளிக் கற்றை ஒன்று ஹெலிகாரிலிருந்து வெளிப் பட்டது-
ஸ்பைடரின் கதிரலை வீச்சு சாத்தானையோ, அவனோட மாஸ்டரையோ ஒண்ணும் பண்ணிக்க முடியாது!
பளார்!
இப்போதைக்கு உன்னை பிழைத்துச் செல்ல அனும- -திக்கிறேம் ! அற்பப் பயலே! போடா!
கர்கோவும அவனோட சாத்தானும் என்ன விஷமத்தனம் பண்ணிக் காத்திருக்கிறார்களோ- அவங்களோட கொட்டத்தை அடக்குகிற வரைக்கும் என் மனசிலே சந்தோஷம் வராது!
மறு நாள்— கைதாகுமுன் கர்கோவின் தலைமையில் இயங்கிய சமூக விரோத கும்பல் கர்கோவையும், சாத்தானையும் பாராட்டி ஒரு விருந்து கொடுத்துக் கொண்டிருந்தது-
போலீஸாரின் பிடியிலிருந்து ஒரு சாத்தான் தன்னை விடுவித்ததாக கர்கோ சொல்லும் கதையை நம்புகிற அளவுக்கு நாம் அடிமடையர்கள் இல்லை! கைதேர்ந்த நடிகன் யாரோதான் சாத்தானாக நாடகமாடியிருக்கக்கூடும்!
நீ இல்லாதபோது நம் கும்பலுக்கு தலைமை தாங்குகிற பெருமை எனக்கு கெடைச்சது- கர்கோ-
உன் திறமையிலே எனக்கு அபார நம்பிக்கை உண்டு பஸ்ஸோ! படு பிரமாதமாத்தான் நிர்வாகம்பண்ணி கும்பலை சிக்குன்னு வச்சிருக்கே- நன்றி உனக்கு!


அஹ்-? வலி தாங்கலை-ஐயோ-மயக்கமா வருது-அடேய் துரோகி விஷத்தை கலந்திட்டியாடா பாவி!
நீ செத்துத் தொலைஞ்சா கும்பலுக்கு நானே நிரந்தர தலைவனாகிடலாமில்லையா-அதான்!


உக்க்-உக்க்க் ஏ..சாத்தானே,ஏன் சும்மா வேடிக்கை பார்த்துக்கிட்டு உட்காந்திருக்கே?என்னை உன்னோட மகிமையினாலே காப்பாற்றும்?
'சாத்தானே என்னை காப்பாற்று'ன்னு நீங்க இன்னமும் உத்தரவிடலையே?


அடேய் ஞானசூனியமே-காப் பாற்று-என்னை காப்பாற்றுடா-உயிர் போறதுக்கு முன்னாடி!
சரி! நீங்க உட்கொண்ட விஷம் உடலுக்கு வலிமை தரும் லேகிய மாகட்டும்! இனி நீங்கள் பிழைச்சுடுவீங்க!


கர்கோ மரணத்தின் பிடியிலிருந்து விடுபட்டதும்-
அடப்பாவி எப்படியோ விஷத்திலேர்ந்து தப்பிச்சுக்கிட்டியேடா- அதனுலென்ன இப்பவே என் கையாலே கழுத்தை நெரிச்சு கொன்னுடறேன்!
காட்டு எருதைவிட முரட்டுத்தன மானவனுச்சே இந்த பஸ்லோ!
சும்மா வேடிக்கைபார்த்துக்கிட்டு நிற்காதே- இவனிடமிருந்து என்னே காப்பாற்று சாத்தான்!
தற்காலிகமாக உங்க கை எஃகினுலான தாகட்டும் மாஸ்டர்! இந்த ஏற்பாட்டினுல் எதிரியைவிட உங்க பலம் கூடுதலாகிடு மில்லையா!
அக்கணமே கர்கோவின் கைகள் உலோகமாக மாறிவிட்டன-
ஆவ்வ்-என் மணிக்கட்டு போச்சு!
கத்தாதே-என் கைகள் இப்போ உன் மென்னியிலே இல்லையே என்று சந்தோஷப்படு பஸ்லோ!


தொப்!
திரும்!
பஸ்ஸோ தோல்வியை ஒப்புக்கொண்டதும் கர்கோவின் கைகள் முன்போல் ஆயின-
க-கர்-கோ! நீ-நீதான் ஹீரோ! உன் கீழே பணிபுரிய கொடுத்து வச்சிருக்கணும்!
என் தலைமையில் யாருக்காச்சும் இன்னமும் வருத்தம் இருந்தால் பளிச்சென்று சொல்லலாம்!
வாயைத் திறக்க எங்களுக்கென்ன பைத்தியமா புடிச்சிருக்கு? சாத்தானின் சகாயம் இருக்கிற நம் கும்பலை வேறு எவராலும் மிஞ்ச முடியாது!
ஆமா-என் உத்தரவுகளை உடனுக்குடன் நிறைவேற்ற சாத்தான் இருக்கிற வரைக்கும் சமூக விரோத சக்திகளின் சக்கரவர்த்தியாக விளங்குவேன் நான்!
அதில் சந்தேகமென்ன மாஸ்டர்?



மறுநாள்· நகர் விஜயம் செய்திருந்த வெளிநாட்டு
மகாராஜா ஒருவருக்கு எடைக்கு எடை விலையுயர்ந்த
பொக்கிஷங்களை பரிசளிக்க அவ்வூர் பொதுமக்கள்
ஏற்பாடு செய்திருந்தனர்·காவலுக்கு
போலீஸ் சூழ்ந்து நின்றனர்·
மகாராஜாவுக்கு ரொம்ப
தாராளமாக மனசுன்னு
சொன்னாங்க·
ஆமா! அதனாலேதான் தனக்கு கிடைக்கிற இந்த
விலை மதிப்பற்ற பரிசுப் பொருட்களை அப்படியே
போலீஸாரின் நல நிதிக்கு நன்கொடையாக
வழங்க தீர்மானிச்சிருக்கார்!
அதோ·கார்லோ!
அவனுக்கு
உதவிய சாத்தானோடு
வர்றான்!
இங்கேயுள்ள பொக்கிஷங்களை
கொள்ளையடிக்கத்தான் வருகிறானே!
ஏய் போலீஸ்-இப்போதிருந்து நீங்க எங்க கட்சி.எங்களோட
மோசடியை தடுக்க யார் முயற்சி பண்ணினாலும் அவர்களை
நீங்க தடுத்து நிறுத்துறீங்க·
உப்ப்ப்!
ஆஹ!


நில்லுங்க! போலீஸ்காரங்களே சாத்தான் அடிமைளாக்கிட்டான்! இந்த அடாவடித்தனத்தை நாம் எதிர்த்தோம்னு போலீஸே நம்மை நாய்களே சுடறமாதிரி சுட்டுத் தள்ளிடுவாங்க!
இப்போ நீங்க எல்லோரும் கர்கோவுக்கு தலே வணங்கி மரியாதை செய்யறீங்க.
ஹே-சாத்தான்! எல்லோரும் வணங்குகிறாங்க அதோ அந்த ஒரு கெழவனே தவிர-அவனே யும் பணிந்து வணங்கச் சொல்!
ஏய் கெழவா- நீயும் தலே வணங்கு!


அந்தக் கிழவன் தன் மாறுவேடத்தைக் களைந்து தன் சுயரூபத்தை வெளிப் படுத்தினுன்.
ஹே-ஸ்பைடர்! இவன் மீது மட்டும் உன் ஆதிக்கம் செல்லுபடியாகவில்லையே ஏன்-சாத்தான்?
தெரியலே! ஆனு வீரியம் மிக்க எண்ணக் கதிர்வீச்சை பாய்ச்சி அவனெ ஒரேயடியா தீர்த்துக் கட்டத் தெரியும் எனக்கு!

ஆனு-இதுக்கும் ஸ்பைடர் பாதிக்கப்பட்டதா தெரியலியே?
குழப்புது! அணு அணுவா அவன் வெடித்துச் சிதறும இன்னமும் முழுசா நிக்கிருனே!


ஹ-ஹ-ஹ-! இனியும் உன் ஜம்பம் என்கிட்டே பலிக்காதுடா அரை வேக்காட்டுப் பயலே!
என்னமா கிண்ட லடிக்கிறான் உன்னே!
என் மாய சக்திகள் இவன் கிட்டே தோத்துப் போறது ஏன்னு குழம்பிக்கிட் டிருக்கேன்-
சரி-இதுவாவது பலிக்குதா பார்ப்போம்-ஏய்ய் ஸ்பைடர்- எங்களுக்கு பணிந்து கிடக்கும் போலீஸைப் போல் நீயும் அடிபணிந்து ஊழியம் செய்வாயாக-
அட-இந்த ஆணையும் பலிக்கலியே!
துக்கு வேற ஆளைப் பார்! நான் களைஞ்சு போட்ட மாறுவேட உடுப்புக்குள்ளேர்ந்து ஒரு பயங்கர 'ஆயுதத்தை' வெளியே எடுத்தப்புறம் என்ன நடக்குதுன்னு பார்-



சாத்தான் தன் மீது பீச்சிய எண்ண அலைக் கதிர்வீச்சை கர்கோ மீது திரும்புமாறு அந்தக் கண்ணாடியை திருப்பிப் பிடித்தான் ஸ்பைடர்-
உன் மீது பாயும் கதிர் வீச்சின் சக்தியால் கர்கோ நீ ஒரு அடிமையாவாயாக!
ஐயாா!




கெட்ட புத்தி கொண்ட உன் சகாவை தாக்கு!
ச-சரி- ஸ்பைடர்!





சட்டென்று சாத்தான் மீது பாய்ந்து தாக்கத் தொடங் கினான் கர்கோ-


தற்காலிகமாக நீ ஸ்பைடரோடு சேர்ந்து கொண்டதால் அவனிடமே போய்த் தொலே!
ஊஹூம் - நான் சேர்த்துக் கொள்வதாக இல்லே!
கர்கோவை கையில் ஏந்தி சாத்தான் பக்கமாக வீசினான் ஸ்பைடர்
உன் சாத்தானிடம் போய் சேர்.
ஆகா - கண்கொள்ளாக் காட்சி!
தடால்!



தப்பித்தோம்_பிழைத்-
-தோம் என்று ஓடுகி-
றான்கள் பயல்கள்!
இந்தச் சுற்றில்
ஸ்பைடருக்கு
வெற்றி!
மறுநாள்—
கம்ப்யூட்டர் மையத்தில் அபாய எச்சரிக்கை மணி ஒலித்தது-அதன் டயலில் சில மனித உருவங்கள் தோன்றலாயின-
இதுவரை நடக்காத பிரமாண்டமான அளவில் ஒரு கொள்ளே பொக்கிஷ பாதுகாப்பு சாலையில் நடக்கப் போகிறதா கம்ப்யூட்டர் சொல்லுது-போய் ஒரு ஹெலிகாரில் ஏறுங்க-
இதோ புறப்பட்டோம்-பாஸ்!
உங்க ஆற்றலும், மதியூகமும் எங்களே அசத்துது பாஸ்!
அதே சமயம் பொக்கிஷ பாதுகாப்பு சாலை கட்டிடத்தின் பின்பக்கம் கர்கோ கும்பல் சதித்திட்டம் தீட்டிக் கொண்டிருந்தது-
சாத்தானின் சகாயம் இருக்கிறது உன்னோட அதிர்ஷ்டம் கர்கோ-
நான்தான் சமர்த்தன்னு இவனுகளுக்கு காட்டணும்! உன்னோட மாஸ்டர்ங்கிற முறையிலே அடிமை உனக்கு ஆணையிட றேன் சாத்தான்—இந்த கொள்ளையை நானே தனியா சாதிக்கிற அளவுக்கு என்னே வல்லமை படைச்சவனுக்கிடு-
அப்படியே செய்கிறேன் மாஸ்டர்!



நீங்கள் ராட்சஸ உருவம் பெறுவதோடு சூரிய சக்தியும் உங்கள் ஆதிக்கத்தில் வருவதாக! விரும்பும் போதெல்லாம் நீங்கள் அந்த சக்தியைப் பிரயோகிக்கலாம்!
ஹா-ஹா ! சர்வ வல்லமை படைத்தவனாகி விட்டேன்-இந்தக் கொள்ளையை நானே தனியாக நடத்தி வெற்றி ஈட்டுவேன்! யாரும் — சாத்தான் உன்னையும் சேர்த்துத்தான்-இதில் மூக்கை நுழைக்கக்கூடாது!


ஹா-ஹா சூரிய சக்தியால் நான் வெளிப் படுத்தும் வெப்பம் தாளாமல் சுவர் சாம்பலாகி வழி விடுகிறது!
ஹே ஹெலிகார் இங்கே வருது!
அற்புதம்!


ஸ்பைடர் மீது எந்த தாக்குதலையும் நடத்தாதீங்க! மாஸ்டர் சொல்லிட்டுப் போனது ஞாபகம் இருக்கில்லே!
தன்னந்தனியா சாதிச்சு பேர் வாங்க நெனைக்கிறான் போலிருக்கு! நடக்கட்டும்!
கர்கோ தன் சூரிய சக்தியால் ஸ்பைடர் குழுவை சுலபமாக எரித்து சாம்பலாக்கிவிட முடியும்
ஓடி வாங்க என் பின்னாலே!
தன் ஆள்காட்டி விரலை நீட்டி அதன் வழியாக வெப்ப சக்தியை பீச்சினான் கர்கோ.
துப்பாக்கியை போடு கீழே!
ஆவ் சூடு தாங்கலை!
மேலிருந்து இரண்டு காவலர்கள் சுட முயன்றனர்!
அந்தப் பயலை தடுத்து நிறுத்தணும்!
டுமீல்
டுமீல்
அவனை உயிரோடு விட்டா மத்தவங்க உயிருக்கு ஆபத்து!



ஹா-ஹா சூரிய சக்தியால் வெப்பத் தடுப்பு ஒன்றை உருவாக்கிட்டேன்- இனி வரும் தோட்டாக்கள் தடுப்பை தொட்டதும் உருகி வழிஞ்சுடும்!
ராட்சஸன் மாதிரி- எவ்வோ உசரம்!
பார்க்கவே படு பயங்கர மாக இருக்கு!
பால்கனியை நோக்கி வெப்பக் கதிரலையை பீச்சினுன் கர்கோ-
நெனைச்சா நான் உங்களை நொடியிலே அழிச்சுடலாம், ஆனு நான் அப்படி செய்யலை-மரியாதையா ஒதுங்கிப் போயிடுங்க-
ஐயோ-தீப்பிழம்பு!
பிடி-ஓட்டம்!
கிட்டே ஒரு பய வந்துக்க முடியாது! ஹா-ஹா !


அரிய பொக்கிஷங்களை மீண்டும் அள்ளிக் குவிக்கத் தொடங்கினான் கர்கோ-
ஹா-ஹா-என்னைக் கண்டு எல்லோரும் பயந்து ஓடறாங்க-இனி அந்த விஷமத் தனமான சாத்தானின் சகாயம்கூட எனக்கு தேவையில்லை-சர்வ வல்லமை படைத்த என்னை மிஞ்சியவன் எவனுமில்லை!
எங்கிருந்தோ மின்னலெனப் பாய்ந்து வந்தான் ஸ்பைடர்!
சதக்
ஆ-ஆ-ஆ
பெயர்-ஸ்பைடர்! இப்படியொரு இடி முன்பே உன் தாடையில் பதிவாகி யிருப்பது மறந்து போச்சா?
எதிர்பாராத தாக்குதலால் கர்கோ பின்னோக்கி சரிந்த போது-
சுதாரித்துக்கொள்ள அவகாசமே தரக்கூடாது-சுயவுணர்விழந்து விட்டால் தன் புதிய ஆற்றலான சூரிய சக்தியை அவன் பிரயோகிக்க முடியாது-


மறுபடியும் ஓங்கி குத்துவிட ஸ்பைடர் நிமிர்ந்தபோது-
இன்னும் ஒரே ஒரு அடி போதும்!
ஆனால் அந்த அடி விழுவதற்குள் நான் எவ்வளவோ சாதிச்சுட முடியும்!


தன் பிரமாண்டமான வாயைத் திறந்து தீப்பிழம்பை உமிழ்ந்தான் கர்கோ-


பல்டியடித்து தீப்பிழம்பின் பாதையிலிருந்து விலகிக் கொண்டான் ஸ்பைடர்-
ஹேய்-மிஸ்டர் இன்னொரு பல்டி அடியேன்!
உஷ்ஷ்-சும்மா இரு- அவரோட நெலைமையே இப்போ பெரும் திண்டாட்டமா இருக்கு!


தன் வாயுத் துப்பாக்கியை உருவிமுடக்க வாயுவை பீச்சினுன் ஸ்பைடர்.
விளைவு-?
முடக்க வாயு தோற்றுவிட்டதே-தன் வாயிலிருந்து வெளிப்படும் தீப்பிழம்பினுல் அதையும் தீப்பற்றிக் கொள்ளச் செய்துவிட்டான்-வேறொரு யுக்தியைத்தான் கடைப் பிடிக்கணும்.


இப்போ உன்னை தீர்த்துக்கட்றது ரொம்ப சுலுவாயிட்டுது! இதோ!
சக்



ஆ... ஆ...
இந்தத் தண்ணீர் உன் கோபத்தை அணைச்சுடும்னு நமபறேன்!
ராய் ஆர்டினி ஒரு மந்தபுத்திக்காரன். ஆனுல் இந்த நெருக்கடியான கட்டத்தில் சமயோசித மாக ஒரு காரியம் பண்ணினுன. அருகே தென் பட்ட தீயணைப்பு வாளியை தூக்கி அதிலிருந்த நீரை கர்கோவின் முஞ்சியில ஊற்றினுன்-
இந்த எதிர்பாராத நாக்குதலால் நிலைகுலைந்து போனுன் கர்கோ-
சபாஸ்- ஆர்டினி!
கேட்டீர்களா - புரபஸர்! நானு இந்தக் காரியத்தை செய்தேன் என்ற பிரமிப்பு இன்னமும் நீங்கவில்லை எனக்கு!



எழுந்திரிங்க பாஸ்-நான் தூக்கிவிடறேன்-
அவசியமில்லை ஆர்டினி-நானுகவே எழுந்திரிச்சுக்க முடியும்!
எழுந்துகொண்ட ஸ்பைடர் ஆவேசமாக ஆர்டினியை பிடித்து தள்ளிவிட்டான்-
ஞாயமில்லை பாஸ்-உங்க உயிரை காப்பாத்தின என்னை நீங்க இப்படி-
உளறுதேடா முட்டாள்-
உன்னைத் தண்டிக்க நான் அப்படிச் செய்யவில்லை-அந்த சண்டாளன் பீச்சிய வெப்பக் கதிரின் பாதை யிலிருந்து உன்னை அப்புறப்படுத்தவே அப்படித் தள்ளினேன்!
என்னை மன்னிச் சுடுங்க பாஸ்!


ஆர்டினியே புத்திசாலித்தனமாக செயல்பட்டு ஸ்பைடரை காப்பாற்றியது புரபஸருக்கு ஒரு உத்வேகத்தை கொடுத்திருந்தது. சாதாரண மாக எந்த அடாவடியிலும் பங்கேற் காத புரபஸரும் இப்போது களத்தில் குதித்தார்-
உங்க ரெண்டு பேரோட உயிரும் ஆபத்திலிருக்கும்போது நான் மட்டும் சும்மா வேடிக்கை பார்த்-துக்கிட்டு நிற்கமுடியலே!
ஸ்ஸ்ஸ்ஸ்!
தூள்கிளப்பிட்டீங்க புரபஸர்-தீயணைப்பு குழாயை தக்க சமயத்தில் பிரயோகித்த உங்க சாமார்த்தியமே சாமார்த்தியம்!
தன்மீது நீரை பெல்ஹாம் பீச்சியடித்ததால் திணறிப்போன கர்கோ வெப்பத்தை பரப்பி அந்த நீரை நீராவியாக மாற்றினான்-
மூணு பேரையும் ஒட்டு மொத்தமா எறிச்சுடப் போறேன்-
பெல்ஹாம் குழாயை வேறுபக்கம் திருப்பிய சற்றைக்கெல்லாம் நீராவி மூட்டம் விலகியது-
ஸ்பைடர் எங்கே ஒளிஞ்சிருக் கானோ தெரியலியே!
இங்கே-மேலே இருக்கேன்டா!


குரல் கேட்டு திடுக்கிட்டுத் திரும்பிய கர்கோவை வலைத் துப்பாக்கியைப் பயன்படுத்தி கட்டிப் போட்டான் ஸ்பைடர்-
இனி நீ அசையக்கூட முடியாது கர்கோ
அப்படி நீ நினைச்சா உன்னை மிஞ்சிய அடிமடையன் எவனுமே இருக்க முடியாது ஸ்பைடர்-
அப்போது, சாத்தானும் மற்றவர் களும் அங்கே வந்து சேர்ந்தனர்-
கர்கோவை நாம் காப்பாற்ற வேண்டும் தோழர்களே!
கூடாது! யாரும் தலையிடக்கூடாது என்று மாஸ்டர் உத்தரவிட்டது மறந்து போச்சா? ஸ்பைடரோடு தான் தனியாக சண்டை யிடப் போவதாக சொன்னார் அல்லவா?
இழைகளால் பிணைக்கப்பட்ட கர்கோ சாத்தானை பார்த்ததும் உற்சாகமடைந்தான்-
ஹே-சாத்தான்! முடிஞ்சது என் கதைன்னு பயந்தே போயிட்டேன்! நீ வந்திட்டேல்லே! இனி எனக்கென்ன பயம்! -
ஆனா-நான் உங்களுக்கு உதவ முடியாத நிலை- மாஸ்டர்! இந்த விஷயத்திலே நான் உங்களுக்கு உதவக்கூடாதுன்னு உத்தரவு போட்டிருக்கீங்களே!


அடேய் மோசக்காரா இப்போ நான் உத்தர விடறேன். நான் அப்போது சொன்ன ஆணை யை மறந்துவிடு-என்னை இதிலிருந்துவிடுவி.
என்னை மன்னியுங்க-என்னை கட்டுப் படுத்தும் நியதிகள் அதை அனுமதிப்ப தில்லே-ஒரு உபாயம் சொல்வேன்-என்னை வழிநடத்தும் அதிகார தேவதை கள் ஒருவேளை உங்களுக்கு நான் உத விட அனுமதிக்கலாம்-என் பாதத்தை நீங்கள் முத்தமிடும் பட்சத்தில்!



பாதத்தை முத்தமிடுவதா? தேலி பண்றுன்?
குனிந்து முத்தமிட கர்கோ திண்டாடுறுன்-அவனை நான் தடுத்திடணும்.


ஆனால் ஸ்பைடர் நெருங்கு முன் அப்படியே வெட்டுண்ட மரம் போல் சரிந்து சாத்தானின் பாதத்தை முத்தமிட்டான் கர்கோ-
சாத்தான் என்னை காப்பாற்று!
சரி. இனி தடை ஏதும் இல்லை. முதலில் நான் ஸ்பைடரை கவனிச்சுட்டு வர்றேன்!
சட்டென்று தன் காலை அசாத்திய நீளத்திற்கு நீளவிட்டு ஸ்பைடரை சுற்றிக் கொள்ளச் செய்தான் சாத்தான்.
இப்போ மாட்டிக் கிட்டது நீதான் ஸ்பைடர்!
காலாலேயே ஸ்பைடரை சுழற்றி பின்னுக்கு எறிந்தான் சாத்தான்-
போய்த் தொலை!
என்னை இந்த வலை இழைகளிலிருந்து காப்பாற்று!


பாரேன்! சாத்தான் விரலை சொடுக்கியதும் அந்த வலிய இழைகள் பொடிப் பொடி யாக நொறுங்கி விழுவதை!
ஸ்பைடா குழுவினரை சுற்றி பயங்கர இடிமுழக்கத்தை எழச் செய்துவிட்டு, சாத்தான் மற்றவங்களோடு அங்கிருந்து அகன்ருன்-
டமார்!
தன் இரு கரங்களேயும் தேவையான அளவுக்கு நீளச் செய்து கர்கோவையும் அவனுடைய சகாக்களேயும் அதில் ஏற்றிக்கொண்டு பறந்தான் சாத்தான்-
இறுக பிடிச்சுக்கோங்க- நம்மோட இருப்பிடத் துக்கு திரும்பிடலாம்!
அபாரம்- சாத்தான்!
அற்புதம்!
கர்கோ கும்பல் அங்கிருந்து அகன்ற சற்றைக்கெல்லாம்-
ஸ்பைடர் நீ மட்டும் குறுக்கிட்டிராவிடில் இங்குள்ள அனைத்து பொக்கிஷங்களும் பறிபோயிருக்கும்!
ஆமா களவாணிப் பசங்க தப்பியோடிட்டானு களே! கர்கோவை மீண்டும் சிறையில் அடைக் காதவரை எனக்கு நிம்மதியே இராது- அத் தோடு. சட்டவிரோத கும்பலுக்கு துணேபோ கும் சாத்தானேயும் கூண்டில் ஏற்றியாகணும்!


பின்னர்-கர்கோ கும்பலின் உறைவிடத்தில்-
ஹா-ஹா-கர்கோ சாத்தானின் பாதங்களை முத்தமிட்ட பரிதாபக் காட்சி என்றைக்கும் என் நினைவை விட்டு அகலாது!
இதுக்குப் பிறகும் ஒருத்தன் உயிரை வச்சிக்கிட்டிருக்கணுமா-தூ!
திட்டமிட்டே என் சகாக்களின் முன் அப்படியொரு ஈனத்தனமான காரியத்தை நான் செய்ய வேண்டிய நெருக்கடியை ஏற்படுத்திட்டான் சாத்தான்-அவனை நான் சும்மா விடப்போவதில்லை!


அன்றிரவு-எல்லோரும் தூங்கிய பின் சாத்தானை நோக்கி கையில் கட்டாரியோடு நெருங்கினான் கர்கோ-
என்னை மானபங்கப்படுத்திய சாத்தானை பழிவாங்கப் போறேன்-இவனுடைய சகாயம் இனியும் எனக்குத் தேவையில்லை!


தொலை தூரத்தில்-தன் மறைவிடத்தில் துயின்று கொண்டிருந்த ஸ்பைடர் தன் உள்ளுணர்வு படமிட்டுக் காட்டிய காட்சியைக் கண்டு திடுக்கிட்டு விழித்துக் கொண்டான்-
என் மனத்திரையில் விரியும் காட்சி எப்போதுமே பொய்யாகப் போய்விடுவதில்லை-கர்கோ சாத்தானை கொல்ல முயற்சிக்கிறான்-கேடு கட்ட சாத்தானை நான் என் கையால் அழிக்கணும்-எனவே, கர்கோ


என்னை இழிவு படுத்திய உன்னை-



காகோ கத்தியை பாய்ச்சிய அதே
சாத்தான் விழித்துக்கொண்டது
அவனுடைய உடல்
ரொம்ப ஏமாற்ற மாயிட்டுதோ!
நீ நீ-தூங்கலியா? அட-கத்தி எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாம வெட்ட வெளியில் ஊடுருவுற மாதிரி இறங்கிட்டுதே!


அங்கே நடப்பதை தன் மனத்திரையில் பாத்துக் கொண்டிருந்தான் ஸ்பைடர்-வெகு தொலைவிலிருந்து-
நான் டெலபதி மூலம் அனுப்பிய எச்சரிக்கை சமிக்ஞைதான் உரிய நேரத்தில் சாத்தானை உசுப்பியது!
சாத்தானை இப்போ நான் காப்பாத்தியது அவனை என்னிக்காவது நானே என் கையால் கொல்லணும்கிற இலட்சியத்-துக்காகத்தான்
அங்கே-
ஏய்ய்-கிட்டே வராதே-சுட்டுப்புடு வேன்!
அந்த துப்பாக்கி என்னை ஒண்ணும் பண்ணிக்க முடியாதுடா முட்டாள்!


ஐயோ-தோட்டா அவனே வீழ்த்தலியே!
டுமீல்
டுமீல்!
நீ என் அடிமை·என் ஆணை களுக்கு கட்டுப்பட்டு நடக்க உத்தரவிடறேன்!
அதெல்லாம் முடிஞ்சுபோன கதை! எப்போ என்னை நீ தீர்த்துக்கட்ட முயற்சி பண்ணிட்டியோ அப்பவே அந்த பந்தம் அறுந்து போச்சு! இப்போ நான் என் இஷ்டப்படி என்ன வேணும்னாலும் செய்யலாம்-
பாம்பாக மாறக்கடவாய்! உன் மிச்ச நாட்களை இதே வடிவத்தில் வாழ இஷ்டம்தானே?
ஐயோ·வேண்டாம்- கொடுமை இது-வேறு எந்த உருவமும் தேவலை!


சரி-இந்த கங்காரு ருபம் எப்படி?
வே-வே-ண்-டாமே!
எ-என்னே-தொடாதே-போய்த் தொலே சனியனே!
இன்னமும் அதற்கு நேரம் வரலே! வா-என்னோடு!
டெலபதி மூலம் என்னே உரிய தருணத்தில் உசுப்பியது ஸ்பைடர்தான்னு அறிவேன். அந்த உதவிக்குகைம்மாருக நான் ஒரு காரியம் பண்ணப் போறேன்!
வான் வெளியில் அவர்கள் சேர்ந்து பறந்தனர்-


சாத்தானின் எண்ணவோட்ட சமிக்ஞையை பெற்ற ஸ்பைடர், விஷயம் என்ன என்ற தெரியாதபோதிலும் எதற்கும் தயாராக மாடியில் எதிர்பார்ப்போடு நின்று கொண்டிருந்தான்-
கர்கோவை பிடிக்கணும்னுதானே நீ என்னென்மோ பண்ணிக்கிட்டிருக்கிருய் இந்தா வச்சுக்கோ-என்னோட நன்றிப் பரிசாக!
அடப்பாவி-கர்கோவை கங்காருவாக மாற்றி விட்டாயா-என்ன!


இப்படியொரு விபரீதம் எனக்கு ஏற்பட நீதான் காரணம் ஸ்பைடர்-எனவே உன்னை-




ஆஜுல் கும்மென்று ஓங்கி ஒரு குத்து விட்டான் ஸ்பைடர்
சதக்!
கர்கோவை கொண்டு போய் ஜெயில்லே அடைக்கணும்கிறதென்னவோ என் இலட்சியம்தான்னாலும் அதுக்காக உன்னை மாதிரியான ஈனப் பிறவிகிட்டேர்ந்து 'அன்பளிப்பா' வாங்கிக் கொண்டு போற அளவுக்கு ஸ்பைடர் தரம் கெட்டவனில்லே-சாத்தான்! இந்தா நீயே வச்சுக்கோ!
ஏய்-என்ன இது
உன்னோட சாத்தானின் நெஜசொருபத்தை இப்பவாவது நீ புரிஞ்சிருப்பேன்னு நெனைக்கிறேன் கர்கோ. பொட்டுன்னு உயிரை விட்டுடாதே-என்னிக்காவது நான் உன்னை பிடிச்சு ஜெயில்லே போட்டு அடைக்கணும்!
நீயும் உன் இலட்சியமும்!


உன்னை எப்படி இழிவு படுத்தணும்னு எனக்குத் தெரியும் ஸ்பைடர்-வர்றேன்!
ஓடிப் போய் தன் ஹெலிகாப்டரில் ஏறி அவர்களை பின்தொடர்ந்தான் ஸ்பைடர்-
ஏதோ பொடி வச்சு பேசிட்டுப் போறான்-மறுபடியும கர்கோவை மனித உருவம் பெறச் செய்து விட்டான் சாத்தான்-அவனோட முயற்சி எதுவானாலும் முறியடிச்சே ஆகணும்!
கரிலுள்ள தலைமை காவல் லையத்தின் முன்-
கர்கோ-இது என்னோட ஹிப்னாட்டிஸ ஆணை-உன்னால் மீறவே முடியாது-கையில் துப்பாக்கியோடு உள்ளே பாய்ந்து எதிர் படும் போலீஸ் அதிகாரிகளை சுட்டுத்தள்ளு-தற்காப்புக்காக அவர்களும்தோட்டாக்களில் உடம்பை சல்லடையாக துளைக்கட்டும்-
உத்தரவு!



இதற்கிடையே ஸ்பைடரும் ஹெலிகாரில் அங்கே வந்தடைந்தான்-
கர்கோ போலீஸ் அதிகாரிகளை சுட்டுக் கொல்லுமுன் அந்த அக்கிரமத்தை நான் தடுக்கணும்-
உள்ளே பாய்ந்த ஸ்பைடர். அதே கணத்தில் கர்கோவின் துப்பாக்கியிலிருந்து சரமாரியாக வெளிப்பட்ட தோட்டாக்களின் பாதையில் குறுக்கிட்டதால் அத்தனை தோட்டாக்களும் ஸ்பைடரை தாக்கின-
ஆ-ஆ-ஆ
ஆனால்-தோட்டா பாயாத உடுப்பை ஸ்பைடர் அணிந்திருப்பானதலால் எவ்வித பாதிப்புக்கும் அவன் ஆளாகவில்லை-
உன் துப்பாக்கி இப்போ காலி! இனி நான் என் கைவரிசையை காட்டறேன் பார்!


அடேய் ஈனப்பிறவியே.சர்வ வல்லமை படைத்த ஸ்பைடரின் ஆற்றலுக்கு முன் நீ எம்மாத்திரம்!
ஸ்பைடர் மட்டும் சரியான சமயத்தில்வந்திராவிடில்!
பரலோக வாசலில் நின்றுபேசிக் கொண்டிருப்போம் இப்போது!


கர்கோவை பிடித்து போலீஸாரிடம் ஒப்படைத்துவிட்டு ஸ்பைடர் வெளியேறினன்-
கர்கோவை மறுபடியும் விலங்கு பூட்டி கல்லு உடைக்கும் இடத்துக்கு கொண்டு போங்க- நான் அடுத்து அந்த சண்டாளன் சாத்தானுக்கு ஒரு வழி பண்ணுகிறேன்-
ஏ-வாழைப் பழ தோலே! குப்பை தொட்டியில் இருந்து வெளியேறி ஸ்பைடரின் பாதையில் விழுந்து கிட-


மறு விருடி-
ஆ-ஆ-ஆ
அருமை! அரை டஜன் எலும்பாவது முறிந்திருக்கும!


தூக்குங்கள்-ஸ்பைடரை! உடனடியா ஆஸ்பத்திரிக்கு கொண்டு போவோம்! படு மோசமான விபத்து!
ஆ-ஆ-ஆ! போச்சு என் முதுகு! நல்ல அடி!
ஹீ ஹீ-! ஸ்பைடர் வழுக்கி விழற அற்புத காட்சி மாதிரியான வேடிக்கை நான் என்னோட இரண்டாயிரம் வருட அனுபவத்திலே ரசிச்சதே இல்லே-இனி இங்கே எனக்கு வேலே இல்லே-கர்கோவின் கும்பல் பதுங்கிக் கிடக்கும் இடத்துக்கு போகணும்-
அங்கே போய்ச் சேர்ந்ததும்-
கர்கோவை ஒழிச்சுக்கட்டியாச்சு-இனி உங்க கும்பலுக்கு நான்தான் தலேவன்-யாருக்காவது இதிலே சம்மதம் இல்லேன்னு பளிச்சுனு சொல்லலாம்-அவங்களுக்கு தங்களோட தாத்தா பாட்டியை நேருக்கு நேர் சந்திக்கிற வாய்ப்பு கிடைக்கச் செய்வேன்.
கர்கோ தொலேஞ்சதிலே சந்தோஷப்படாதவங்க இங்கே யாருமே இருக்கமாட்டாங்க-
உன்னே மாதிரி சர்வ வல்லமை படைச்ச நபர் தலேமையிலே இயங்கப் போற நம் ஈடு இணே-ஈரேழு லோகத்திலேயும் இருக்காது-
மறுநாள்-மீண்டும் கல்லுடைக்கும் தளத்தில் கைதியாக அல்லல் பட்டுக் கொண்டிருந்த கர்கோ வாடிக்கையான பத்து நிமிட இடைவேளேயின் போது, மறுபடியும் ஒரு பாட்டில் ஆற்றோட்டத்தில் மிதந்து வருவதை கண்டுபிடித்து கையில் எடுத்தான்-
இந்த பாட்டிலுக்குள்ளே சாத்தான் யாரும் இல்லே. ஆனு இந்த கடிதாசி மட்டும்தான் இருக்கு! ம்ம்-என்ன எழுதிருக்கு? "கர்கோ நீ நாசமாகப் போக!" இது அந்த சாத்தானின் எகத்தாளமாகத்தானிருக்கும்-அவனே அந்த பாட்டில்குள்ளேர்ந்து திறந்து விட்டிருக்கக்கூடாது-ஹூம்ம் இப்போ நொந்து என்ன ஆகப் போறது?



இதற்கிடையே மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வந்த ஸ்பைடர் வேகமாக குணமடைந்து வந்தான்.
துறுதுறுன்னு எதையாவது பண்ணிக் கிட்டேயிருக்கணும் எனக்கு. இப்படி படுத்துக் கிடக்கிறது போரடிக்குது.
அப்பாடா. ஒரு வழியா எனக்கு உற்சாகம் தர்ற சங்கதி உருவாகிட்ட மாதிரி தோணுது.
பென்னி என்ற அடிமட்ட போக்கிரி நைச் சியமாக வார்டுக்குள் நுழைந்தான்.
ஸ்பைடரை கொன்னது நான்தான்னு ஜனங்க தெரிஞ்சுக்கிறப்போ நான் ரொம்ப பிரபலமடைஞ்சிடுவேன். என் பேரு சரித்திரத்தில் இடம்பிடிக்கிற வாய்ப்புக்கூட இருக்கு.
அருகிலிருந்த டிராயரை காலால் ஓங்கி உதைத்துத் தள்ளினான் ஸ்பைடர்.
இவ்வளவுதானா உன் சாமர்த்தியம்! ஸ்பைடரை கிள்ளுக் கீரைன்னு நெனைச்சானுகளா? ஊர் பேர் தெரியாதவனுகள்லாம் வந்துட்டானுக ஸ்பைடரை ஒழிச்சுக்கட்ட!




பின்னர் ராய் ஆர்டினியும், புரபஸர் பெல்ஹாமும் ஸ்பைடரை பார்க்க வந்தனர்-
அந்த சாத்தான் கர்கோ கும்பலுக்கு தலைவனாகி ஏகப்பட்ட குளறுபடி பண்ணிக்கிட்டு அலையறான்-
நீங்க மட்டும் சான்று சொன்னா அந்த அயோக்கிய சிகாமணியை நானும் புரபஸரும் ஒரேயடியா ஒழிச்சுக் கட்டிடறோம்-பாஸ்!
மடார்!
தலைக் கனம் பிடிச்ச பொறுக்கிப் பசங்களா-சாத்தான்கிற எருமைக்கடாவை கொல்ற பெருமை எனக்குத்தான் வந்து சேரணும். ஒரேயடியா உங்களோட உறவை முறிக்கிறதுக்கு முன்னாடி எங்கேயாவது கண்காணாமல் ஓடிப் போயிடுங்க!
மறுநாளும் சாத்தானின் கும்பல் தன் கைவரிசையைக் காட்டியது-
ATLAS
டுமீல்!
டுமீல்!
அத்த சைத்தான் தன் மாய ஜால சக்தியை பயன்படுத்தி என்னோட சுரங்கத்திலிருந்து வெட்டியெடுக்கப்பட்ட தங்கத் தாதுக்களை பறந்து வந்து தன்னோட டிரக்கிலே விழுமாறு பண்றான்-காவலாளிகளே டயரில் சுடுங்க-


ஓம்-ரீம்-ஜிம்பா-என் மனசில் என்ன உருவத்தை நெனைக்கிறேனோ அந்த உருவமாக மாறட்டும் இந்த மலை-இக்கணமே!


அதே போல் ராட்சஸ ஸ்பைடர் வடிவமாக மாறிய- அந்த மலை-டிரக்கிற்கும், காவலாளிகளுக்கும் இடையில் சாய்ந்தது-தடையாக!
வாங்க-அவனுக வர்றதுக் குள்ளே தப்பி ஓடிப் போயிடலாம்!
உனக்கு நீயே நிகர்-சாத்தான்!



மருத்துவ மனையில்-
தன்னைக் காத்துக் கொள்ள ராட்சஸ ஸ்பைடர் சிலையை உருவாக்கி பலி கொடுத்தான்னு ஸ்பைடருக்கு தெருஞ்சுதோ கொதிச்சுப் போயிடுவான்.
என் கௌரவத்துக்கு பங்கமேற்படுத்திக் கொண்டு அலையும் அந்த சாக்கடை புழுவை நசுக்கிக் கொல்ல நான் இனியும் தாமதிக்கக்கூடாது
WARD 17

தன் உடுப்புகளை மாட்டிக் கொண்ட ஸ்பைடர் ஹெலிகாரை வரவழைத்து ஜன்னல் வழியாக வெளியே பறந்தான்-
ஸ்பைடர்! திரும்பி வா! நீ இன்னமும் பூரண குணமடையவில்லை! எதிரிகளோடு மோதுவதை அப்புறமா வச்சுக்கலாம்!
என்னோட உயிர் ஊசலாடும் நிலைமையிலே இருந்தாலும்கூட கடைசி முறையாக என் சக்தியனைத்தையும் ஒன்று திரட்டி அந்த சாத்தானின் மென்னியை முறிக்காம உயிரை விடமாட்டேன்!




அடேய் சாத்தான் நீ உலகத்தின் எந்த முலைக்கு ஓடினாலும் விடமாட்டேன்டா! துரத்தி வந்து உன்னை முறியடிப்பேன்டா!
உனக்கு தேடற சிரமத்தை வைக்காம நானே இதோ நேரில் வந்துவிட்டேன் ஸ்பைடர் உன்னை காத்துக் கொள்ள நீ தயாராகிக் கொள்!




ஹீஈஈ-யாயா! ஹெலிகாரின் பீரங்கி உனக்கு இப்போது மரனத்தை அறிமுகம் செய்து வைக்கப் போகிறது பார்!
லாவகமாக விலகி தப்பித்துக்கொண்ட நான் உன் பீரங்கி உமிழ்ந்த குண்டை இதோ-முள் உருண்டையாக மாற்றிவிட்டேன்!
டமால்!
திரும்பிப் போ! ஹா ஹா-முள் உருண்டை ஹெலிகாரை தூள்தூளாக்கிவிட்டது-
ஹெலிகாரிலிருந்து தூக்கி எறியப் பட்ட ஸ்பைடர் சுயவுணர்வற்ற நிலயில் தரையை நோக்கி விழுந்து கெண்டிருந்தான்.
அற்ப மானிட ஜென்மங் களுக்கு இது ஒரு படிப் பினையாக இருக்கட்டும்!
ஸ்பைடருக்கு மயக்கம் தெளிந்த போது-
ஐயோ-அந்த கோபுர உச்சியின்மீது போய் விழப் போகிறேன்-என்னை இனி அந்த ஆண் டவனுல்கூட காப்பாத்த முடியாது!


கண் மூடித்திறப்பதற்குள் அந்த கோபுரம் சட்டென்று ரப்பராக மாறியது-
படீர்!
கடைசி தருணத்தில் என்னை நீ காப் பாற்றியது ஏன்?
அகப்பட்டுக்கிட்ட சுண்டெலியை வச்சு பூனை விளையாடுமே அதுமாதிரித்தான்! உன்னை ஒரேயடியா கொன்னுட்டா சுவாரஸ்யம் போயிடும்-அதான்!
கொக்கரிக்காதே! வட்டியும் முதலுமாக பின்னால் கொட்டிக் கொடுக்கப் போகிறாய்!
துப்பாக்கியை உறையில் திரும்பப் போடு இது என் ஆணை!


மறு கணம்-
என்ன இது-எவ்வளவு முயன்றும் துப்பாக்கியை வெளியே எடுக்க முடியலியே-
அடுத்து-நீ அப்படியே மரத்துப் போவாயாக!
அந்த ஆணையும் அப்படியே நிறைவேறியதையடுத்து-
என் கும்பலில் நீயும் சேர்ந்து கொள்! மறுத்தால் உடனடி மரணம்தான்!
சேர மாட்டேன்!
அடுத்து என்ன நடக்கும் என்பதை உன் மனத்திரையில் ஓடவிடுகிறேன் அதைக் கண்ட பிறகாவது நீ ஒரு நல்ல முடிவுக்கு வந்தால் சரி-





நீயும் நானும் சேர்ந்து கொண்டால் இந்த உலகமே நம் காலடியில் அடி பணிய நாம் சக்கரவர்த்திகளாக திகழலாம்-
நீ என்னோடு சேர மறுத்தால் கல்லறை தோட்டத்தில் எங்கோ ஒரு மூலையில் புழுதி படிந்து விலாசமிழந்து அமுங்கிப் போவாய்
HERE LIES THE SPIDER SLAIN BY THE CRIME GENIE
இப்படியெல்லாம் என்னை அச்சுறுத்தி அடிபணிய வைத்திட முடியாதடா- உன்னால் ஆனதை பார்த்துக்கொள்!
அப்படியா! சரி முதலில் உன் உடல் முன் போல் இயங்கச் செய்கிறேன்


அடுத்து அந்த விமானத்தை அதன் போக்கிலிருந்து விலகி நேராக உன்னை குறி வைத்து வரச் செய்கிறேன்!
ஐயோ-என் கதை இப்படியா முடிய வேண்டும்!
விமானம் நெருங்கி வந்துவிட்டது.
ஆனால்.
அட-பொய்த் தோற்றம்! படு பாவி சைத்தான் என் முஞ்சியில் கரியை பூசி விட்டானே!
AIRLINE
ஹி-ஹி-ஹி-! உன் முஞ்சியிலே பாவிய அந்த மரண பீதி மற்றவங்களுக்கு காணக் கிடைக்காத அற்புத காட்சி!


விமானம் மீண்டும் திட வடிவம் பெற்றது
இந்த கிறுக்குத்தனத்திஞல் உனக்கு என்ன லாபம்!
உன்னை அலைக்கழித்து என் வழிக்கு கொண்டு வரும் முயற்சிதான்!
மறு கணம் இருவரும், ஒளியை மிஞ்சிய வேகத்தில் எங்கோ பறந்து சென்றனர்-இதுவும் சமாதானத்திற்கு திருவிளையாடல்தான்!
முடிவில் ஓர் எரிமலையின் வாய் அருகே-
என்ன சொல்கிருய்?என்னேடு கூட்டுச் சேர்ந்துகொள். இல்லையேல் குமுறும் எரிமலையில் அகப்பட்டு வெந்து சாவாய்!
நடக்காதுடா!
உனக்கு சேவகம் புரிவதை விட மரணமே மேல்!
ஆனுலும் உனக்கு இவ்வளவு திமிர் கூடாது!


எரிமலையை சாத்தான் கொதித்து எழச் செய்த அதே கணத்தில்-
ஹே! என்னைச் சுற்றி ஒரு கோளம்-உருவாகிறதே! இது என்னைக் காப்பாற்றப் போகிறதா-அல்லது-
கோளம் மறையட்டும்! உன் மனத் திண்மையை அழிப்பது நான் நினைச்சதைவிட சற்று கடினமாகத்தான் இருக்கு, ஆனால் எப்படியும் நான் உன்னை என் வழிக்கு கொண்டு வந்துவிடுவேன்!
கடைசி வரை உனக்கு தோல்வி தான்-புரிஞ்சுக்கோ!
மறுகணம்-
அட-என் ஜெட் அமைப்பு வேலை செய்யலியே!
அதை செயலிழக்கச் செஞ்சது நான்தான்! அது மீண்டும் வேலை செய்யத் தொடங்கு முன் எல்லாமே முடிஞ்சி போயிருக்கும்! இப்பவாவது ஒரு நல்ல முடிவுக்கு வா-இல்லையேல் அந்த விலங்குகள் உனக்கு எமனாகிவிடும்-


அதுதான் அப்போதே சொன்னேனே-உனக்கு ஊழியம் செய்வதைவிட மரணமே மேல்னு.என்னுடைய பல்நோக்கு துப்பாக்கியை நீ மறந்துட்டே! அதிலிருந்து மயக்க வாயுவை பீச்சி என்னை நான் காப்பாற்றிக் கொள்ள முடியும்!


ஹீ ஹீ-உனக்கு பிடரியில் கண் இல்லாமல் போன துரதிஷ்டம், பின்னாலிருந்து வந்த கொரில்லாவை பார்க்கத் தவறிவிட்டாய்! சம்மதம் என்று ஒருவார்த்தை சொல்-உன்னை காப்பாற்றுகிறேன்!


நான் மரணத்திற்கு அஞ்சியவனல்ல மானமே பெரிதென்று நினைக்கிறவன்!
கர்ர்ர்ர்-
சரி! சாகத் தயாராகிவிட்ட உன்னை இனி நான் காப்பாற்றப் போவதில்லை!


அப்போது-குகையினுள்ளிருந்து தேவதை போல் வெளிப்பட் டாள் ஓர் ஆரணங்கு-
அந்த மனிதனை விடு!


ராணி லாஜுவின் ஆணை இது!
ஓ! எனக்கு இன்னொரு எதிரியா? ஏ-பெண்ணே வீணாக என் கோ பத்தை சம்பாதித்துக் கொள்ளாதே!


பொறு! நீ இந்த பாவ பூமியின் அரசி அல்லவா! என்னைப் போலவே நீயும் சிரஞ்சீவி என்ற போதிலும் ஸ்பைடரை என் பிடியிலிருந்து காப்பாற்ற நீ நினைத்தால் அதற்காக பின்னுடி வருந்த நேரிடும்!
என் பூமிக்கு வந்து என்னையே எச்சரிக்கும் மூடனே-நீ என்ன செய்துவிட முடியும் என்னை?


இதோ-காட்டுகிறேன்!ஏ-காலாக்கினியே இவனை எரித்து விடு!
ஹ-ஹ் ஹ-ஹ்-ஹா! உன் கையாலாகாத்தனம் புரிஞ்சுதா சாத்தானே! மரியாதையாக ஓடிப் போய்விடு! என் கறுப்பு நீலிகளை ஏவிவிட்டேனேயானால் அழிவற்ற உனக்கே முடிவு ஏற்பட்டு விடலாம்!
சரி-நான் போகிறேன்!இப்படியொரு பாவ பூமியில் உழலுமாறு ஸ்பைடரை விட்டுச் செல்வதும் சரியான தண்டனைதான்!
ஸ்பைடர் வா-என்னோடு! அரசி லானுவோடு இருண்ட குகைக்குள் வர அஞ்சி நின்று விடுவாயா இங்கேயே?


நான் எதைக் கண்டும் அஞ்சுபவனில்லை! ஆனால் உன் ஆணைக்கு கட்டுப்பட்டு உன்னை நான் பின்தொடர்வேன் என்று எப்படி நீ எதிர்பார்க்க முடியும்? என் ஜெட் அமைப்பு பழுதுபட்டிருப்பதால் உடனே பறந்து போக முடியவில்லை!
அவள் மீது படிந்த என் பார்வையை ஏனோ விலக்கவே முடியவில்லை!
என் அழகில் மயங்காத மானிடனே இல்லை! நீ எவ்வளவு பிரயத்தனப்பட்டாலும் இந்த பிரதேசத்தை விட்டு வெளியேறவே இயலாது-புரிஞ்சிக்கோ!
வா-ஸ்பைடர்! காலம் காலமாக நாம் இங்கே ஆடிப் பாடி உல்லாசமாக வாழலாம்!
ஆகட்டும்-ராணி!
என் வலையில் விழுந்துவிட்டான் ஸ்பைடர்! என் சூனிய சக்திதான் எத்தனை வலியது!



என் சூனிய சக்தியால் இவ னுடைய அறிவை மயங்கச் செய்துவிட்டேன்-
ஹிப்னுட்டிஸத்தினுல் கட்டுண்ட ஸ்பை டர் அவள் இஷ்ட்ப்படியே நடந்தான்-
நீ எப்போதும் என் அருகிலேயே இருக்கணும்-சம்மதம்னு சொல்-ஸ்பைடர்!
உங்கள் இஷ்ட்ம் -என் பாக்கியம் ராணி!
பார்த்தாயா உற்சாகம் தரும் கேளிக்கை நிகழ்ச்சியை! அடிமைகள் ராட்சஸ ஜந்துக்களோடு மோதும் அற்புத காட்சி!
இந்த காட்டுமிராண்டித்தனமான கொடுமை எனக்குள் ஏதோ ஒரு உணர்ச்சியை பீறிட்டெழச் செய்கிறது!


அந்தக் கொடுமையை உடனே நிறுத்தச் சொல் ராணி. இல்லையேல் நான் தடுத்து நிறுத்த வேண்டி வரும்-
இவனை கொன்று விடட்டுமா-ராணி?
எனக்கு பிரியமான வர் இவர்! விலகி அப்பால் போ!
சண்டை சம பல எதிரி களுக்கிடையே நடப் பதுதான் முறை!
ஆட்டத்தின் சுவாரஸ்யத்துக்கு பங்கம் வர்ற மாதிரி ஸ்பைடர் குறுக்கே புகுந்தது என்னை குழப்புது-இதுவரை எந்த மானிடனும் என் இஷ்டத் துக்கு விரோதமாக எதுவுமே பண்ணியதில்லை!
ஊ ஊ
கும்!


பட்!
வேறு மூன்று கொரில்லாக்கள் ஒட்டு மொத்தமாக வருகின்றன-யாராலும் வெல்லவே முடியாது!
ஆனால் ஸ்பைடரின் ஆற்றல் ஈடிணையற்றது.ஸ்பைடரின் வெற்றியில் எனக்கு எள்ளளவும் சந்தேகமில்லை!
டஜன் கணக்கில்! ஓ-வரட்டுமே!



வலைத் துப்பாக்கியை பிரயோகித்து அத்தனை கொரில்லாக்களையும் கட்டிப் போட்டான் ஸ்பைடர்-
இதிலிருந்து விடுபட நீங்க மேற்கொள்ளும் முயற்சி பலனளிப்பதற்குள் உங்க ஆயுசு முடிஞ்சு போயிடும்!
இதோ-திரும்ப வந்துவிட்டேன்-ராணி-என் மீது கோபமா? படுகொலை நடப்பதை பார்த்துக்கொண்டு சும்மா இருக்க முடியலே-அதான்!
இம்மாதிரி வீர புருஷர் எனக்கு துணைவராக வாய்த்தால் இந்தப் பூமியே பெருமையடையும்!
இவளை விட்டு ஓடிப் போயிடணும்-ஆனாலும் ஏதோ ஒரு சக்தி என்னை இவளிடம் ஈர்த்து நிறுத்தி வைக்கிறது-என்ன மாயமோ?


என் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் ஸ்பைடரை எப்படியாவது வசப் படுத்தி கணவராக்கிக் கொள்வேன்!
இதற்கிடையே அங்கே-சாத்தான்-
ஹா ஹா-ஹா-என் மாயாஜால மதிமயக்க வித்தையால் சுயபுத்தி யிழந்த செல்வந்தர்கள் தங்களுடைய பொக்கிஷங்களை அள்ளிக் கொண்டு வந்து அதற்கென நான் விஷேசமாக தயாரித்த உண்டியலுக்குள் போட்டு செல்கிறார்கள்-என் ஒரே எதிரி ஸ்பைடர் அங்கே பாவ பூமியில் உழன்று கொண்டிருப்பதால் இங்கே என்னை தட்டிக் கேட்க நாதியற்றுப் போய்விட்டது!


வெகு தொலைவிலிருந்த தங்கள் உறைவிடத்திலிருந்தவாறு அங்கே நடக்கும் அசம்பாவி தத்தை மானிட்டரில் பார்த்துக் கொண்டிருந்தார்கள் புரபஸரும் ஆர்டினியும்-
ஹாஸ்பிட்டலிலிருந்து பாஸ்,மாயமா மறைஞ்சுட்டார்னு சொல்றுங்க. அந்த தீவட்டித் தடியன் சாத்தான்தான் அவரை கடத்திக் கிட்டு போயிருக்கணும்!
அப்படித்தான் தோணுது! பால் இப்போ எங்கே இருக் காரோ? இப்போ சாத்தானின் அட்டூழியத்தை நாம தான் எப்படியாச்சும் முறியடிக்கணும்!
ஆனா எப்படி அது முடியும்? நாம அவனோட பார்வையிலேபட்ட உடனே அவனோட ஆணைக்கு நம்மை கட்டுப்பட வச்சிடுவானே-அப்புறம்!
இந்த ஹெல்மெட்டை புதுசா பண்ணி யிருக்கேன்-இதை மாட்டிக்கிட்டா நம்மை எவரும் வசப்படுத்த முடியாது!
அதையடுத்து-
ஓ-ஸ்பைடரின் சகாக்களா? ஸ்பைடராலே முடியாததை இவனுக சாதிக்க நெனைக்கிறார்களா? ஏ-ஸ்பைடரின் சகாக்களே போங்கள்! அப்படியே வந்த வழியே திரும்பிப் போங்கள்!


ஹெலிகாரின் பீரங்கி குண்டை வீசுகிறது-
அவர்கள் மாட்டிக் கொண்டிருக்கும் ஹெல்
மெட் அவர்களை என் வசிய சக்தியில்
இருந்து காப்பாற்றுகிறது போலும்!
டும்!
பறந்து வந்து குண்டை பாய்ந்து
பற்றினன் சாத்தான்-
இதெல்லாம் எனக்கு கடுகு
மாதிரிடோய்!
பாருங்க-அப்பளமாதிரி எப்படி
இதை நொறுக்குகிறேன்னு!




இதற்கிடையே-பாவ பூமியில்-
இந்த மானிட்டரிலே அங்கே வெளியுலகத் திலே என்ன நடக்குதுன்னு பார்க்கலாம்- போரடிக்காம இருக்கும்!
லானாவின் ஹிப்னாட்டிஸ மயக்கத்திலிருந்த ஸ்பைடருக்கு வெளியுலகில் நடக்கும் சம்பவங்களை டி.வி. திரையில் பார்த்ததும் சற்று தெளிவு ஏற்படலாயிற்று-
ஹா-ஹா-சாத்தான் அங்கே ஏகப்பட்ட குழப்பத்தை உண்டு பண்ணிக்கிட்டிருக் கான்-வழிப்பறிக் கொள்ளை, பாங்க் கொள்ளை, திருட்டுன்னு கோடிகோடியா வாரிக் குவிக்கிறான்!
அந்த விண்வெளி வாகனத் தை எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கே!
தன் ஆற்றலால் ஹெலிகாரை அசுர கதியில் சுற்றிச் சுற்றி வருமாறு பணித்தான் சாத்தான்-
வேகமாக-இன்னும் வேகமாக போகட்டும்! இந்த வேகத்தில் காற்றோடு ஏற்படும் உராய்வினால் ஹெலிகார் பழுக்கக் காய்ச்சிய இரும்பு போலாகிடும்!



தன் சகாக்கள் அபாயத்தில் இருப்பதை கண்டவுடன் ஹிப்னுட்டிஸ மயக்கம் முழுவதுமாக விலகி விட்டது. அவனுடைய ஜெட் அமைப்பை முடக்கிப் போட்டிருந்த சாத்தானின் சாபமும் விலகிவிட்டது. ஆகவே-
புரபஸரும், ஆர்டினியும் ஆபத்தில் சிக்கித் தவிக்கிறார்கள். நான் போய் அவர்களை காப்பாற்றணும்!
திரும்ப வந்துவிடு ஸ்பைடர்-இல்லையேல் என் வீரர்கள் கதிர் வீச்சு துப்பாக்கியால் உன்னை சுட்டு வீழ்த்தி விடுவார்கள்!
என் சகாக்களை நான் காப்பாற்ற வேண்டும். கால தேவன்கூட என்னை தடுத்து நிறுத்த முடியாது!
சுடவேண்டாம்! ஸ்பைடர் செல்லட்டும்!


தன் சகாக்கள் மீது அவன் வைத்திருக்கும் அபிமானத்தின் தீவிரம் என் ஹிப்னட்டிஸ சக்தியைக்கூட முறியடித்து விட்டது- அவனுடைய் மனிதாபிமானம் போற்றப்பட வேண்டியதொன்று!
இப்படிப்பட்ட உன்னத புருஷனுக்கு அந்த பூதத்தோடு மோதுவ தற்கு மாயா ஜாலத் துணை நிச்சயம் தேவைப் படும்! ஸ்பைடர் - சாத்தானோடு மோதும்போது மட்டும் உனக்கு மாந்த்ரீக சக்திகள் வந்து விடும்! இது ஞான் உனக்குக் கொடுக்கும் அன்பளிப்பு!


சாப பூமியிலிருந்து வெளிப்பாய்ந்து வெளி வுலகினுள் பிரவேசித்தான் ஸ்பைடர்-
என் ஜெட் அமைப்பில் சிறு மாற்றம் செய்தால் சூப்பர் வேகத்தில் நான் இலக்கை சென்றடைந்துவிட முடியும்!


சற்றைக்கெல்லாம்
இனியும் உன் நச்சு விஷமம் செல்லுபடியாகாது சாத்தான்-
ஹெலிகார் சூடேறி வருகுது- இன்னும் சற்று நேரத்தில்- ஹேஹே-ஏஏஏ-


சர்..ர்.ர்..ர்.ர்
ஆ-ஆ-ஆ!
அட-ஹெலிகார் நிதானமாக கீழிறங்கி வருகுது-இங்குள்ள ஜனங்களும் சாத்தானிட்ட மயக்கத்திலிருந்து தெளிந்துவிட்டதாகத் தோணுது!
வாங்க! இந்த சண்டாளன் மறுபடியும் நம்மை எல்லாம் அற்ப புழுக்களாக அடிமைப்படுத்தறதுக்கு முன்னாடி தீர்த்துக்கட்டிப்பிடலாம்!
அடி!
குத்து!
விடாதே!
வெட்டு!




ஆனால் ராட்சஸ பலம் கொண்ட சாத்தான் தன்மீது வந்து குவிந்த ஜனத்திரளை அலட்சியமாக உதறித் தள்ளிவிட்டு விலகி ஓடி வந்தான்-
உன்னிடம் உடல்பலம் நிறைய இருக்கலாம் சாத்தான். ஆனால் வல்லவன் ஸ்பைடரின் முன் நீ அற்பப் புழு!
நீ எப்போது சாப பூமியிலிருந்து தப்பி வந்தாய்! மறுபடியும் உன்னை அங்கே இப்போதே அனுப்பி வைத்தால்தான் உன் வாய்க்கொழுப்பு அடங்கும்!
அருகில் கிடந்த ஒரு சங்கிலியை எடுத்து மின்னல் வேகத்தில் ஸ்பைடரை கட்டிப் போட்டான் சாத்தான்-
ஹீ ஹீ ஹீ- அடுத்து என்ன நடக்கப் போகிறதென்று நினைக்கும்போது சிரிப்பு பொத்துக்கிட்டு வருது எனக்கு-
உண்டியல் வாகனத்தை ஓட்டிவரும் டிரைவரே, நேராக ஸ்பைடரை நோக்கி வேகமாக ஓட்டி வா!
எப்படியும் ஸ்பைடரை காப்பாற்றியே தீருவோம்!
இந்த அநியாயத்தை அனுமதிக்க மாட்டோம்!


ஆனால் அந்த புதிரான , வாகனத்திலிருந்து - பீரியடித்த சூறைக் காற்று ஸ்பைடரின் உதவிக்கு வந்தவர்களை அப்பால் தள்ளியது-
ஹா-ஹா-ஹா-! யாரும் இனி ஸ்பைடரை காப்பாற்ற முடியாது! நான் இதுவரை சேகரித்த கொள்ளைப் பொருட்களை சுமந்து வரும் இந்த வாகனம் ஸ்பைடரை அற்ப கொசுவைப்போல் நசுக்கி கொல்லப் போகிறது!
ஆனால்-
உன்னைக் குழப்பும் கேள்விக்கு விடை எனக்குத் தெரியும்!
ஙே-என்பிடியிலிருந்து நழுவியோட ஸ்பைடருக்கு துணை செய்யும் சக்தி எதுன்னு புரியலியே!
மறுகணம் மேலே-
வாங்க பாஸ்-சீக்கிரம் ஏறிக் கொள்ளுங்க!
ஆர்டினி-உன் தேவாங்கு மூஞ்சிகூட இந்தக் கணத்தில் பாக்க அழகா இருக்குடா!


அப்படியே நில்லுங்க- ஒரு நொடியிலே அவிழ்த்து எறிஞ்சுடறேன் இந்தச் சங்கிலியை-
ஹெலிகாரிலிருந்தமின்-காந்தஅலையை பாய்ச்சி சங்கிலியால் பிணைக்கப்பட்டு என்னை மேலே ஈர்த்த உன் புத்திசாலித் தனத்தை மெச்சுகிறேன் பெல்ஹாம்-
நன்றி-பாஸ்!
கணத்திற்கு கணம் மாறும் குண இயல் புடைய ஸ்பைடர் மறுகணமே வெடித்தான்-
ஏய்-கிழட்டு எருமை-விலகிப்போ அப்பால்-அந்த மின்காந்த அலைகளை மீண்டும் பிரயோகிச்சு ஒரு காரியம் பண்ணனும்!
பாராட்டுக்கள் வசவுகள்! இடையே முழுசாக ஒரு நொடிகூட கழியலை! இப்படியொரு குரங்குப் புத்திக்காரனோடு எப்படித்தான் காலம் தள்ளப் போறேனோ?
ஹா-ஹா-மின் காந்த அலைகள் சாத்தானின் வாகனத்தை கவிழ்த்துவிட்டது-பொக்கிஷங் -கள் அனைத்தும் சாலையில் சிதறுகின்றன-


இப்போ சுவிட்சை மாற்றிப் போட்டு அலைகள் எதிர் திசையில் இயக்கம் பெறச் செய்கிறேன்·வாகனம் பின்னுக்குச் சென்று அவனை நசுக்கப் போகிறது-
நான் பொறுமையிழந்துட்டேன் ஸ்பைடர்·இனியும் உன் கோணங்கித்தனத்தை சகிச்சுக்கிட்டு இருக்கப்போவதில்லை நான்-வேடிக்கை, விளையாட்டெல்லாம் விட்டொழிச்சுட்டு இம்முறை ஒரேயடியா உன்னை தீர்த்துக்கட்டப் போறேன்!
ஹெலிகாரில்-
சாத்தான் எமன் மாதிரி! பாலோட கதை இப்போ முடியப் போகுது! அடுத்து நாமும் பலியாகப் போறோம்!
புலம்பாதே-ஆர்டினி! இதுமாதிரியான நெருக்கடிகளை நாம் எத்தனை பார்த்திருக்கோம்-இதுவரை!


மறு கணம்-
ஸ்பைடருக்கும் சாத்தானுக்கு மிடையே இப்போ ஜீவமரணப் போராட்டம் ஆரம்பிக்குது-
அழியப் போறது நீதான்!
ஸ்பைடரின் ஜெட் அமைப்பை பற்றி இழுத்தான் சாத்தான்.
இது இல்லேன்னு உன்னுலே பறக்க முடியா தில்லையா?போய் தரையில் விழப்போறே! ஒரு எலும்புகூட மிஞ்சாது!




ஆளுல்-ஸ்பைடர் தரையை தொடுமுன் அவனுடைய உடல் திடீரென்று காற்றடைத்த பலூனைப் போல் உப்பியது-
மந்திர ராணி கொடுத்திருந்த மாயா ஜால சக்திகள் வேலை செய்யத் தொடங்கின!
அட-தரையில் ஓங்கி அடிச்ச ரப்பர் பந்தாட்டம் ஜிவ்வினு மறுபடியும் மேலே போய் விட்டானே!
சாத்தானின் மூஞ்சி போற போக்கைப் பாறேன்!
விளங்கிக்க முடியாத புதிரா இருக்கே!
மறுகணம்
ஏ-அற்ப சிலந்தியே-ராட்சஸ வடிவம் பெற்று அந்த அகம் பாவியை கொல்வாயாக!



ஸ்பைடரை கொல்ல. இன்னொரு ஸ்பைடரா-முன்பு பலமுறை தோற்றுப்போன யுக்தி ஆயிற்றே இது!
ஸ்பைடர் உயிர் போராட்டத்தில் திணறிக் கொண்டிருக்கையில் எனக்கு வேறொரு வேலே இருக்கு!
ஸ்பைடர் தரையில் விழுந்தபோது அவன் தந்திரமாக தப்பித்துக்கொண்டதை பார்த்து என்னே நோக்கி கேலிச் சிரிப்பு சிரித்த உங் களே இப்போது என்ன செய்யறேன் பாருங்க-
ஸ்பைடர் காப்பாற்று!
இந்த சதைப் பிண்டத்தை ஆற்றுக்குள் கடாசிவிட்டு இதோ ஓடி வர்றேன்!


சாத்தானுக்கும் குழுமியிருந்த ஜனங்களுக்குமிடையே வலைத் துப்பாக்கியை பயன்படுத்தி ஒரு தடையை உண்டுபண்ணினான் ஸ்பைடர்.
இதை தகர்த்துக் கொண்டு முன்னேற முடியலியே!
திடீரென்று தன்னிடம் மந்திர சக்திகள் வந்து சேர்ந்திருப்பது கண்டு ஸ்பைடரே ஒரு கணம் திகைத்துப் போயிருந்தான். ஆனால் நடந்திருப்பதை யூகிப்பதற்கு அவனுக்கு அதிக நேரம் ஆகவில்லை. பூதம் வலையில் சிக்கியிருந்த வேளையில் ஒரு மானசீகக் கட்டளை விடுத்தான்...!
வா-வா- என்னிடம்!
மறுகணம்-
சாத்தானை ஸ்பைடர் எட்டிப் பிடித்ததும் அவன் குள்ளனாக சுருங்கிப் போனான்-
பாட்டிலுக்குள் முன்போல் அடைஞ்சு கிட-
வேண்டாம்-ஐயோ- விட்டுடு என்னை!



அடுத்து ஸ்பைடரின் உள்ளங்கை தீட்டினுல் சிவக்க அந்த வெப்பத்தைக் கொண்டு பாட்டிலே சீலிட்டான்-
இந்தாங்க-கர்கோ வெளியேற்றிய சனியனை மறுபடியும் முன்போல் பாட்டிலுக்குள்ளே போட்டு அடைச்சுட்டேன்-
ஆச்சரியமா இருக்கே-இம்மா திரி விந்தையான சக்திகள்லாம் முன்னே உங்கிட்டே கிடையாதே-இப்போ மட்டும் எப்படி-


தற்காலிகமாக சனிதான் கிட்டேர்ந்து இரவலா பெற்ற சக்திகள் என்றுதான் வைத்துக் கொள்ளுங்களேன்!



## புள்ளிகள்.... இணையுங்கள்!






இந்தக் கதைக்கு ''ஐம்பதிலும் ஆசை வரும்'' என்று கூட பெயர் வைக்கலாம்!



இந்த டார்லிங்.. கீர்லிங் வேலை எல்லாம் என்கிட்டே வேண்டாம்... புரிந்ததா?
வந்து.. வந்து..
என் மூஞ்சிக்கு எதிரே புகை பிடிக்கிறதை நிறுத்து.. என்னுடைய குரல் வளம் கெட்டுப் போய்விடும்...
அதே சமயம் வெளியே -
ஆகா... நீண்ட கால இடைவெளிக்குப் பின் மீண்டும் என் கனவுக் கன்னியை காணப் போகிறேன்!
இந்த சந்திப்பு பழைய இனிய நாட்களின் ஞாபகார்த்தமாகத் தானே அன்றி விட்டதை புதுப்பிக்கும் நோக்கத்தில் அல்ல!
தன்னைத் தானே எச் சரித்துக் கொண்டான் டெஸ்மாண்ட்
ஆனால்.. பெண்மை அதிரடியாக நேரில் தரிசனமாகும் போது மன உறுதி கட்டு விட்டுத்தான் போய் விடுகிறது
ஐயோ... என் நெஞ்சு என்னமாய் அடித்துக் கொள்கிறது..! டிரம்மின் ஒலியையும் மிஞ்சிவிடும் போலிருக்கிறதே!



தாங்க் யூ...! தாங்க் யூ!
அவளுடைய கவர்ச்சி கொஞ்சம் கூட குறையக் காணோம்
பிரமாதம்....! படு சூப்பர்!
நிகழ்ச்சி முடிந்தது
அவளோடு நான் பேசப் போவ தில்லை... ஆனால் இன்றொரு முறை அவ்ளை பார்த்து விட்டு போவதால் ஒன்றும் கெட்டு விடாது!
தூள் கிளப்பிட்டீங்க மிஸ் ஜூலி!
உங்க ஆட்டோகிராப் வேண்டும்... ப்ளீஸ்!
எல்லாம் உங்க ஆதரவினாலேதான்!
எதுவுமே மாற வில்லை..! அந் நாளையு 'இனிய அனுபவங்கள் என் மனத்திஸ்ரயில் பளிச்சிடுகின்றன..
நெஞ்சம் மறப் பதில்லை... அது- நினைவை இழப்ப தில்லை...


தொடர்ந்த நாட்களில் நடனத்தைக் கண்டு களிக்க டெஸ்மாண்ட் தவறாமல் ஆஜரானான்!
முன் வரிசையில் இருக்கிற வழுக்கைத் தலை ஆசாமி தான் ரோஜாவை தூக்கி எறிந்தார் என்று நினைக்கிறேன். புரிந்து கொண்டு விட்டதாக அவருக்கு ஜாடை காட்ட...
... ரோஜா மலரை குறி வைத்து வீசினாள் ஜுலி..
அந்நாளில் செய்தது போலவே ரோஜாவை என்னை நோக்கி எறிந்து விட்டாள்...! இனி- இக்கணமே உயிர் பிரிவதானாலும் சந்தோஷமாகவே சாவேன்!
ஹ்ம்ம்... இதை இனியதொரு கனவாக எண்ணிக் கொண்டு விடை பெறுகிறேன்.. ஜுலி! உன்னை நேசிக்க எனக்கு தகுதி கிடையாது!
ம்ம்... அந்த ஆள்கிட்டே கைவரிசையை காட்டலாம்!
மேடை நுழை வாசல் கதவருகே கனவான் தோற்றத்தில் ஒரு நபர் - கையில் ரோஜாவோடு - நிற்க வில்லை என்றா சொல்கிறாய்...? அதெப்படி -
அவர் மாயாவியாக நின்றிருந்தால்தான் உண்டு.எப்படியும் ரோஜா என் பார்வை யில் பட்டிருக்குமே!
இனியும் நான் தாமதிக்கக் கூடாது
ஊப்ப....!
ஹேய்....!


பார்த்து வரக் கூடாதா...?
ஸாரி.... ஏதோ ஞாபகமா வந்து விட்டேன்..!
முழுக்க தற்செய லான ஒரு சந்திப்பு அல்ல அது!
இருவரும் எதையோ -நினைவுக்குக் கொண்டு வர முயன்றார்கள்
பிங்கி...! அடேய் திருட்டு ராஸ்கல் - நீ தானா?
டெஸ்மாண்ட்! அடேய் திருட்டு ராஸ்கல் - நீ தானா?
இருவரும் அந்நாளைய நண்பர்கள்....
இவ்வளவு காலத்திற் குப் பிறகு உன்னை மறுபடியும் சந்திப் பேன் என்று நான் கொஞ்சமும் எதிர் பார்க்கவே இல்லை!
பிங்கி..! நம் இந்த மறு சந்திப்பை சிறப்பாக கொண்டாடுவோம்.. வா!
பொறு! என் குற்றத்தை முதலில் ஒப்புக் கொள்ளாமல் நான் இதை பருக முடியாது!
இந்தா உன் பர்ஸ்...! உன்மீது இடித்துக் கொண்டபோது நான் அபேஸ் பண்ணியது
உன்னுடையதை நானும் திருப்பிக் கொடுத்து விடுவது தான் நியாயம்... இந்தா!



அடேயப்பா!என்ன லாவகம் என்னையே டபாய்ச்சுட்டியே!
தன்னிச்சையாக நடந்துவிட்டது.. பிங்கி! நீ எப்படி இங்கே நியூயார்க்கில்?
ஜுலி போகிற இடத்துக்கெல்லாம் அவள் பின்னாலேயே போகிறேன்... நல்ல கூட்டம் வருகிறது... எனக்கு தொழில் லேசாகி விடுகிறது.. நீயும் வாயேன்.. சீக்கிரமே பணக்காரனாகி விடலாம்!
என்னைத் தூண்டாதே பிங்க்கி! ரொம்ப காலமாய் திருந்தி வாழ்கின்ற என்னை பணம் சேர்க்கும் வெறி சமீபத்தில் பற்றியிருக்கிறது! இந்நேரத்தில் நீ வேறு ஏதாவது சொல்லி வைத்து என்னைக் குழப்பாதே!
அந்தக் காலத்தில் ஜுலி என்றால் உனக்கு ரொம்ப உயிராச்சே... அதற்குதான் இன் றைக்கு இங்கே வந்தாயா டெஸ்மாண்ட்?
அப்படியெல்லாம் இல்லை...!
உன்னுடைய பர்ஸ் ரொம்ப இளைத்துப் போயிருக்கிறது... வசதியை பெருக்கிக் கொள்ள நீ ஏன் என்னோடு சேர்ந்து கொள்ளக் கூடாது....
பட்லர்கள் கிளப்புக்கு போன டெஸ்மாண்ட் ஏனோ இன்னமும் திரும்பக் காணோம்... மாற்றுச் சாவி அவனிடம் இருப்பதால் கவலைப்படாமல் நான் தூங்கச் செல்லலாம்.


கடந்த பல வருடங்களாக யோக்கிய மானவனாக வாழ்ந்து கொண்டிருக்கிறேன் பிங்கி... திடீரென்று திசைமாறி மீண்டும் தப்பான காரியத்தில் ஈடுபட ஏனோ மனம் சம்மதிக்க மாட்டேன் என்கிறது!
ஜூலி அன்போடு உன்னை அரவணைத்துக் கொள்ளும் காட்சியை கற்பனை செய்து பார் டெஸ்மாண்ட்.
அவளுக்கு நகைகள் மீது கொள்ளை ஆசை என்று உனக்குத் தெரியும்! ஒரு வைர நெக்லெஸ் போதும்... அவளை உன் அணைப் பிற்குள் கொண்டு வந்துவிட!
பிங்கி' பேசிக் கொண்டே போனான்!
மனிதனின் மனம் தான் ஒரு குரங்காயிற்றே!
ஆலோசனை பண்ணுகிறேன்... பிங்கி.. ஆலோசனை பண்ணுகிறேன்..
நகைக் கடையில் அவர்களுக்கே தெரியாது எவ்வளவு பெறுமானமுள்ள நகைகள் அங்கே
இருக்கிறது என்று... நாம் ஒன்றிரண்டை கிளப்பிக் கொண்டு வருவதால் ஒன்றும் குறைந்து போய் விடாது!
நம்மோட நெக்லெஸ் மாற்றம் செய்யும் யுத்தி எப்போதுமே பலிக்காமல் போனதில்லை!
போலி நகை தயாரிப்பதில் என்னை மிஞ்சிய கில்லாடி எவனும் இல்லை.... எந்த நகை வேண்டு மானாலும் உனக்காக நான் செய்து தரத் தயார்...
ஒரே ஒரு தடவை! அது பெரிய தப்பாகி விடாது! சரி - நான் தீர்மானித்து விட்டேன்!
இப்போதுதான் நீ சமத்து - டெஸ்மாண்ட்!
ஒரு கிழட்டு வேதாளம் முறுங்கை மரத்தில் ஏற ஏணியைத் தயார் செய்து விட்டது!


திட்டத்தை சொல்கிறேன் - கேள்! மிஸ்டர் கெர்பி கிட்டே நகை கடை பூதக்
கண்ணாடி மாதிரியான தோற்றத்தில் ஒரு மினி கேமரா இருக்கிறது!
ம்ம் - மேலே சொல்!
ஒரு சொகுசுக் காரையும், டிரைவர் உடுப்பையும் வாடகைக்கு எடுத்துக் கொள்வோம்... காரை நீ ஓட்டி
வந்து என்னை டிப்பியர்ஸில் இறக்கி விட்டால் போதும்.. போலி தயாரிக்க அவசியப்படும் தேவைகளை நான் கொண்டு வந்து விடுவேன்!
சபாஷ்! இலண்டனை கலக்கிய அந்நாளைய டெஸ்மாண்டை இப்போது எதிரில் பார்க்கிறேன்!
சரி... நாளை சந்திப்போம்!
அன்று பிற்பகல் -
என் தொழில் திறமைக்கு இது ஒரு பிசாத்து வேலை! மாஸ்டரோட கேமராவை நைஸா கிளப்பிக்கிட்டுப் போய் பிங்கியை சந்திக்கணும்!
ஸார்.... அவரச வேலை ஏதும் இல்லை என்றால் கொஞ்சம் வெளியே போயிட்டு வரலாம்னு நினைக்கிறேன்
தாராளமாக போய் வா!
இவனுடைய போக்கு சற்று வித்தியாசமாக இருக்கிறது... பின் தொடர்ந்து சென்று ஆராய வேண்டும்!



இப்படி டெஸ்மாண்டை வேவு பார்ப்பது முறையான சங்கதி இல்லைதான்.... ஆனால் என் சந்தேக புத்தி இதை தவிர்க்க முடியாமல் பண்ணி விட்டது....
மாஸ்டரிடமே நாடகமாட சங்கடமாகத்தான் இருக்கிறது! என்ன செய்ய...? ஜூலியின் அரவணைப்புககு மனம் ஏங்குகிறதே!
அடப்பாவி...! ஒரு சொகுசுக் காரில் ஏறுகிறானே! ஏதோ வித்தியாசமாக நடக்கத்தான் போகிறது!
கார் அட்டகாசமாக இருக்கிறது பிங்கி... எங்கே வாடகைக்கு எடுத்தாய்?
வாடகையா....? இல்லை - இரவல் வாங்கி வந்திருக் கிறேன்! காரின் சொந்தக்காரனிடம் சொல்லிக் கொள்ளத்தான் வாய்ப்பில்லாமல் போய்விட்டது!
கேமரா ரெடி....! டிப்பியர்ஸுக்கு விடு!
ஆக.... டெஸ்மாண்ட் இரட்டை வேடம் போடுகிறானா? விவகாரம் என்ன வென்று தீர்க்க மாக தெரிந்து கொண்டு விட வேண்டும்!
டாக்ஸி...!


கடைக்காரர்களின் பார்வையில் படுகிற மாதிரி காரை கொண்டு போய் திறுத்து! அவர்கள் அசந்து போகணும்!
சரி... டெஸ்மாண்ட்!
டெஸ்மாண்டின் திட்டத்தின் முதல் பகுதி அரங்கேறுகிறது!
விபரீத ஆசை உந்தித் தள்ள தப்பான பாதையில் போய்க் கொண்டிருந்தான் டெஸ்மாண்ட்.
Tiffier
JEWELLERY
இது நகரிலேயே பிரபலமான வைரக் கடை ஆயிற்றே? இங்கே டெஸ்மாண்டுக்கு என்ன வேலை இருக்க முடியும்?
TIFFIER
அந்தக் காரின் பதிவு எண்ணை குறித்துக் கொண்டு பின்னர் விபரம் சேகரிக்க வேண்டும்
கைக் கடைக்குள்
யாரோ பெரும் செல்வந்தர் போலிருக்கிறது! கவனி....!
விட்டு விடுவேனா...? வரட்டும்...!
தங்கள் வரவினால் டிப்பியர்ஸ் பெருமை அடைகிறது.. ஸார்! நான் - ஜாக்விஸ் - தங்கள் உத்தரவுக்காக காத்திருக்கிறேன்
மகிழ்ச்சி....!

ல.4.


மிஸ்டர் Z என்று மட்டும் என்னை நீ தெரிந்து கொண்டால் போதுமானது ஜாக்விஸ்! உங்கள் நாட்டுக்கு நான் வந்திருப்பது... ஒரு சில உயர் மட்ட அதிகாரிகள் மட்டுமே அறிந்த இரகசியம்!
இந்த மாதிரியான வாடிக்கையாளர் களுக்கு டிப்பியர்ஸ் எப்போதுமே உரிய முறையில் சேவை செய்யும் ஸார்....
இருப்பவைகளில் விலையுயர்ந்த சில வற்றை எனக்குக் காட்டு ஜாக்விஸ்...!
ஓ... அவற்றை நாங்கள் வைத்திருப்பதே உங்களைப் போன்ற வாடிக்கையாளர் களுக்காகத்தானே?
இந்த 30,000 டாலர் பெறுமானமுள்ள பிரேஸ்லெட்டி லிருந்து ஆரம்பிப்போமா?
ப்பூ.... 30,000 டாலரா? இம்மாதிரி சில்லறை அயிட்டங்களே வேண்டாம்...! பார்த்த மாத்திரத்தில் நெஞ்சைத் தொடுகிற மாதிரி அட்டகாச மாக ஏதாவது இருந்தால் எடு!
இதோ... எடுத்து வருகிறேன் ஸார்...!
கண்ணைப் பறிக்கும் நவரத்தினங்கள் டெஸ்மாண்டின் முன்னே பரப்பப்பட்டன.
மறைவிலிருந்தவாறு நடப்பதை குழப்பத் தோடு கவனித்துக் கொண்டிருந்தார் ரிப்.
கம்பெனி ஷேக் என்று டெஸ்மாண்ட் நினைத்துக்கொண்டு இருக்கிறானா?


இதை பாருங்க ஸார்... அத்தனையும் சுத்தமான வைரங்கள்! விலை - 2,00,000 டாலர்கள் தான்!
மம்... இது - பரவாயில்லை!
கற்களில் குறை ஏதுமில்லை என்பதை நான் முதலில் உறுதி செய்து கொள்ள வேண்டும்...
மினி கேமரா ஓசையின்றி படம் எடுத்தது
டெஸ்மாண்டைப் பற்றி கடை ஆளுக்கு கொஞ்சமும் சந்தேகம் வரவில்லை...
சுத்தமானவைதான் என்று தெரிந்து கொண்டீர்கள் அல்லவா... ஸார்?
சுத்தமானவை தான்...! மிஸஸ்ஸோட சம்மதத்தை கேட்டுக் கொண்டு பின்னர் வருகிறேன்.
டெஸ்மாண்டின் கையில் இருப்பது என்னுடைய ஸ்பெஷல் கேமரா...
IERS
EWELRY


அந்த நெக்லெஸை எதற்காகவோ படம் பிடித்துக் கொண்டு வருகிறான்... நான் தலைமறைவாகி விட வேண்டும்...
நான் திரும்பி வரும் வரை இந்த நெக்லெஸ் இங்கேயே இருக்கட்டும் ஜாகுவிஸ்..
வைத்திருக்கிறேன்... மிஸ்டர் Z!
பிங்கி... வண்டியை கிளப்பு!
யாரும் கண்டு பிடிக்கிறதுக்கு முன் இதை கை கழுவி விடவேண்டும்!
நெக்லெஸின் படத்தை பிரிண்ட் போட்டுத் தருகிறேன் பிங்கி - நீ ஒரு போலி தயாரிக்க வசதியாக!
ஓ. கே... டெஸ்மாண்ட்...! இந்தக் காரை இங்கே நிறுத்தி விட்டுப் போய்விடுவோமா?
சேச்சே..! கேட்டு வாங்கா விட்டாலும் இரவல் இரவல்தான் பெட்ரோலை நிரப்பி காரை சுத்தமாக துடைத்துவிட்டுத் தான் போக வேண்டும்.
உன்னுடைய நியாயம் எனக்குப் புரியவேயில்லை டெஸ்மாண்ட்... இந்தவேலை அவசியம்தானா!
பேசாமல் வேலையைப் பார் - திருட்டிலும் ஒரு ஒழுங்கு இருக்க வேண்டும்!


போலீஸாரின் பார்வையில் சுலபமாக படுகிறமாதிரியான இடத்தில் நிறுத்தியாயிற்று.... இனி நாம் போகலாம்
நல்ல ஆளப்பா... நீ
அதே சமயம், காரின் நம்பரை வைத்து விசாரணையைப் நடத்திக் கொண்டிருந்தார் கிர்பி.
என்ன...? அந்த எண்ணுள்ள கார் சில மணிநேரத்திற்கு முன் திருட்டு போய்விட்டதா... இன்ஸ்பெக்டர்?
என்னடி ராக்கம்மா.... பல்லாக்கு நெளிப்பு என் நெஞ்சம் குலுங்குதடி...
அங்கே.. ஏகப்பட்ட கும்மாளும் போலிருக்கு?
ஆமாம் ஸார்.... ஆர்ட் மியூஸியம் படு ஜோர் ஸார்...
லேசாக கோடி காட்டி பயலை மிரட்டி வைப்பது நல்லது!
நியூஸ் பேப்பரிலும் சில பரபரப்பான செய்திகள் வந்திருக்கிறது டெஸ்மாண்ட்
நகைத் திருடன் ஒருவனுக்கு 40 ஆண்டு கடுங்காவல் தண்டனை கிடைத்த விபரத்தை விலாவாரியாக போட்டு இருக்கிறார்கள்
நே...!


நெஞ்சம் குறுகுறுக்கிறதோ?
நீ ஏன் பதறுகிறாய் டெஸ்மாண்ட்? நகைத் திருடனுக்கு 40 வருடம் என்பது குறைச்சல்தான்!
ஆமா.... மா குறைச்சல்தான்!
அவன் எப்படியும் தொலையட்டும் எனக்கு சமையல் வேலை நிறைய காத்திருக்கிறது.
ஓ...ஜூலி..! இந்த அவஸ்தை எல்லாம் உன் பொருட்டுத் தான்!
சாப்பிட்டாயிற்றா ஸார்?
ஓ... படு பிரமாதம்! வெளியே கொஞ்சம் வேலை இருக்கிறது.. கிளம்புகிறேன்!
போய்விட்டார் ...! அவருடைய 'இருட்டு அறை'யில் படத்தை பிரிண்ட் போட வசதியாகி விட்டது!
படம் ... படு சூப்பராக வந்திருக்கிறது!



இதை வைத்து பிங்கி தத்ருபமாக ஒரு போலி நெக்லெஸை தயாரித்து விட முடியும்!
இந்தா பிங்கி.... படம்! எத்தனை நாளில் போலி தயாரிந்து முடிப்பாய்?
இரண்டு நாள் போதும் எனக்கு..! ஜூலி அதுவரை நிச்சயம் காத்திருப்பாள்..!
இன்றைக்கு ஏன் ரொம்ப கவலையோடு காணப்படுகிறீர்கள் ரிப்?
டெஸ்மாண்ட் ஏதோ ஒரு விஷமத் தனத்தில் இறங்கி இருக்கிறான்...! செய்வதறியாது குழம்பியிருக்கிறேன் நான்!.
பார்க்கில் போய், வழக்கமாக வரும் அணில்களுக்கு 'ஹலோ' சொல்லி விட்டு வரலாம் என்று நினைக்கிறேன்
போய் வா... டெஸ்மாண்ட்!
நன்றாக பொய் பேச கற்றுக்கொண்டு விட்டாய்!
ஓரிரு தினங்களுக்கப் பின் -
பிங்கி... - ரெடியா?
ஓ... - இதோ!
அடடே அச்சாக அதே மாதிரி இருக்கிறதே!



நீ சமர்த்த ன்டா... பிங்கி! கொஞ்சம் கூட சந்தேகம் வராது அவர்களுக்கு!
ஜமாய்... போ!
நான் திருடும் நகைகளில் சில போலியாக இருந்து விடுவது உண்டு... அவற்றின் கற்களை இம்மாதிரி வேலைக்கு பயன்படுத்தி வருகிறேன்.
இம்முறை எனக்கு கார் தேவைப் படாது...
நீ வெற்றி பெற வாழ்த்துக்கள்!
நேரே அங்கேதான் போகிறேன்!
ஜாக்கிரதை டெஸ்மாண்ட்!
ஒருவேளை நீ மாட்டிக்கிட்டா கட்டாயம் ஜெயில்லே வந்து பார்ப்பேன்... வலைப்படாமல் போ!
"குழந்தையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டுவது" என்பது இதுதானோ?!
கார் இம்முறை ஓர் இடைஞ்சல்... சும்மா வாக்கிங் வந்த இடத்தில் உள்ளே நுழைந்த மாதிரி சொல்லிக் கொள்ளலாம்!



நகைக் கடையை வந்தடைந்தான் டெஸ்மாண்ட்
கோழைகளுக்கு காதல் தேறாது... நான் தைரியமாக நடந்து கொள்ள வேண்டும்...
Tif
JEW
வாங்க ஸார்... வாங்க... உங்களைத் தான் தினமும் ஆவலோடு
எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்... அந்த நெக்லெஸை எடுத்து வரலா?
எடுத்து வாயேன்!
பாருங்க ஸார் - என்னமாய் ஜொலிக் குதுன்னு!
அந்த பெட்டியில் இருந்து கழற்றி எடுப்பா!
நைச்சியமாக செயல் பட்டான் டெஸ்மாண்ட்
இதோ... எடுத்து தருகிறேன் ஸார்!
எடை ரொம்ப அதிகமோ?
சூரிய வெளிச்சத்திலே வைத்து கற்களை ஒரு நோட்டம் விடுகிறேன்...!
மென்மையான கழுத்திலே வேதனை தருமோ?


ஒரிஜினல் வைரம் ஸார் அத்தனையும்!
எதற்கும் ஒரு பார்வை பார்க்கலாமே என்றுதான் -
அட்டகாசமாக இருக்கிறது...! மிஸஸ் Z என்னை கட்டிப் பிடித்து முத்தம் கொடுக்கத் தவறமாட்டாள்...
அசலை பைக்குள் போட்டுக் கொண்டு போலியை வெளியில் எடுத்தான் டெஸ்மாண்ட்...
இதை வாங்கிக் கொள்கிறேன் ாகுவிஸ்... ஆனால் ஒரு விஷயம்
.. சொல்லுங்க ஸார்...!
செக் கொடுத்தால் நான் யார் என்று வெளியில் தெரிந்து விடும்.. எனவே கிரயத்தை ரொக்கமாக நீங்கள் வாங்கிக் கொள்ள வேண்டும்
ரொக்கமா?



2, 00, 000 டாலர்.... அத்தோடு விற்பனை வரி வேறே! மொத்தத்தையும் ரொக்கமாகவா தரப் போறீங்க
ஆமா...! ஆமா...! ஆமா...!
உங்கள் இஷ்டம் ஸார்... !
சரி ... இப்போ இந்த நெக்லெஸை மறுபடியும் உள்ளே எடுத்து வை...
பணத்தோடு வருகிறேன் -துணைக்கு ஒரு செக்யூரிட்டியோடு!
அசலும் போலியும் இடம் மாறிக் கொண்டன
உங்களுக்காகவே இதை வைத்திருப் பேன் ... ஸார்!
ரொம்ப நீ காத்திருக்க தேவையிராது... கொஞ்ச நேரத்திலே வந்து விடுவேன்!
அவனுக்கு சந்தேகம் வருவதற்கு முன் ஓடிப்போய் விட வேண்டும் - இங்கிருந்து!
நான் எதிர்பார்த்தது தான் டெஸ்மாண்ட் இன்றைக்கும் இங்கே வருவான் என்று
ரிப் கவனித்துக் கொண்டிருந்தார்



நடையில் - தடுமாற்றம்.. முகத்தில் ஒரு பரபரப்பு...! என்ன வகையான போக்கிரித்தனமோ?
சூழ்ச்சி வெற்றி..! ஆனாலும் ஏனோ இப்படி வியர்த்துக் கொட்டுகிறதே!
அதற்குள் கடையில் -
மோசடி....! ஐயோ.... ஏமாற்றப்பட்டு விட்டோம்..!
ஜாகுவிஸ்.. என்ன விஷயம்?
இந்த நெக்லெஸை பாருங்கள்.... - போலி! நம்மை ஏமாற்றி விட்டான்!
போலிஸ்...! உதவி..!
போலீஸின் உதவியை கோரி கூச்சல் போடுகிறார்கள்...
நான் பயந்த மாதிரியே ஏதோ விபரீதம் நடந்து விட்டிருக்கிறது


இங்கே கணமும் தாமதிக்கக் கூடாது.. ஏய் டாக்ஸி!
மறு நிமிடமே டெஸ்மாண்ட் அங்கில்லை!
என்ன விவகாரம் இங்கே?
இது... இது - போலி ஸார்! அயோக்கியன் ஒருவன் அசலை கிளப்பிக் கொண்டு போய்விட்டான்
டெஸ்மாண்டா இதைச் செய்தான்? ஏன்...? அவனுக்கு புத்தி பேதலித்து விட்டதா என்ன?
2,00,000 டாலர்கள் பெறுமானமுள்ள வைர நெக்லெஸ் போச்சு... ஸார்!
சரி... ஒரு ரிப்போர்ட் கொடுங்கள்.. தலைமையகத்தில் பதிவேட்டில் அவனைப் பற்றிய குறிப்பு இருக்கிறதா என்று ஆராய்வோம்!
என் விசிட்டிங் கார்டு...! நான் ஒரு பிரைவேட் டிடெக்டிவ்! உங்களோடு ஒரு நிமிஷம் தனியாக பேச விரும்புகிறேன்!
ஓ....! கிடைக்கிற உதவி அனைத்துமே எனக்கு இப்போது தேவைதான்!
ஓகோ... குட்டையாக, ஒல்லியாக இருந்தானாக்கும்.. பெயர் என்ன சொன்னான் - மிஸ்டர் Z ஆ?
கோடீஸ்வரன் என்று அளந்தான்... முட்டாள் நான் - சந்தேகிக்கவே இல்லை!



அவனை நீங்கள் கண்டு பிடித்துவிட முடியுமா.... மிஸ்டர் கெர்பி?
என்னாலான முயற்சியை செய்கிறேன் ஜாகுவிஸ், எதற்கும் போலீஸிலும் புகார் கொடுத்து வையுங்கள்
டெஸ்மாண்ட்தான்! ஆனால் - எதற்காக இதை செய்தான்? இது சாதாரண குற்றமல்ல..! அடிப்படையை தோண்டி துருவி தெரிந்து கொள்ள வேண்டும்.
இதோ... கைக்கு வந்து விட்டது.. ஆனால் ஏனோ ஜூலி முன்போல் அத்தனை கவர்ச்சியாக நெஞ்சை தொடக்காணோம்.
இப்படி ஒரு காரியத்தை நான் செய்திருக்கவே கூடாதோ -
அடைந்த வெற்றி டெஸ்மாண்டுக்கு மகிழ்ச்சியை தரவில்லை...
ஆனாலும் -
உங்களை மறந்து விடுவேனா என்ன....? ஓய்வாக உங்களோடு விருந்து உண்ண ஆவலோடு காத்திருக்கிறேன்..
...அப்புறமாக தியேட்டரில் உன்னை சந்திக்கிறேன் ஜூலி...
அடுத்த கட்டத்திற்கு தாவினான் டெஸ்மாண்ட்.
அவனை கண் காணிக்க வேண்டும்... தன்னையறியாமல் ஏதேதோ தப்புகள் செய்து கொண்டு போகிறான்...


நீண்ட இடை வேளைக்குப் பின் மறுபடியும் நட்பை புதுப்பித்துக் கொள்ள துடிக்கிறார்... என்ன சாகஸம் பண்ணி என் மனத்தை வசியப்படுத்துகிறார் என்று பார்ப்போம்..!
விபரீதத்துக்கு தேதி வைத்தாயிற்று!
இன்றைக்கு ஐந்தாவது அவென்யூவில் ஏகப்பட்ட கலாட்டா டெஸ்மாண்ட்!
அப்படி என்ன ஸார் நடந்தது அங்கே?
ஒரு பயங்கர நகை மோசடி...! யாரோ ஒரு மிஸ்டர் Z ஐ கண்டுபிடிக்கச் சொல்லி என்னை அமர்த்தி இருக்கிறார்கள்!
ம்ம்..... கைதேர்ந்த ஜக ஜால புரட்டனாக இருப்பான் போலிருக்கிறது!
அ.... அ...ப்படியா -ஸார்!
வைரங்களை திருடும் பெரும் கும்பலுக்கு தலைவனாக இருப்பானோ என்றொரு நினைப்பு!
அ...அ..வன் எப்படி இருப்பான் என்று தகவல் ஏதாவது உண்டா ஸார்...?
ஓ...! தெளிவான அடையாளங்கள் உண்டு...! வெகு சீக்கிரமே பிடித்து விடுவேன்!


40 ஆண்டு கடுங்காவல் தண்டனை நிச்சயம் உண்டு.
அவ்வளவு நீண்ட ஆயுள் அவனுக்கு இருக்க வேண்டுமே?
பாவம்...! அவனையும் மிஞ்சிய ஒரு நெருக்கடியான சூழ்நிலை இப்படியொரு தவறை செய்யத் தூண்டியிருக்குமோ என்னவோ!
எனக்கு சமையல் அறையில் நிறைய வேலை இருக்கு..
அவன் போக்கி லேயே போய்த்தான் உண்மையை தெரிந்து கொள்ள வேண்டும்...
ஸார்.... இன்றைக்கும் கொஞ்சம் வெளியிலே வேலை இருக்கிறது!
ஓ.. தாராளமாக போய் வா... நானும் வெளியில் போகிற உத்தேசத்தோடுதான் இருக்கிறேன்!
நீ போனால் நானும் உன்னோடு வர வேண்டுமே!
அதே டிரைவர்... ஆனால் வண்டிதான் வேறு! பின் தொடர நான் ரெடி!
ஒகோ... இதுதான் விஷயமா? பல வருடங்களுக்கு முன் டெஸ்மாண்ட் இந்த ஜுலியைப் பற்றித் தான் புலம்பிக் கொண்டிருப்பான்!


மறுபடியும் இவளுடைய மோகம் பயலை அலைகழிக்கிறது போலும்...! நெக்லெஸ் இவளுக்காகத்தான் இருக்கும். அது சரி இவளுடைய முசுடுத்தனம் அவனுக்கு தெரியாதோ?
அதோ.... முன் வரிசையில் உட் கார்ந்திருக்கிறான்! இன்றிரவு அவனை தனியே சந்தித்து நெக்லெஸை பரிசளிக்கக் கூடும்!
ஓ... பாடு குயிலே பாடு! இன்னும் சற்று நேரத்தில் நீ என்னருகே என்று நினைக்கையில் மனம் என்னமாய் படபடக்கிறது தெரியுமா!
இந்த தியேட்டர் நிர்வாகிகளை எனக்குத்தெரியும் என்பதோடு போதிய அவகாசமும் இருக்கிறது...! அவள் எப்படிப் பட்டவள் என்று டெஸ்மாண்ட்க்கு புரிய வைக்க சில யுக்திகளை செய்யப் போகிறேன்.
அதைத் தொடர்ந்து
ஆமாம் அவளுடைய 'முந்தானை'யை நீ மிதித்தால் உனக்கு 50 டாலர் தருவேன்...
100 டாலர் கொடுத்தால் சந்தோஷமாக அவள் பிடரியில் நான் மிதிக்கத் தயார் - பெண்ணா அவள் ராட்சஸி!
பவுடர் டப்பாவை அப்படியே தரையில் கவிழ்த்து வீணாக்க வேண்டும்... அதற்குத்தான் இந்தப் பணம்
அவளுக்கு கோபமூட்ட வேண்டும் -அவ்வளவு தானே?


நிகழ்ச்சி முடியப போகிறது .. என் கணிப்பு சரியாக இருக்குமேயானால் ஜூலியை தேடி பயல் இங்கே மேடைக்கு பின்பக்கம் வருவான்.... இங்கே நின்றால் என்ன நடக்கிறது என்று கண்காணிக்க வசதியாக இருக்கும்!
அபாரம் .. தூள்.. தூள்...
டெஸ்மாண்ட்தான் நான்.... ஜூலி என்னை எதிர் பார்த்துக் கொண்டிருப்பாள்!
ஆமாம்.. போங்கள் உள்ளே
என் யுக்தி பலிக்குமா?
...! இன்னும் ஒரு சில வினாடி களுக்குப் பின் உலகிலேயே மிக்க கவர்ச்சியான இளம் சிட்டுக்கு வெகு அண்மையில் நான் சொக்கிப் போய் நிற்கப் போகிறேன்.. அடடா...
''கவர்ச்சியான இளம்சிட்டு'' ஒயிலாக வந்தது!
காதலுக்குக் கண்ணில்லைதான்! ஆனால் அதற்காக இப்படியா?


ஆகா... பச்சிளம் குழந்தையை அரவணைப்பது போல் எவ்வளவு லாவகமாக மலர் கொத்தை பற்றியிருக்கிறாள்
டெஸ்மாண்டின் நெஞ்சம் படபடத்தது...
அதோ.... ஏற்பாட்டின்படி அவன் அவளுடைய 'முந்தானை' மீது காலை வைக்கிறான்!
ஆனால்-
பர்ராஷ்க்
அடேய்... தெருப் பொறுக்கி நாயே.... நீ என்ன குருட்டுப் பயலா.... எடுடா காலை!
என் எதிரே புகைக்கக் கூடாது என் குரல் வளம் கெட்டுப் போய்விடும் என்று எத்தனை தடவை சொல்லி இருக்கிறேன்.. இருந்தும் நீ-
ஹலோ.... ஜூலி
... வழி விடும்யா... நான் அவசரமா போக வேண்டும் ஒருவரை சந்திக்க!



ஆனால் அந்த நபர் நான்தான் ஜுலி... -டெஸ்மாண்ட்
ஓ...!
உங்களை எனக்கு ஞாபகம் இருக்கிறது! உட்காருங்கள்.. இதோ ஒரு நொடியில் புறப்பட தயாராகி விடுகிறேன்!
அடுத்த 'தாக்குதல்' எந்த நிமிடமும் நடக்கலாம்!
டார்லிங் ஜுலி சற்று முன் நடந்த அசம்பாவிதத்தினால் குழம்பிப் விட்டாள்.... அதனால்தான் கொஞ்சம் விட்டேற்றியாக பேசுகிறாள்
MISS FATALE
உள்ளே -
ஏய்... என்ன இது?
ஸாரி.... மேடம்!
அடக் கடவுளே....!


முட்டாள்கள்..... பொறுப்பற்ற உதவாக்கரைகள்.... என்கண் முன்னே நிற்காதீர்கள்...
போய்த் தொலையுங்கள் எங்கேயாவது!
உங்களை சொல்ல வில்லை.... டியர் டெஸ்மாண்ட்
அதுதானே பார்த்தேன்!
என் சூழ்ச்சி முழு வெற்றி! இனி டெஸ்மாண்ட் புரிந்து கொண்டால் சரிதான்!
அந்த நெக்லெஸை பரிசாகப் பெற இவளுக்கு ஏது தகுதி என்ற உண்மை டெஸ்மாண்டுக்கு உறைத்திருக்கும்.... என்றாலும், அவளை உதறித் தள்ளிவிட்டு ஓடிவரக் காணோமே!
டெஸ்மாண்டுக்கு திடமன து!
நான் தேர்ந் தெடுத்திருக்கிற ரெஸ்டாரெண்ட் உனக்கு ரொம்பப் பிடிக்கும்.... ஜூலி!
வாய்க்கு ருசியாக கிடைத்தால் சரி தான்..... வரவர யாருக்குமே சுவையாக சமைக்கத் தெரியவில்லை!
ஆல்ரைட்... நானும் வருகிறேன் - இன்னும் ஏதாவது செய்ய முடியுமா என்று முயற்சி பண்ண வேண்டும்!



ஜூலி ஒரு ராங்கிக்காரி என்று டெஸ்மாண்டுக்கு கோடி காட்டியாயிற்று.. அதை அவன் பூரணமாக உணரச் செய்ய வேண்டும்...
நீ மலரைப் போல மென்மையானவள் ஆனால் உன்னைச் சுற்றி இருப்பவர்கள் முள்ளாக வருத்துகின்றனர்...
நான் பாடும்போது தும்மினார்கள் என்ற காரணத்திற்காகவே இரு கணவர்களை விவகாரத்து செய்து கொண்டேன்.
மற்றவர்களின் தவறை மன்னிக்கத்தான் நினைக்கிறேன்.. ஆனால் முடியவில்லை...
இந்த ரெஸ்டாரெண்ட்தான் டாப் கிளாஸ் இடம்
பார்த்தாலே தெரிகிறது!
இங்கே போகிறார்களா? இந்த ரெஸ்டாரெண்டின் மானேஜர் மௌரிஸ் என் நண்பன்.. தானும் ஒரு டிடெக்டிவ் ஆக வேண்டும் என்று கொள்ளை ஆசை பயலுக்கு
மௌரிஸ் எங்கே என்று முதலில் தேடிப் பிடிக்க வேண்டும்..
டிடெக்டிவ் ஆக உனக்கு ஆசை தானே மௌரிஸ்... இப்போது ஓர் அருமையான வாய்ப்பு கிட்டியிருக்கிறது
அந்த வைர நெக்லெஸ் விவகாரமா ஸார் ..? நான் என்ன செய்ய வேண்டும் சொல்லுங்கள்



ரிப் விவரித்ததும்-
ரெஸ்டாரெண்டின் பெயர் கெட்டுப் போகுமே என்று தான் யோசிக்கிறேன் ஸார்...
டிடெக்டிவ் தொழில் என்றால் எப்போதுமே சில தியாகங்கள் செய்ய தயாராக இருக்க வேண்டும் மௌரிஸ்...
ஓ. கே. சம்பந்தப்பட்ட பணியாளர்களிடம் போய் சொல்லி வைக்கிறேன்
இந்த இனிய மாலைப்பொழுதே மறக்கவே முடியாது ஜூலி...
எதிர்பாராத மறு சந்திப்பு... இதமாக இருக்கிறது
விருந்து... அப்புறம் நடனம்.... என்ன?
நெக்லெஸை பிறகு கொடுத்துக் கொள்ளலாம்
வெயிட்டர் எங்கே தொலைந்தான்...? என்ன வேண்டும் என்று கேட்க வரவே இவ்வளவு தாமதமா!
மூன்றாவது மேஜையில் இருக்கும் ஜோடியிடம் நான் சொன்னமாதிரி
நடந்து கொள்ளுங்கள்...! சிறிதும் மாற்றம் இருக்கக் கூடாது!
மௌரிஸ் ஆட்டத்தை தொடங்கி விட்டான்..! நடக்கப் போகிற வேடிக்கையை கண்டு ரசிக்கத் தயாராக இருந்தால் போதும்!
MENU


சொல்லுங்கள்.. உங்களுக்கு என்ன கொண்டு வர?
எங்கே... மாடு மேய்க்கவா போயிருந்தாய் - இவ்வளவு நேரமும்?
மெனு கார்டை கொடு!
சே...! எடுத்து வர மறந்து விட்டேன்! ஸாரி ஸார்... இதோ ஓடிப்போய் எங்கிருந்தாவது இரண்டை எடுத்து வருகிறேன்!
நல்ல ஆரம்பம் இது! டெஸ்மாண்ட் நன்றாக கற்றுக் கொள்வான்!
போனவன் திரும்பி வரவே காணோம்.... சோம்பேறி! என்ன.... ஹோட்டலா நடத்துகிறார்கள்-தா!
கொஞ்சம் பொறுமையாக இரு ஜூலி...! புகழ் பெற்ற ஹோட்டல் இது.... இன்று ஏனோ இப்படி -
என்னிடம் அழகு இருக்கிறது.. திறமை இருக்கிறது... பின்னே எதற்கு பொறுமை ?
கவனித்தீர்களா ஸார்...! இன்னும் நிறைய இருக்கிறது!
இது மட்டும் முழு வெற்றி அடைந்து விட்டால் நீ டிடெக்டிவ் தொழிலுக்கு தகுதி பெற்றவனாகி விடுகிறாய்



புயல் வீசப் போவதற்கான அறிகுறிகள் தோன்றத் தொடங்கின...
என்ன இழவு பானம் இது -சகிக்கவில்லை!
ஏன்... நன்றாகத் தானே இருக்கிறது!
விஷத்தை கலந்து கொண்டு வந்து கொடுத்து விட்டானோ என்னவோ – தொண்டை ஒரேயடியாக எரிகிறது...
அவளுடைய உண்மை சொரூபம் வெளிவரப் போகிறது
எரிமலையாய் வெடிக்கப் போகிறாள்
போயும், போயும் இவள் மீது மையல் கொண்டானே
சூழ்ச்சி நாடகம் தொடரட்டும்.. டெஸ்மாண்டுக்கு அவள் மீது வெறுப்பு ஏற்படவேண்டும்
உணவு வகைகள் வந்து சேர்ந்தன -ஒரு வழியாக
தூ.... என்ன இது -உப்புச் -சப்பில்லாமல்... வாயில் வைக்க முடியவில்லை!
ரொம்பவும்தான் அழிச்சாட்டியம் பண்ணுகிறாள்


இது மாதிரி படுமோசமான உணவை நான் என் வாழ்நாளில் சாப்பிட்டதே இல்லை
வா .. போய் நடனமாடுவோம்... பாட்டும், ஆட்டமும் ஒருவேளை உனக்கு உற்சாகமூட்டலாம்
அப்பாடா. ஒரு வழியாக இந்த அழகு தேவதை -என் அரவணைப்பில்!
ஆனால் -
யாரங்கே கற்றுக் குட்டி... இசையா இது - சினைப் பன்றி உறுமுகிறமாதிரி?
என் இசையில் கோளாறா சரிதான் - அரசு குடும்பத் திடமே பாராட்டு வாங்கியவர்கள் நாங்கள்! கழுதைக்குத் தெரியுமா - கற்பூர வாசனைன்னு சும்மாவா சொல்லி வச்சாங்க?
சரிதான் போடா..., நீ எல்லாம் ஒரு இசை கலைஞன் என்றால் கலையுலகுக்கே அவமானம்!
இந்த கூச்சலுக்கு நடனமாட நாலொன்றும் வெட்கம் கெட்டவளில்லை...
சபாஷ்! டெஸ்மான்ட்டின் மூஞ்சி அழுது வடிகிறது..! இதைத்தானே எதிர் பார்த்தேன்!


டெஸ்மாண்ட் ஒரு முடிவுக்கு வந்திருந்தான்!
என்ன அவசரம்... நான் இன்னும் காப்பி குடிக்கவில்லை
வேண்டாம் மேடம் . அதிலே யும் ஏதாவது பிரச்னை வந்திடப் போகிறது!
இனி ஒரு வினாடி கூட நாம் இங்கே இருக்க வேண்டாம் ..
இந்தா.. பணம்! இந்த அம்மா எங்கே போகவேண்டும் என்று சொல்கிறாரோ அங்கே கொண்டு போய் இறக்கி விட்டுவிடு... ஓ. கே!
TAXI
ஜூலியை மூட்டை கட்டி அனுப்பி விட்டான் டெஸ்மாண்ட்! நெக்லேஸ் இன்னும் அவனிடம்தான் இருக்கிறது - வெரிகுட்!
மன்மதன் மட்டும் என் கையில் சிக்கினால அவனிடம் உள்ள அத்தனை நகைகளையும் நொறுக்கி தூள் தூளாக்கி விடுவேன்..
டெஸ்மாண்ட், ஜூலி எங்கே?
மீண்டும் அவளை நினைவுப் பேழைக் குள் போட்டு பூட்டி வைத்துவிட்டேன்
இன்னொரு சொகுசுக் காரை துடைக்கிற கடமை பாக்கியிருக்கிறது


அதாவது - நீ அந்த நெக்லெஸை ஜூலியிடம் கொடுக்க வில்லையா?
அவளை மாதிரியான அகம்பாவக்காரிக்கு இதை நான் பரிசாக் கொடுக்க விரும்பவில்லை பிங்கி...
அவளுக்கும் எனக்கும் சரிப்பட்டு வராது என்று தோன்றியது.... ங்கே கழுவி விட்டேன்...
சரி... இனி அந்த நெக்லெஸை டெஸ்மாண்ட் என்ன செய்வான்!
இனியும் இங்கே எனக்கு வேலை இல்லை! அவனை முந்திக் கொண்டு வீடு போய்ச் சேர்ந்து அவனுடைய அடுத்த நடவடிக்கை என்ன வென்று கண் காணிக்க வேண்டும்!
ஹலோ... டெஸ்மாண்ட்? பொழுது இனிமையாக கழிந்ததா?
ஏதோ இருந்தது ஸார்..!
இதை தபால் மூலமாகவோ, வேறு யார் மூலமாகவோ, நம்பிக்கையாக கொடுத்தனுப்ப முடியாது! பிங்கி இதற்கு ஏதாவது உபாயம் சொல்லக்கூடும்!


மறுநாள் பிற்பகலில்
நானும் பின் தொடர வேண்டும்
எங்கே கிளம்புக்கா?
ஆமாம் ஸார்.... ஆனால் சீக்கிரமே திரும்பி விடுவேன்
அதோ ஜாகுவிஸ்....! வா- போகலாம் பிங்கி...!
ஜாகுவிஸை நடுவில் விட்டு இரண்டு பேருமே உரசினார்கள்
மன்னியுங்கள்... ஸார்!
ஓ... ஸாரி!
ஊப்ப.....!
ஓ... ஜாகுவி ஸ் என்ன ஆயிற்று!
அந்த இரண்டு ஆசாமிகளும் திட்டமிட்டே என்மீது மோதியதாக தோன்றுகிறது... அவர்கள் பிக்பாக்கட்டுகளாக இருந்தால் ஏமாந்து போயிருப்பார்கள்.. ஏன் எனறால் என் பையில் எதுவுமே இல்லை!
நான் அப்படி நினைக்கவில்லை... எதற்கும் உன் பையை சோதனை போட்டுப் பார்..
ஹே... நெக்லெஸ்...! அத்தோடு பத்து டாலர் நோட்டு - சிறு குறிப்போடு! "இது நெக்லெஸுக்கு வாடகை - மிஸ்டர் Z"
அப்படியானால் கேஸ் நல்லபடியாக முடிந்துவிட்டது என்று சொல்...! நான் பீஸ் எதுவும் வாங்கு வதாக இல்லை!




பிரகாஷ் பப்ளிஷர்ஸ் சார்பாக "லயன் காமிக்ஸ்" மாத இதழை அச்சிட்டுபவரும் வெளியிடுபவரும், ஆசிரியரும் S. விஜயன். முகவரி : பிரகாஷ் பப்ளிஷர் ஸ, தபால் பெட்டி எண் : 374, சிவகாசி - 626 123 ☎போன் : 20649, வெளியீடு எண் : 83. அச்சிட்டோர் : தி விஜய் புக்ஸ். சிவகாசி - 626 123



விந்தை மனிதன் ரேடார்!
தோன்றும்

# ஒரு லாலிபாப் படலம்!

அநீதியை அழிப்பதே வாழ்க்கை லட்சியமாய் கொண்டவர் விந்தை மனிதன் ரேடார்! எங்கெல்லாம் அவர் உதவி தேவைப் படுகிறதோ அங்கெல்லாம் ஆஜாராகும் அதிசய சக்தி அவரிடம் உண்டு! அது மட்டுமல்ல, பற்பல உருவங்களுக்கு மாறும் ஆற்றலும் உண்டு!







கதை நம்பர்_3


மயிரிழையிலே தப்பிச்சுட்டா-
நெறைய லாலி பாப் வேணும்!
ஹே!-ஓ! நீதானா? வேற யாரோன்னு பயந்து போயிட்டேன்!
பத்து சென்ட்டுக்கு லாலிபாப் கொடுங்க!
இந்தா- பிடி!
காசெல்லாம் வேண்டாம் முதல்லே இடத்தைக் காலி பண்ணு-ஓடு!


ஐயோ-போலீஸ்! யாரோ நான் பண்ணினகாரியத்தை பார்த்துப்புட்டு போலீஸுக்கு சொல்லிட்டாங்களோ-தொலைஞ்சேன்!
ங்க தேடி வந்தது பேக்கரை அல்ல-
அவனோட கால்கள் வெளியே நீட்டிக்கிட்டிருக்கு!
ய்ய்-குட்டி-இப்படித்தான்
ண்மண் தெரியாம சாலை
லே குறுக்கே பாய்கிற
ா? இனிமே சாலையை
டக்கணும்னு நினனு,
தானமா ரெண்டு பக்
மும் பார்த்து ஜாக்கிர
தயா கடக்கணும் -
என்ன?
அப்பாடா! அவங்க கவனிக்கலே!
சீக்கிரமே இங்கேர்ந்து இவனை அப்புறப்படுத்திடணும். ராத்திரி கார்லே தூக்கிட்டுப் போயி சதுப்பு நிலப்பரப்பிலே கடாசிட்டா யார் கண்ணிலேயும் படமாட்டான்-டாம் ஊர்சுத்துகிற பேர்வழிங்கிறதனாலே, எங்கேயோ வெளிநாடு போயிருப்பான்னு ஜனங்க நெனைச்சுக்குவாங்க-



ல.5.


இரவு கடையை சாத்தியபின்-
உப்ப்- என்னமா கனக்கிறுன்-
இன்னும் கொஞ்ச நேரம்தான்- அப்புறம் எல்லாமே ஒரு கெட்ட கனவு மாதிரி போயிடும்!
ஆனால் -
ஐயோ-ஸைரன்! போலீஸ் துரத்துதோ? நான் டாமை கொன்ன விஷயம் அவங்களுக்கு எப்படி தெரிஞ்சி இருக்கும்?
எக்கச் சக்கமா மாட்டிக்கிட்டேன்!
யோவ்-மனசிலே என்னதான் நினைச்சுக்கிட்டிருக்கிறே? சாலை சந்திப்பிலே சிவப்பு விளக்கு எரியறதை அலட்சியப்படுத்திட்டு நீ பாட்டுக்கு வந்திட்டியே?
ஸாரி-ஏதோ கவனக் குறைவா இருந்திட்டேன். என்னோட மனைவி ரொம்ப சுகமில்லாமல் கிடக்கா- அவளை பார்க்க ஆஸ்பத்திரிக்கு போய்க்கிட்டிருக்கேன். அதான்-


வழக்கமா எல்லோரும் சொல்ற நொண்டிச் சாக்கு-இந்த தபா விடறேன்-ஆனா இனிமே இந்த மாதிரி தப்பு பண்ணாதே!
அம்மாடி! பொழைச்சேன்! பின் ஸீட்லே ரமோட உடல் கிடக்கிறதை நல்லவேளை அந்த ஆள் பார்க்கலை!
போலீஸ்காரன் போனதும் காரை மீண்டும் கிளப்பினான் பேக்கர்-
பார்-நீ செத்தப்புறமும் உன்னாலே எனக்கு எவ்வளவு மனக் கஷ்டம்! இன்னும் கொஞ்ச தூரம்தான்-அப்புறம் பிரச்னைக்கு முற்றுப்புள்ளி விழுந்திடும்!
நான் சாகவில்லை-நான் உயிரோடு தான் இருக்கிறேன்!
எனக்கு பேச முடிந்தால்-அல்லது உடம்பை சிறிதளவு அசைக்க முடிந்தால் நான் இன்னமும் உயிரோடுதான் இருக்கிறேன்கிறதை உனக்கு தெரியப்படுத்திடலாம்-ஆனா-விழுந்த அடிஎன்னை ஒரேயடியா முடக்கிப்போட்டுவிட்டதே-
நான் உயிரோடிருப்பது தெரிஞ்சா என்னை நீ சேற்றுக்குள்ளே தூக்கிப் போட்டுட மாட்டே! நீ நல்லவன்-அப்படியொரு அரக்கத்தனமான காரியத்தை நிச்சயம் நீ செய்யமாட்டாய்!
வந்தாச்சு! தூக்கி கடாசுற வேலை மட்டும்தான் பாக்கி!



ஐயோ-எனக்கு சாவு இப்படியா வரணும்? நோ- சாக எனக்கு இஷ்டமில்லை-
சேறு ஆழமா இருக்கிற இடத்தை முதல்லே தேடிக்கண்டு பிடிக்கணும்-இல்லேன்னா பொனம் யாரு கண்ணிலேயாவது பட்டுடும்!
இப்போ என்னை யாரா லுமே காப்பாத்த மு யாது-ரேடாரைத் தவிர! ரேடார்-கா பாற்று-என்னை!
வெகு தொலைவில் ஒரு பார்ட்டியில்-
ரேடார் காப்பாற்று- என்னை!
ஏன்-என்ன ஆச்சு? திடீர்னு நான் பேசுறது எதுவுமே உங்க காதிலே ஏறலை?
உள்ளே ஒரே புழுக்கமா இருக்கு- மொட்டை மாடிக்குப் போய் கொஞ்ச நேரம் சுத்தமான காற்றை சுவாசிச்சுட்டு வர்றேன்!
பார்த்தீங்களா- பார்த்தீங்களா- அங்கே ஒரு ஆள் பறந்து போறான்!
நெறைய குடிக்காதேன்னு சொன்னா நீ கேட்டால்தானே!


ம்ம்-இந்த இடம் ஆழமா யிருக்கு! போய் டாமை தூக்கி வரணும்!
ஆனால்-திரும்பிப் பார்த்த பேக்கருக்கு தான் கண்ட காட்சியை நம்பவே முடியவில்லை!
ஐயோ-கெட்டது காரியம்-நான் தொலைந்தேன்!
இது-இது-நிஜமா யிராது! கனவு காண்கிறேனா?
ஏய் சனியனே-நில்லு: நில்லு!
எப்படியும் விரட்டிப் பிடிச்சாகணும்!



என் அடிவயிற்றை கலக்குகிற காரியத்தை பண்ணிட்டு ஒண்ணுமே நடக்காதது மாதிரி இங்கே நின்னு நிதானமா புல் மேய்ஞ்சுக்கிட்டிருக்கியா- உன்னே-
ச்சூ சனியனே- ஓடிப் போயிடு இங்கேர்ந்து!
அது சாதாரண மாடல்ல.... மாடு உருவத்திலான ரேடார்!
மோவ்வ்-
ஐயோ-புலி மாதிரி என்னமா சீறிக்கிட்டு ஓடி வருது!


அந்த அயோக்கியனை அப்புறமா கவனிச்சுக்கலாம் முதலில் காயம் பட்டவனுக்கு சிகிச்சையளிக்க ஏற்பாடு செய்யணும்!
ஆனால் இதற்கிடையே-
நடக்க முடிகிறது.மிக சோர்வாக இருந்தாலும் இப்போது என்னால் நடக்க முடிகிறது!
டாம் இருந்த இடத்தை நோக்கி ரேடார் வந்தடைந்த போது-
என்னடாது! எங்கே போனான்?
மறுநாள் காலையில்-
ஆச்சரியமா இருக்கே-நேற்று ராத்திரி கதவை பூட்டியது நல்லா ஞாபகம் இருக்கு-ஆனா இப்போ பூட்டாமல் இருக்கே!
உன்னை எதிர்பார்த்துதான் இங்கே காத்திருக்கிறோம் பேக்கர்!
உன் மருமகன் டாமை கொன்ற குற்றம் உன் மீது சுமத்தப்படுகிறது பேக்கர்-
நீ-நீங்க எப்படி கண்டுபிடிச்சீங்க?


டாமோட நண்பன் ஒருவன் அவனை காணோம்னு புகார் கொடுத்தான்-கடைசியா இங்கேதான் வந்ததாக தகவல் கெடைச்சது!
வந்து பார்த்தப்போ அவனோட கையுறை ஒன்றும், அங்கங்கே இரத்தக் கரையும் கண்ணில் பட்டன-
உனக்கும் டாமுக்குமிடையே நல்லுறவு இல்லேன்னு சொல்றாங்க-மரியாதையா குற்றத்தை ஒப்புக்கொண்டுவிடு!
ஒப்புக்கொள்கிறேன்-அ-அதை நான் தற்காப்புக்காகவே செய்ய நேர்ந்தது!
எல்லோரும் சொல்லுகிற நொண்டிச் சாக்கு! வா— எங்களோடு! பிரேதத்தை என்ன செய்தாய்ங்கிற விபரங்களை அங்கே போலீஸ் ஸ்டேஷன்லே சொல்லு!
பத்து சென்ட்டுக்கு லாலி பாப் வேணும் அங்கிள்!
இனிமே நீ லாலிபாப் வேற எங்கேயாச்சும் தான் வாங்கிக்கணும் டா கண்ணு!
பின்னர்-பேக்கர் லாக்-அப்பில் அடைக்கப்பட்டான்-
ஹூம்! நிஜத்தை நான் சொன்னாலும் யார் நம்பப் போகிறார்கள்! தூக்கிலே நான் தொங்கப் போறது நிச்சயம்! இனிரேடாரே வந்தால்கூட என்னைக் காப்பாற்ற முடியாது!
ரேடாரின் உதவியை பெற உனக்கு அருகதை கிடையாது பேக்கர்-நீ குற்றவாளி-உறவுக்காரனையே கொல்ல முயன்ற கசடன்-
யார்-யாரது?


இழைத்த குற்றத்துக்குரிய தண்டனையை நீ அனுபவிக்கத் தான் வேண்டும்!
ரேடாரா? சந்தேகமே யில்லை-தயவு செய்து நான் சொல்லப்போவதைகொஞ் சம் காது கொடுத்துக் கேள்!
டாம் என் மருமகன்-ஆனால் அப்படி ஒரு உறவுக்காரன் எனக்கு வாய்க் காமலே இருந்திருக்கலாம்-அவன் சோம்பேறி-உதவாக்கரை-தறுதலை! அடிக்கடி வந்து நச்ச சரித்து என் கிட்டேர்ந்து பெரும் தொகையை கடனாக வாங்கிப் போ வான்-ஆனால் திருப்பிக் கொடுத்ததேயில்லை!
இனி சல்லிக்காசு தரமுடியாதுன்னு ஒரு நாள் தீர்மானமா சொல்லிட்டேன்-அதன் பின் ஒருநாள்-நான் கடையில் தனித்து இருந்தப்போ-
பணம் மொத்தத்தையும் எடு வெளியே-கூச்சல் போட்டியோ மண்டையோடு எகிறிடும்-
ம்ம் சீக்கிரம்
இ இதோ-எடுத்துத் தரேன்!
டிராயரிலிருந்த பாட்டிலை என் கை பற்றியது



போக்கிரி நாயே- பணமா வேணும்- இந்தா!
ஆவ்வ்வ்!
மடேர்!
வந்து அரெஸ்ட் பண்ணிப் போகுமாறு போலீஸுக்கு போன் பண்ணணும்!
அடப்பாவி! டாம்- நீயா?
மூச்சு நின்னு போயிட்டுது! கொன்னுட்டேனா? தற்காப்புக்குத்தானே இதை செஞ்சேன்! யாரும் என்மீது பழி போட முடியாது-அவன் கையிலே இருக்கிற துப்பாக்கியே சாட்சி!
சே-பொம்மை துப்பாக்கி! அன்றொருநாள் நாலு பேர் இருக்கச்சே நான் டாமை கடுமையா திட்டிய விஷயம் போலீஸுக்கு தெரியாம போகாது, நான் அப்பாவின்னு சொன்னா நம்பமாட்டாங்க- திட்டமிட்டு இவனை நான் கொன்னதாகத் தான் முடிவு கட்டுவாங்க!
எனக்கு பயம் பிடிச்சுக்கிட்டது!-எனவே டாமோட உடலை அப்புறப்படுத்திகொலையை அடியோடு மறைச்சிட முயற்சி பண்ணினேன்!
நீ கொலை எதுவும் பண்ணலை பேக்கர்- டாம் உயிரோடு தான் இருக்கிறான்!


ரேடார் வெளியிட்ட உண்மைகளை கேட்ட பேக்கர் தலையிலடித்துக் கொண்டான்-
இப்போ என்னுடைய உயிர் அவன் கையில்! என்னை தூக்கில் போடறவரைக்கும் சண்டாளன் வெளியில் வரவே மாட்டான்! அவனுடைய புத்தி எவ்வளவு நீசத்தனமானது என்று தெரியாது உங்களுக்கு!
எனக்கு நீங்கள் உதவி செய்யணும் ரேடார்-உங்களுடைய சாட்சியம் என்னைக் காப்பாற்றுமா-சொல்லுங்க-
காப்பாற்றலாம்! ஆனால் அதற்கு முன்-நீ விடுதலை பெறணும்னா டாமை தேடிக் கண்டுபிடிச்சாகணும்
மறுநாள்-
பேக்கர் மீது கொலை வழக்கு-
சூப்ப்-ப-ர்! கெழவனை நிச்சயமா தூக்கிலே போட்டிடுவாங்க-அதுக்கப்புறமாத்தான் நான் வெளியே தலைகாட்டுவேன்-கேட்டா-வெளி நாடு போயிருந்தேன், இது பற்றி எதுவுமே எனக்குத் தெரியாதுன்னு ரீல் விட்டிடுவேன்-
கிழவன் உயிலை மாத்தி எழுதியிராத பட்சத்தில் அத்தனை சொத்தும் எனக்கே வந்து சேரும்-நான் பணக்காரனாகிடுவேன்-அப்புறம் ராஜாவாட்டம் ஜாலியா லைஃபை அனுபவிப்பேன்! உடனடியா நான் தலைமறைவாகிடணும்!
என்னது அங்கிளோட கடை திறந்திருக்கே? எப்படி? கெழம் இதையாருக்காச்சும் வித்துத் தொலைச்சுட்டதா?


ஹலோ! நீங்க-இந்த கடையை வாங்கி யிருக்கீங்களா-?
மடத்தனமா என்ன கேள்விடா இது- இது என்னோட கடைதானே?
வ-வ-வந்து-எப்படி நீங்க- இங்கே-ஜெயில்லே இருக் கிறதால்லே எல்லா பேப் பர்லேயும் போட்டிருந்தது!
எங்கே ஓடற டாம்? நில்·உன்னோடு கொஞ்சம் பேசணும்!
என்னை விடு-நான் போகணும்!


உன்னே போக விட்டு விட்டால்-அப்புறம் என் கதி?
கும்!
ஊப்ப்ப்-
மடார்!
எழுந்திரிடா நாயே-மரியாதையா நான் சொல்றபடி செய்-இல்லேன்னு குடலே உருவிடுவேன்!
ச-சச்-சரி-அங்கிள்!


நட-போலீஸ் ஸ்டேஷனுக்கு! அங்கே வந்து உண்மையிலே என்ன நடந்ததுன்னு அப்படியே புட்டுப்புட்டு வைக்கணும்-
ச-சரி- அங்கிள்!
என் கடமை முடிஞ்சது. இனி பேக்கர் விடுதலையாவதில் எந்த சிரமமும் இருக்காது!
கிழவர் வடிவில் வந்திருந்தது ரேடார்!
மறுநாள்-என்றைக்கும்போல் பேக்கர் மீண்டும் தன் கடையில் வியாபாரத்தைக் கவனித்துக்கொண்டிருந்தார்!
ஜெயிலில் ஒரு சில வருடங்களை கழிச்சுட்டு வந்தப்புறமாவது டாம் திருந்தினால் சரிதான்! நீங்க செஞ்ச உதவிக்கு எப்படி நன்றி சொல்றதுன்னே எனக்குத் தெரியலே!
பத்து செண்ட்டுக் எனக்கு-
லாலி பாப்தானே வேணும்? இந்தா ஜாடி-மொத்தமும் உனக்குத்தான்- வருஷம் முழுக்க ஜாலியா தின்னலாம்!
முற்று



மீண்டும் டாக்டர் செவன்!
அட்லாண்டிக் கடலுக்கு மேலே 30,000 அடி உயரத்தில்
மிஸ்டர் காரிகன்... உங்களுக்கு ஒரு ரேடியோகிராம் வந்திருக்கிறது!
தலைமையகத்தி லிருந்து...
"நம் ஐரோப்பிய தூதரகம் ஒன்றில் பிரச்னை, உடனடியாக நீ வேறொரு பிளேனுக்கு மாறி அங்கே போய் சேர்."
கதை நம்பர்-4


அந்த தூதரகத்திற்கு அருகே -
நம்முடைய முதல் முயற்சியை அடுத்து அங்கே பாதுகாப்பு ஏற்பாடு பலப்படுத் தப்பட்டுள்ளது. என் வேஷம் செல்லு படியாகவில்லை... திரும்பிவிட்டேன்.
தலைவர் கோபப்படலாம்!
உங்கள் அதிர்ஷ்டம் மிஸ்டர் காரிகன்... அந்த நகருக்குச் செல்லும் விமானம் அதோ புறப்பட ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறது. விரையுங்கள்.
தூதரகத்தில் அப்படி என்னதான் நடந்து கொண்டிருக்கிறது?
இதற்கிடையே -
முதலிரண்டு முயற்சிகளும் தோற்றுவிட்டன பாஸ். ஆனால் தூதரகத்தினுள் ஊடுருவ ஒரு மாற்று யுக்தியை சீக்கிரமே கண் பிடிப்போம்!
ஏன் - ஏற்கனவே செய்து வைத்திருக்கும் குழறுபடி போதாதா?
உனது விவேகமில்லாத செயல்கள் ஏகப்பட்ட கவனத்தை நம்பக்கம் ஈர்த்துள்ளது! தூதரகத்திற்கு எதிராக இனி எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை நான் பார்த்துக் கொள்கிறேன்.




அதுவரை தூதரகத்தை கண்காணிப்பில் வைத்திரு ஒரு ஈ - காக்கை உள்ளே நுழைந்தால் கூட எனக்குத் தெரிய வேண்டும்!
சரி... பாஸ்!
அன்று பிற்பகலில் -
அடடே...! FBI தலைமை யகத்தினால் எப்படி உன்னை இவ்வள சீக்கிரத்தில் இங்கே அனுப்பி வைக்க முடிந்தது
POLICE
நீ வந்து சேர்ந்தது எவ்வளவு ஆறுதலாக இருக்கிறது தெரியுமா...? இந்த துப்பாக்கி, கத்தி விவகாரங்கள் எல்லாம் எங்களுக்கு சம்பந்தமில்லாத சங்கதிகள்!
தலைமையகம் என்னை நடுவானில் பிடித்துக் கொண்டது.
விவகாரம் என்ன வென்று அவர்கள் எனக்குச் சொல்லவே இல்லை.
ஓகோ...! அந்த பெண்ணைப் பற் தெரியாதா? தன் காப்பாற்றச் சொ இங்கே தஞ்சப் புகுந்திருக்கிறா அவள்!
பரிதாபமாக உருக்குலைந்து இருக்கும் இந்த ஜன்னலைப் பார் - அவளுடைய கோரிக்கையில் உள்ள நியாயம் புரியும்!
இங்கே வந்த பிறகும் அவளை தீர்த்துக் கட்ட எதிரிகள் தொடர்ந்து முயற்சிக் கிறார்களா என்ன?
மின் இணைப் பார்க்க வந்தான் ஒரு கடைசி வினா வேஷம் வெ பட்டுவிட்ட ஓடிவிட்டா



யார் அவள்? எதற்காக அவளை கொல்ல நினைக்கிறார்கள்?
அவ்வுண்மைகளை சொல்ல மறுக்கிறாள்! ஆனால் FBI க்கு தேவையான சில இரகசியங்கள் தன்னிடம் இருப்பதாகவும், அவற்றை உன்னிடம் மட்டுமே வெளியிட முடியும் என்று கூறிவருகிறாள்.
இதற்கிடையே -
தூதரகத்திற்கு புதிதாக வந்து சேர்ந்திருக்கும் நபரின் புகைப்படம் இதோ
ஓ...! காரிகன் மறுபடியும் நம் வழியில் குறுக்கிடுகிறானா?
இவனை உங்களுக்கு ஏற்கனவே தெரியுமா... பாஸ்?
தோல்வியே கண்டறியாத இரகசிய உளவாளி... எனக்கு எப்போதுமே இவன் ஒரு இடைஞ்சல்!
ஆனால் இம்முறை அவனுடைய சாதனை பட்டியல் தொடரப் போவதில்லை...!


அந்தப் பெண்ணா குறிப்பாக என்னை வரவழைக்க வேண்டும் என்று கோரினாள்?
அவள் அறிந்த இரகசியங்களை உன்னிடம் மட்டுமே வெளியிடுவாளாம்- அடம் பிடிக்கிறாள்
அவளை கொல்ல ஒரு முயற்சி நடந்ததை அடுத்து ஜன்னல்களே இல்லாத தனி அறைக்கு அவளை அனுப்பி வைத்துவிட்டேன்..
மிஸ்? நாங்கள் உள்ளே வரலாமா?
வாருங்கள்!
தூதரக அதிகாரியும், காரிகனும் அறையினுள் கால் வைத்தபோது -
லிஸா...!
ஏய்ய்... என்ன இது?
என்னை நீங்கள் இன்னமும் ஞாபகம் வைத்திருப்பது எனக்கு சந்தோஷம் அளிக்கிறது மிஸ்டர் காரிகன்.... இனி எனக்கு இந்த பிஸ்டல் அவசியப் படாது!


உள்ளே வர அனுமதி கோரியபோது என் குரலை உனக்கு அடையாளம் தெரிய வில்லையா?
குரலை மாற்றி ஆள் மாறாட்டம் செய்வதும், இலஞ்சம் கொடுத்து காரியத்தை சாதிப்பதும் என் எதிரிகளுக்கு கை வந்த கலை...
நீ சொல்வதில் நியாயம் இருக்கிறது..! ஓ.. கே. நீ விரும்பியபடி காரிகன் வந்து சேர்ந்து விட்டார்.. இனி நீ தைரியமாக இருக்கலாம். இருவரும் முன்பு சேர்ந்து பணிபுரிந்தீர்களோ?
அப்படியில்லை...! யு. எஸ். செயற்கை கோள்களை திருட முயன்ற கும்பலின் முயற்சியை நான் முறியடித்த போது இந்த லிஸா எதிர் அணியில் இருந்தாள்..
எனவேதான் நான் குறிப்பாக நீங்கள் வேண்டும் என்றேன்!
இன்று என்னை கொல்லத் துடிக்கும் டாக்டர் செவனின் அட்டகாசங்களை அப்போது வெற்றிகர மாக முறியடித்த ஒரே நபர் நீங்கள்தான்
என்ன..... உன் முன்னாள் பாஸ் டாக்டர் செவன் உன்னை தீர்த்துக் கட்டத் துடிக்கிறானா?
ஆமாம்...! உங்களிடம் அவன் தோற்றுப் போனதற்கு நான்தான் காரணம் என்று சொல்லி துன்புறுத்தி வந்தான். தாங்க முடியவில்லை... தப்பியோடி வந்துவிட்டேன்... தீர்த்துக்கட்டிவிட துடிக்கிறான்
- நீயும் டாக்டர் செவனும் சேர்ந்து நடத்தும் சூழ்ச்சி நாடகம் இல்லை இது என்று எப்படி நான் நம்புவது?


கஷ்டம்தான்! ஆனால் டாக்டர் செவனின் புதிய
மோசடித் திட்டம் பற்றிய உண்மைகளை தெரிந்து கொள்ள விரும்பினால் என்னை நீங்கள் நம்பித்தானாக வேண்டும்... அது பற்றி உங்களிடம் தனிமையில் உரையாட விரும்புகிறேன்
ஓ. கே. நான் என் அலுவல் அறைக்கு போகிறேன் - அவசியப்பட்டால் கூப்பிடு .. காரிகன்!
ரொம்பவும்தான் அலட்டிக் கொள்கிறேன் என்று எண்ணாதீர்கள். உங்களைத் தவிர வேறு எவரையும் நான் நம்பத் தயாராக இல்லை
யு. எஸ். தூதரகம் வரை டாக்டர் செவனின் செல்வாக்கு ஊடுருவும் என்று நான் நினைக்க வில்லை லிஸா!
டாக்டரின் புதிய முயற்சி வெற்றி பெறுமேயானால், அவருடைய செல்வாக்கு செல்லு படியாகாத இடம் இப்பூமியில் இல்லாது போய்விடும். இந்த வெற்றிக்கு உங்கள் நாட்டு பிரஜை ஒருவரே அடித்தளம் அமைத்துத் தருவதாக இருக்கிறது
இதற்கிடையே...
லிஸா வெளியிடும் உண்மைகளை ஏற்று காரிகன் செயலில் இறங்க வேண்டுமானால்
அவன் முதலில் அமெரிக்காவுக்கு அவளை அழைத்துப் போக வேண்டும்... அப்படி செல்ல முயற்சிக்கும்போது நம்மை அவன் எதிர் கொள்ள வேண்டி வரும்!


அப்படியானால் நாம் இனி தூதரகத்தினுள் ஊடுருவப் போவதில்லையா?
காரிகனிடம் லிஸா உண்மைகளை வெளியிடுவதை தடுக்க இனி அவகாசம் இல்லை நமக்கு
நாம் இனி விழிப்போடு எப்போதும் தயார் நிலையில் காத்திருக்க வேண்டும்.
காரிகன் லிஸா வோடு அமெரிக்க செல்ல முயற்சிக்கும் போது...
நம் கைவரிசையை காட்ட வேண்டும்!
அவ்வாறே அந்த தூதரகத்தின்மீது கண்ணாக இருந்தார்கள் டாக்டர் செவனின் ஆட்கள்
உள்ளே - டாக்டர் செவனின் மோசடி திட்டம் பற்றி லிஸா காரிகனிடம் விவரித்துக் கொண்டிருந்தாள்.
உலகம் முழுக்க பரவிய ஒற்றர் படை ஒன்றை உருவாக்க திட்டமிட்டிருக்கிறார் ஒரு நாடோ.. தனி
நபரோ எந்த தகவல் கோரினாலும் கணிசமான தொகைக்கு அதை உத்தரவாதமாக சேகரித்துக் கொடுக்கும் ஆற்றலுடையதாக இருக்கும் அந்த அமைப்பு.
இதில் அமெரிக்க பிரஜை யாரோ ஒருவர் கூட்டா?


டாக்டர் செவனின் புதிய அமைப்பிற்கு முக்கோணம் என்று பெயர்! டாக்டர் செவன் தவிர வேறு இருவருக்கு அதில் பங்குண்டு!
தன் விஞ்ஞான அறிவைக் கொண்டு ஒரு திட்டத்தை உருவாக்கிக் கொடுப்பது டாக்டர் செவ்னின் பங்கு.
தகுந்த திறமை சாலிகளை அமர்த்தி உரிய பயிற்சி கொடுக்கும் பணி கார்பு என்ப வனை சேர்ந்தது.
அவனை எனக்குத் தெரியும்.. இங்கே சமூக விரோத கும்பலில் பிரசித்தி பெற்ற ரௌடி - உலகம் முழுக்க அவனுக்கு செல்வாக்கு உண்டு!
மூன்றாவது நபர் யார்?
ஓர் அமெரிக்கர்! திட்டத்தை செயல்படுத்த தேவைப்படும் பெரும் தொகையை தரவிருப்பவர்... ஆர்வம் காட்டுகிறார்... ஆனால் இன்னும் உறுதியாக வாக்களிக்கவில்லை.
அவர் மட்டும் பணம் கொடுக்க சம்மதிக்கா விட்டால் செவனின் திட்டம் அம்பேல் ஆகிவிடும். எனவே, அந்த நபரை நீங்கள் கலைத்துவிட்டால் செவனின் திட்டம் கருவிலேயே செத்து விடும்!
ஆக... நான் சூழ்ச்சித் திட்டத்தோடு இங்கே வரவில்லை என்று இப்போது புரிந்திருக்குமே!
ஸாரி லிஸா... எதையுமே சந்தேகக் கண்ணோடு பார்ப்பது எங்கள் தொழிலில் அவசியமாகி விடுகிறது.


சரி... அந்த அமெரிக்க செல்வந்தரின் பெயர் என்ன?
தெரியாது...! மூவரும் சந்தித்துக் கொண்ட போது அவரை ஒரே ஒரு தடவை நான் பார்த்திருக்கிறேன்... மற்றபடி இன்னார் என்று விபரம் தெரியாது எனக்கு
ஆனால்... மீண்டும் நான் அவரை பார்த்தால் நிச்சயம் அடையாளம் கண்டு கொள்ள முடியும்..!
தான் உருவகப் படுத்தியுள்ள திட்டத்தையும், கண்டுபிடிப்பு களையும் செவன் அவருக்கு வெள்ளோட்டம் காண்பிக்க நினைக்கிறார். திருப்தி ஏற்பட்டால் முக்கூட்டுக்கு பண உதவி செய்ய அவர் முன் வரக்கூடும்...
அடுத்த சந்திப்பு உங்கள் நாட்டில் எங்கோ நடப்பதாக உள்ளது ஆனால்..
அப்படியானால் அவரை இன்னார் என்று தெரிந்து கொள்ள என்னோடு நீ அங்கே வருவது அவசியமாகிறது.
லிஸாவை அமெரிக்காவுக்கு அழைத்துச் செல்லப் போகிறாயா? அது புத்திசாலித்தனமான காரியம்தானா? இவளுக்காக செவனின் ஆட்கள் வெளியில் தயாராக காத்துக் கொண்டிருக் கிறார்கள் என்பதை மறந்து விட்டாயா!
ஆனால்... மிகப் பெரிய சதித் திட்டத்தை முறியடிக்க வேண்டுமானால் இப்படி ஒரு ஆபத்தை நாம் எதிர் கொள்ளத்தான் வேண்டும்


பத்திரமாக எப்படி லிஸாவை வெளியேற்றி அழைத்துச் செல்வது என்று எனக்குத் தெரியும்!
அன்று மாலையில்...
ஒரு சொகுசுக் கார் தூதரகத்தை விட்டு வெளியேறிச் செல்கிறது...
நாம் இதைத்தானே எதிர்பார்த்து காத்துக் கொண்டிருந்தோம்.!
காரின் பின் இருக்கையில் ஒரு ஆடவனும் ஒரு பெண்ணும் இருந்தார்கள்..
விமான நிலையத்தில் இருக்கும் நம் ஆட்கள், சற்று முன்னர்தான் அமெரிக்கா செல்லும் அடுத்த ஃப்ளைட்டுக்கு தூதரகம் இரண்டு டிக்கட்டுகள் ரிசர்வ் செய்திருப்பதாக தெரிவிக்கிறார்கள்..
ஓகோ..! காரிகனும், லிஸாவும்தான் காரில் செல்லக்கூடும்
அனைத்து யூனிட்டு களுக்கும்-


தன் இருப்பிடத்தில் இருந்தவாறு ஆணை பிறப்பித்தான் டாக்டர் செவன்...
உடனடியாக திட்டம் - 3' ஐ செயல் படுத்துங்கள்
அதையடுத்து சொகுசுக் காரை பின் தொடர்ந்து விரைந்தது வேறொரு கார்...
சொகுசுக் கார் சென்ற பாதையில் -
டாக்டர் செவனின் ஆட்கள் தடையை ஏற்படுத்தி யிருந்தனர்...
காரை நிறுத்த வேண்டிய நெருக் கடி...
பின்னால் -




சொகுசுக் காரின் டிரைவர் தப்பியோட முயன்றான். ஆனால் எதிரிகள் பீச்சிய மயக்க மருந்து அவனை வீழ்த்தியது...
எதிரிகள் காரை நெருங்கி கைவரிசையை காட்ட முயன்ற போது-
சூழ்ச்சி....!
ஏமாற்றி விட்டார்கள்...! அவர்கள் எங்கே?
இந்தக் கிழமையில் இதே நேரத்தில் வாராந்தர ஓய்வை நாடி பனிச் சறுக்கு ஆட்ட தளத்திற்கு இந்தக் காரில் போவதுண்டாம்
வித்தியாசமாக ஏதாவது நடந்தால்தான் அவர்களின் கவனத்தை கவரும்.. இது வழக்கமாக வந்து போகும் அதிகாரியின் கார்... அவர் வழக்கமாக
இன்னமும் அவர்கள் தூதரகத்தின் மீது கண்ணாக இருக்கக்கூடும் மிஸ்டர் காரிகன்...
நம்மை யாரும் பின் தொடரவில்லை! - சொன்னேனில்லையா.... அவர்களுக்கு சந்தேகம் ஏற்படாது என்று?
இதற்கிடையே தன் ஆட்கள் ஏமாந்து போன விஷயம் செவனுக்கு தெரிய வந்தது...
ஜோடனை செய்து கவனத்தை திசை திருப்பி விட்டு, காரிகனும் லிஸாவும் வேறு மார்க்கத்தில் தப்பியிருக்கக் கூடும்!


எதுவுமே வித்தியாசமாக நடக்கவில்லையா? தூதரகத்தை கண்காணித்து நிற்கும் கோமாளிகள் பார்த்த அத்தனை நடவடிக்கை களையும் ஒன்று விடாமல் ஒப்பிக்கச் சொல்
காரிகனும், லிஸாவும் -
பனிச் சறுக்கு ஆடச் செல்வதாகவே நடந்து கொள்வோம்! மைதானத்துக்கு அருகில் ஏதாவது ஒரு விமானம் சுலபமாக கிடைக்கும்...!
இதற்கிடையே -
அந்த சொகுசுக் கார் சென்ற பிறகு வெளியேறிய காரில் வழக்கமாக ஒரு அதிகாரி வாரக்கடைசியில் பனிச்சறுக்கு ஆடச் செல்வார்.... எனவே அதில் விசேஷம் ஏதுமில்லை...
மறுபடியும் ஏமாந்து விட்டீர்களடா.... எருமைகளா... அந்தக் காரை உடனே தேடிக் கண்டு பிடிக்க வேண்டும்.. கார்புவோடு தொடர்பு ஏற்படுத்தி கொடுங்கள் அவருடைய ஒத்தாசை இதில் அத்யாவசியம்....!
மிஸ்டர் காரிகன்! சொகுசுக் கார் ஒரு ஏமாற்று வேலை என்று தெரிய வந்ததும் நம் யுக்தியை சட்டென்று புரிந்து கொண்டிருப்பான்.... அந்த யமன்...!
இருக்கலாம்... ஆனால் நம்மை விரட்டிப் பிடிக்க அவர்களால் முடியாது!



மிஸ்டர் காரிகன் என்று நீட்டி முழக்கு வதை விட நெருக்கடி வேளைகளில் 'பிலிப்' என்று குரல் கொடுப்பது சுலபமல்லவா... எனவே நீ என்னை 'பிலிப்' என்றே இனி கூப்பிடு!
டாக்டர் செவன்.... உங்கள் உத்தரவுப் படியே கார்புவோடு குறுகிய வட்ட டி. வி. இணைப்பில் தொடர்பு ஏற்படுத்தி கொடுத்துள்ளோம்..
நம் அமெரிக்க விஜயம் பற்றி ஏதேனும் கூற என்னோடு தொடர்பு கொண்டாயா...? நம் அமெரிக்க நண்பரை திருப்திப் படுத்திவிட்டால் நம் முக்கூட்டுத் திட்டத்திற்கு வாரி வாரி வழங்குவார்..
யார் - காரிகன்? F-B-I ஆசாமியா?
ஒரு சிக்கல் முளைத்துள்ளது கார்பு. என் முன்னாள் அஸிஸ்டெண்ட் இப்போது காரிகனோடு ஒட்டிக் கொண்டிருக்கிறாள்
அவனை உனக்குத் தெரியுமா கார்பு?
அமெரிக்காவில் நான் பல மோசடி வேலைகளில் ஈடுபட்டேன். அனைத்தையும் முறியடித்து விட்டான் அந்த சண்டாளன்!



உன் பழைய.... அஸிஸ்டெண்ட் அப்படியொரு ஆபத்தான ஆசாமியிடம் போய்ச் சேர்ந்தது நம் துரதிர்ஷ்டமே
அவளை அவன் அமெரிக்காவுக்கு அழைத்துச் சென்றால் நம் அமெரிக்க நண்பனை அவள் அவனுக்கு அடையாளம் காட்டக்கூடும்...
புரிகிறது...! நம் முக்கூட்டுக்குத் தேவையான பணம் கிடைக்காமல் போய்விடும் அபாயம் உருவாகிவிடும்.. ஆனால் காரிகனை எப்படி மடக்குவது?
உனக்குத்தான் உலகம் முழுக்க அடிமட்ட கும்பலோடு தொடர்பு உண்டே? அவர்கள் புறப்பட்டுச் சென்ற காரின் விபரம் எங்களுக்குத் தெரியும்.
அவர்களை தேடிப் பிடித்து அழிக்க வேண்டும்... அவ்வளவுதானே? செய்துவிடலாம்!
காரிகனும் லிஸாவும் பனிச்சறுக்கு மையத்தை சென்றடைந்தனர்...
இங்கிருந்து ஒரு கிலோமீட்டர் தொலைவில் விமான தளம் ஒன்று இருப்பதாக இந்த வரைபடம் சொல்கிறது...
அது என்ன இரைச்சல்?
விர்ர்ர்
ஹெலி காப்டர்...! ஏதாவது ஒரு பனிச்சறுக்கு கிளப்புக்குச் சொந்தமானதாக இருக்கலாம்!


விமான தளத்தை நோக்கி அவர்களுடைய கார் விரைந்த போது —
பிலிப்... பாருங்கள்
அந்த ஹெலிகாப்டர் ஏன் அப்படி நம்மை உரசிக் கொள்ளாத குறையாக தாழப் பறந்துவிட்டுப் போகிறது?
நம்மை அடையாளம் காணும் முயற்சியோ என்னவோ?
செவனின் ஆட்களா?
அல்லது கார்புவின் ஆட்களாகவும் இருக்கலாம். நம் காரை அடையாளம் தெரிந்து கொண்டு விட்டார்கள் - ஆபத்து!
அவர்களைப் பற்றி ஏதாவது தகவல் கிடைத்ததா.... கார்பு
காரை கண்டு பிடித்து விட்டார்கள் என் ஆட்கள்.. உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும்!
அங்கே-
விமான தளத்தை நாம் சென்றடைய விடாமல் ஹெலிகாப்டர் தடை எழுப்பக் கூடும்...
காரில் நாம் விரையும் போது நம்மை குறி வைத்து அவர்கள் குண்டை வீசினால் நம் கதி?



இந்த பனிச் சறுக்கு கட்டைகளை நம்பி - நம் பயணத்தை தொடருவோம்... வா!
அவ்வளவாக எனக்கு பயிற்சி இல்லை என்றாலும் ஓரளவுக்கு சமாளித்து விடுவேன்.... நீ எப்படி லிஸா?
ஆபத்துக்கு உதவும் அனைத்து விளையாட்டு களிலும் பயிற்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று என்னை டாக்டர் செவன் வற்புறுத்தினார்..
எனவே, பனிச் சறுக்கு ஆட்டம் எனக்கு புதிதல்ல..! ஆனால்...அங்கே என்ன சப்தம்!
ஹெலிகாப்டர் திரும்பி வருகிறது...
பனிச் சறுக்கு கட்டைகளை அவர்கள் கட்டிக் கொண்ட போது ஹெலிகாப்டர் நெருங்கி வந்தது
ஹெலிகாப்டர் நம்மைத் தேடித்தான் வருகிறது அந்த தோப்பினுள் புகுந்து கொள்வோம் - வா!


டூம்!
பிலிப்...! நாம் மட்டும் இப்படி ஓடிவராதிருந்தால்-?
நான் எதிர்பார்த்தது தான் லிஸா....
நம் தடங்கள் ''இதோ இங்கே இருக்கிறோம்'' என்று கூவினாலன்றி, சாதித்து விட்டோம் என்ற இறுமாப்போடு அவர்கள் திரும்பி விடுவார்கள்
காரிகனின் அச்சம் சரியாகிவிட்டது.. திரும்பும் வழியில் தோப்பின் மீது தாழ வந்தது ஹெலிகாப்டர்...
வெடிகுண்டு தரையை தொடுவதற் குள் புயலென பாய்ந்து வெளியேறி விரைந்தார்கள்..
சந்தேகத்தின் பேரில் தான் குண்டை போட்டிருக் கிறார்கள்
இருட்டத் தொடங்கி விட்டதால் இனியும் வந்து தொல்லை கொடுக்க மாட்டார்கள்..


ஆனால் -
ஒரு புதிய ஆபத்து உருவாகிக் கொண்டிருந்தது..
ஹெலிகாப்டர் சென்று விட்ட போதிலும் இங்கே நிற்பது ஆபத்தில்லையோ?
இருட்டிவிட்டது.. அத்தோடு நமக்கு பழக்கமில்லாத இடம்.... தொடர்ந்து சென்றால் எங்கே யாவது எக்கச் சக்கமாக விழுந்து எலும்பை முறித்துக் கொண்டு விடுவோம்
அப்போது-
அங்கே கவனி....!
மாட்டிக் கொண்டோம்!
அதனால்தான் ஹெலிகாப்டர் திரும்பி வரவில்லை
இருட்டிவிட்டாலும் தொடர்ந்து நாம் விரைய வேண்டிய நெருக்கடி
எதிரிகள் துரத்தி வர, கும்மிருட்டில், பழக்கமில்லாத சரிவில் இருவரும் அசுர கதியில் விரைந்தார்கள்.
எப்படி இவர்களால் இவ்வளவு சீக்கிரத்தில் நாம் இருக்கும் இடத்தை தெரிந்து கொண்டு துரத்திவர முடிந்தது?
பின்னால் துரத்தி வரும் ஆபத்தை சரி வர புரிந்து கொண்ட நமக்கு..



... நம்மை எதிர் நோக்கியுள்ள அபாயத்தை பற்றியும் தெரிந்திருந் தால் நன்றாக இருக்கும்
இருட்டில், எதிர்ப் பட்ட மரங்களும், பாறைகளும் உயிரைக் குடிக்க காத்திருக்கும் அரக்கர்களாக அச்சுறுத்தின
வேறொரு பேரபாயம் அவர்களை விழுங்க காத்திருந்தது.
ஆனால் - குறுக்கே கிடந்த கட்டையில் இடித்துக் கொண்டு லிஸா சறுக்கி விழுந்து விட்டாள்
லிஸா.... ஜாக்கிரதை!
காரிகன் மின்னல் வேகத்தில் செயல் பட்டார்



பனிப் பிளவை நோக்கி நழுவிய லிஸாவை காப்பாற்ற சறுக்கு கைத்தடியை சட்டென்று நீட்டினார் காரிகன்..
இதை பிடித்துக் கொள்... லிஸா
எதிரிகள் ஏன் நம்மை நெருங்கி வரவில்லை என்று இப்போதுதான் புரிகிறது
நான் கீழே விழுந்திராவிடில், இருவருமே நில்லாமல் நேராக சரிவில் பாய்ந்து செத்துப் போயிருப்போம்....
எழுந்து ஆசுவாசப்படுத்திக் கொண்டபின்-
பிலிப்....! ஏன் இப்படி - ?
எதிரிகள் இதைத்தானே எதிர்பார்த்தார்கள் -அவர்களை ஏமாற்ற வேண்டுமே என்றுதான்!
தன் உபகரணங்களை சரிவில் நழுவ விட்டார் காரிகன்
பாறை மறைவில் பதுங்கி நில்.... இதோ நானும் வந்து விடுகிறேன்
பின்னர் ஒரு சிறு கிளையை பிடித்து தன் கால் தடங்களை அழித்தவாறு விலகி வந்தார் காரிகன்
நான் ஏற்படுத்திய சறுக்குத் தடங்கள் மட்டுமே அவர்கள் பார்வையில் படவேண்டும்...
அதோ எதிரிகள் வந்து விட்டார்கள்... நான் சீக்கிரமே பதுங்கிக் கொண்டு விடவேண்டும்.



நில்லுங்கள்..! இல்லையேல், காரிகன் போய்ச் சேர்ந்த இடத்துக்கே நீங்களும் போய் விடுவீர்கள்
நாம் எதிர்பார்த்த மாதிரியே பனிப் பிளவினுள் விழுந்து செத்து விட்டார்கள் என்றா சொல்கிறாய்
அதோ... தடங்களை பார் - புரியும்!
பிளவை நெருங்கி வந்து நோட்டம் விட்டு திருப்தி யடைந்தனர் எதிரிகள்
தன் காலடி தடம் இன்னும் முழுமையாக மறையவில்லையே என்ற அச்சம் காரிகனுக்கு...
நல்லவேளையாக இருட்டில் தடங்கள் அவர்களுடைய பார்வையில் படவில்லை..
அடுத்து -
வாருங்கள் போகலாம்... இவர்கள் கதை முடிந்தது என்ற நல்ல சேதியை கேட்க அங்கே கார்பு துடித்துக் கொண்டிருப்பார்
கீழே போய்
உறுதி செய்து கொள்ள வேண்டாமா?
அவர்கள் போய் விட்டார்கள்! நாம் கணமும் கால விரயம் செய்யாமல் செயல்பட வேண்டும்
ஆனால்.... கால்நடையாக எங்கே, எப்படி போவது?



வேறு வழி? - அவர்கள் முடிந்தவரை வேகமாக நடந்தார்கள்...
நாம் இவ்வழியாக சென்றபோது இப்பகுதியில் எங்கோ ஒரு விளக்கு எரியக் கண்டேன்...
அதோ... அங்கே தெரிகிறது பாருங்கள்...
அந்த விளக்கு நம்பிக்கையூட்டியது.
அங்கே போனால் உதவி கிடைக்கலாம்...
நெருங்கிச் சென்ற போது...
லாட்ஜ்! உள்ளூர் அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு நாம் உதவி கோரலாம்!
ஆனால் - அவர்கள் முன்னேறியபோது..
ஹெலிகாப்டர்..
நம் காரை தாக்கிய அதே ஹெலிகாப்டர்
அது ஏன் இங்கே இறங்குகிறது?
நம்மை துரத்திய எதிரிகள் எப்படி அவ்வளவு சீக்கிரத்தில் வரமுடிந்தது என்று இப்போது புரிகிறது... அவர்களுடைய தளம் இதுவாக இருக்கக் கூடும்!



வா.. ஹெலிகாப்டர் தரையிறங்கும்போது என்ன நடக்கிறது என்று அருகிலிருந்து பார்ப்போம்-
அடுத்து--
பிலிப்! அதோ... லாட்ஜை விட்டு வெளியேறி வருகிறவன்தான் கார்பு!
இவன்தானா....?
மறைவிலிருந்து கவனித்துக் கொண்டிருந்தார்கள் காரிகனும் லிஸாவும்..
நேராக கோரல் ஸிடிக்கு விடிகாலை விமானத்தில் டிக்கட் ரிசர்வ் செய்யப்பட்டு இருக்கிறது ஸார்.
குட்....! டாக்டர் செவனும் தன் தலைமையகத்தை விட்டு இன்று மாலை கிளம்பி விட்டார்..!
காரிகன், லிஸா இருவரின் மரணம் உறுதி செய்யப்பட்டதும், அமெரிக்கா சென்று நான் செவனோடு சேர்ந்து கொண்டு வெள்ளோட்டத்தை நடத்திக் காட்டலாம்.... துரத்திச் சென்ற குழு திரும்பி வந்து சேர்ந்ததும் நாம் விமான நிலையத்திற்கு செல்வோம்
அவர் அமெரிக்கா வில் கூடும் இடம் இப்போது நமக்கு தெரிந்து விட்டது...!
தெரிந்தால் மட்டும் போதுமா? உடனடியாக நாமும் அங்கே போய்ச் சேரவேண்டுமே!


அங்கே அமெரிக்க கூட்டாளியை நாம் நிச்சயமாக காண முடியும்!
நாம் அங்கே போய்ச் சேரும் வழியைப் பார்ப்போம் - முதலில்!
கார்புவின் ஹெலிகாப்டரையே கிளப்பிக் கொண்டு போனால் என்ன - ஓடி வா லிஸா
அதே சமயம் லாட்ஜை விட்டு வெளியே வந்தான் கார்புவின் கையாள் ஒருவன்
ஏய்.... நில்லுங்கள் - இல்லையேல் சுட்டு விடுவேன்


லாட்ஜின் உள்ளே...
வெளியே என்ன இரைச்சல்... கூப்பாடு... யாரது ஹெலிகாப்டரை ஸ்டார்ட்செய்வது? - காரிகனா?
நன்றாக பிடித்துக் கொள்....! முரட்டுத் தனமாக மேலே ஏற்ற வேண்டிய நெருக்கடி!
கார்புவின் உத்தரவின் பேரில் ஹெலிகாப்டரை குறிவைத்து பல துப்பாக்கிகள் ஒருசேர முழங்கின
டுமீல்!
டுமீல்!
அவர்கள் தப்பிவிடக் கூடாது... சுட்டுத் தள்ளுங்கள்...


கார்பு ஓடி வந்தான்.. ஆனால் நெருங்குவதற்குள் மேலேறி விட்டது ஹெலிகாப்டர்... ஆனால்-
சரமாரியாக சுடுகிறார்கள்.... தப்பி விலகிச் செல்ல முடியாது போலிருக்கிறதே!
நாமும் பதிலடி கொடுக்க ஏதாவது வசதி இதில் இருக்கக் கூடும்
இந்த திறப்பினுள் நான் எதிர்பார்க்கும் பொருள் மட்டும் இருந்துவிட்டால்-
ஹாய்ய்...! அதிர்ஷ்டம் நம்மை கைவிட்டு விடவில்லை... உனக்கு இதை கையாளத் தெரியுமா லிஸா
டமால்
அப்போதே சொன்னேனில்லையா.. எல்லா உபகரணங்களையும் கையாள பயிற்சி எடுத்துக் கொள்ளச் சொல்லி டாக்டர் செவன் வற்புறுத்தி வந்தார் என்று!
டாக்டர் செவன் தன் ஆயுளில் செய்த ஒரே நல்ல காரியம் இதுவாகத்தானிருக்கும்!


ஒருவழியாக ஹெலிகாப்டர் பத்திரமாக விலகிப் பறந்தபோது விடியத் தொடங்கியது...
பிலிப்...! நாம் இப்போது எங்கே போகிறோம்!
கார்புவின் ஹெலிகாப்டரை இரவல் வாங்கிக் கொண்ட நாம் கோரல் ஸிடிக்கு அவன் ரிசர்வ் செய்துள்ள விமான டிக்கட் வீணாகிப் போக அனுமதிக்கலாமா?
அதே சமயம் கீழே -
அவர்கள் விமான தளம் நோக்கிப் போ கிறார்கள்- விரட்டிப் பிடியுங்களடா... அரை வேக்காட்டு முண்டங்களா!
காரை கொண்டு வாருங்கள்... முடிந்தால் அவர்களை விமான தளத்தில் மடக்கி விடப் பார்ப்போம்
விமான தளத்தில் ஹெலிகாப்டரை தரையிறக்கினார் காரிகன்
கோரல் ஸிடிக்கு நீங்கள் செய்துள்ள ரிசர்வேஷனா மிஸ்டர் கார்பு..? இதோ-டிக்கட்டுகள்!
ஈவிரக்கம் காட்ட இது அல்ல தருணம்... அந்த ஜோடி கண்ணில் பட்டால் தயங்காது சுட்டுத் தள்ளிவிடுங்கள்..
மிஸ்டர் கார்பு!
ஓ.... நாம் தாமதித்து விட்டோம்!




கோரல் ஸிடி.... வளைகுடா கடற்கரையோரம் வேகமாக பிரசித்தி பெற்றுவரும் பொழுது போக்கு மையம்...
பிலிப்புக்கும், முக்கூட்டு குழுவினருக்கும் நேரடி மோதல் நிகழவிருக்கும் தளம் என்றும் இந்த இடத்தை குறிப்பிடலாம்!
பிலிப்...!
ஓ.... பிலிப்... அங்கே பாருங்கள்! பால்கனியில் தென் படும் நபர்தான் டாக்டர் செவன் சந்திக்க நினைக்கும் அமெரிக்க செல்வந்தர்!
இனி நாம் யாருக்கும் பயப்படத் தேவை இல்லை லிஸா... இது என் தாயகம்... உள்ளூர் F. B. I. தலை மையகத்துக்கு போன் செய்து..
அவன்தானா


ஒருமுறை பார்த்து விட்டால் அந்த முகத்தை ஆயுளுக்கும் மறக்க மாட்டேன் - என் ஞாபக சக்தி அப்படி!
சந்தேகமில்லையே!
பிடித்தாலும் பிடித்தார்கள்... புளியங் கொம்பாகத்தான் பிடித்திருக் கிறார்கள்.. அவர் இங்கே மிகவும் பிரபலமானவர்!
பக்ஸ்டன் - அவருடைய பெயர்..! இளவயதிலேயே அதிர்ஷ்டத்தின் பார்வை அவர் மீது அழுத்தமாக விழுந்தது... கோடி கோடியாக குவித்துக் கொண்டிருக்கிறார்
விமானத்தை விட்டு இறங்கியதுமே அவர் நம் பார்வை யில் பட்டது ஒரு நல்ல சகுனம் - இல்லையா?



அது நம் அதிர்ஷ்டம் எனில் அந்த அதிர்ஷ்டம் நம்மை அரவணைத்துக் கொண்டிருக்கும் போதே மிச்ச காரியங்களையும் துரிதமாக செய்து முடிப்போம்... வா!
உங்கள் தலைமை யகத்துக்கு தகவல் கொடுப்பது பற்றி -
அதை பிறகு பார்த்துக் கொள்வோம்
இவரை இப்போது நழுவ விட்டால் பிறகு பிடிக்கவே முடியாது போகலாம்!
டாக்ஸி!
அந்த ஆசாமியும், பொண்ணும் நீங்கள் சொன்னமாதிரியே காரியம் பண்ணு கிறார்கள் ஸார்!
டாக்டர் செவன் முன் கூட்டியே எனக்கு தகவல் அனுப்பியது புத்திசாலித்தனம்!
கோரல் ஸிடிக்கு வெளியே வந்து விட்டனர்...
நீங்கள் உளவுத்துறை அதிகாரி என்று உங்களுடைய அடையாள அட்டை சொன்னாலும் இது தனியார் ரோடு என்று சொல்ல கடமைப்பட்ட வனாவேன்
புதிதாக கட்டப்பட்டு வரும் ஹோட்டலை நோக்கிச் செல்கிறது. நாம் இப்படியே போனால் அவர் களை நாம் பின் தொடரும் உண்மை வெட்ட வெளிச்சம் ஆகிவிடும்...
அப்படியானால் இங்கேயே நிறுத்து! நாங்கள் இனி நடந்தே போய்க் கொள்கிறோம்


இது... சரியாகப்பட வில்லை பிலிப்! யாரும் இப்படி அடாவடியாக ஊடுருவதை முக் கூட்டு கூட்டத்தினர் சகித்துக் கொண்டு சும்மா விருக்கமாட்டார்கள்!
உண்மைதான் லிஸா... அதனால் தான் நான் வே றொரு திட்டம் வைத்திருக்கிறேன்
TAXI
தன் திட்டத்தை காரிகன் விவரித்தார்...!
இப்படி நீங்கள் தனியாக செல்வதை நான் விரும்பவில்லை
TAXI
நான் சொன்னமாதிரி உள்ளூர் F. B. I. தலைமையகத்துக்கு நீ போ லிஸா...
டாக்ஸி லிஸாவோடு திரும்பிச் சென்று விட்டது..! கவிழ்ந்து வந்த இருளினூடே, பக்ஸ்டனின் கார் சென்ற திசையில் காரிகன் விரைந்து நடக்கலானார்
ஆனால் அவர்களுடைய நடவடிக்கைகளை எதிரிகள் கவனித்துக் கொண்டிருந்தனர்..
அந்த டாக்ஸியை மடக்கி விடுவார் கள்... டாக்டர்...
அதோ... நான் எதிர் பார்த்த மாதிரியே ஹீரோத்தனமாக காரிகன் வந்து கொண்டிருக்கிறான்..
வழியில் லிஸா சென்ற டாக்ஸிக்கு ஆபத்து..
ம்ரியாதையாக எங்களோடு வாருங்கள்..
ஹே... நீ..... நீ... என்ன இது?


இதற்கிடையே -
காரிகனும் லிஸாவும் தப்பிவிட்டார்கள் என்று கார்பு அனுப்பிய செய்தியை கேட்டதும் இன்றிரவு நடப்பதாக இருந்த வெள்ளோட்டம் ரத்தாகி விடும் என்னறல்லவா நினைத்தேன்
விமான தளத்தில் நான் திட்டமிட்டே அவர்கள் முன் தோன்றியது. அவர் களை மீண்டும் நம் பிடியில் கொண்டு வந்துவிட்டது!
இம்முறை காரிகன் நம்மிடம் பாடம் கற்றுக் கொள்ளப் போவது நிச்சயம்!
காரிகன் விஷயத்தில் நீங்கள் கையாளும் வழிமுறைகள், உங்களுடைய முக்கூட்டு யோசனைமீது ஆழ்ந்த ஈடுபாடு கொள்ளச் செய்கிறது என்னை!
இன்றிரவு நடக்கப் போகும் வெள்ளோட்டம் உங்களுக்கு இன்னும் ஏதாவது சந்தேகம் இருந்தால் அறவே போக்கி விடும்.
மூவரும் சந்தித்துக் கொள்ளும் இலக்கு நோக்கி பதுங்கிப் பதுங்கி முன்னேறினார் காரிகன்
இரவு நேரம் -கார்கள் வந்து சேர்ந்தன...
எல்லோரும் வந்தா யிற்று டாக்டர்.. வெள்ளோட்டத்தை தொடங்கி விடலாமா?
ஓ..... நான் ரெடி!



நம் மூவரை தவிர இதை மற்றவர்கள் பார்ப்பதை -
அவர்கள் என் வல்லுனர்கள்...! அவர்களுக்கு இதில் திருப்தி ஏற்படாவிட்டால் என்னிடமிருந்து ஒரு பைசா கூட பெயராது..!
அபாய எச்சரிக்கை மணி! செக்ஷன் - 5ல் யாரோ வேலியை தாண்டியிருக் கிறார்கள்!
வேறு யார் - காரிகனாகத் தானிருக்கும்
அவனுக்கு ஒரு அட்டகாசமான வரவேற்பு கொடுப்போம்!
கோழிக் குஞ்சை அமுக்குவது போல் அவனை மிகச் சுலபமாக அமுக்கிவிடலாம்
என் ஹோட்டல் கட்டி முடிக்கப்பட வில்லையே தவிர பாதுகாப்பு ஏற்பாடு முழுமையாக செய்யப் பட்டிருக்கிறது....
செக்ஷன் - 5.... இந்தப் பகுதிதான்
அவன் அருகில்தான் எங்கோ பதுங்கிக் கிடப்பான்
ரொம்ப கரெக்ட்... தம்பி! சரியாக சொன்னதற்கு இந்தா என் பரிசு!
கும்
இரண்டு காவலாளி களையும் வீழ்த்தி விட்டு முன்னேறி னார் காரிகன்
விளக்குகள்! வெள்ளோட்டம் அரங்கேறும் இடம் அதுவாகத் தானிருக்கும்!



எல்லோரும் வந்தாயிற்று...! ஆரம்பிக்கலாமே!
காரிகனின் வரவுக்காக காத்திருக்கிறேன்
என் லேட்டஸ்ட் கண்டு பிடிப்பான ஸோனிக் ஷாக் இன்டியூஸரை இப்போது உங்களுக்கு அறிமுகப்படுத்து கிறேன்.
சப்த அலைகளை அதிவேக அதிர்வலைகளாக்கி எந்த ஒரு இலக்கையும் சுலபமாக தகர்த்து விடமுடியும் என்ற அடிப்படை தத்துவத்தின் பேரில் இயங்குகிறது இந்தக் கருவி!
இதோ... இதன் செயல் திறனை இப்போது செய்து விடுகிறேன்
இதை எதிர்பார்த்துத் தானே நான் இங்கே வந்திருக்கிறேன்
ஆனால்-
உன் வித்தையெல்லாம் இனியும் செல்லா தடா.... மூடா!


காரிகனுக்கு சுயவுணர்வு திரும்பியபோது
இன்னும் சற்று முன்னதாகவே உன்னை எதிர்பார்த்தோம் காரிகன்... உன் தொல்லை வரவர சகித்துக் கொள்ளவே முடியவில்லை...
இம்முறையும் உனக்கு தோல்வி தான் செவன்!
பெரிய ஹீரோ போல நீ தனியாக வந்து இங்கு மாட்டிக் கொண்டதற்கு நீ வருத்தப்படப் போகிறாய்
லிஸா உன் உள்ளூர் சகாக்களை அழைத்துக் கொண்டு உன் உதவிக்கு வருவாள் என்று நீ எதிர்பார்த்தால் ஏமாந்துதான் போவாய்!
லிஸா..... உனக்கு ஆபத்தில்லையே?
இந்த வினாடி வரை இல்லை.... பிலிப்! உள்ளூர் F. B. I. தலைமையகத்தை சென்றடைவதற்குள் இந்த கிராதகர்கள் மடக்கி விட்டார்கள்!


நீ இப்போது அம்பேலாகிவிட்டது புரிகிறதா? நீ ஆவலோடு எதிர்பார்த்து வந்த வெள்ளோட்டத்தை தொடங்கலாமா?
காரிகனும், லிஸாவும் கைதிகளாக நிற்க செவன் தன் வெள்ளோட்டத்தை தொடர்ந்தான்
அறையை சுற்றி டி. வி. மானிட்டர்கள் .. நிறைய உள்ளன. அவற்றை கவனமாக பாருங்கள்...
அட இது பாப்புலர் தீவுக்குப் போகும் பாலமாயிற்றே...! புதிய ஹைவே கட்டிவிட்ட தால் இந்தப் பாலத்தை உடைக்கப் போவதாகச் சொன்னார்கள்!
அரசாங்கத்திற்கு அந்தச் செலவை இப்போது மிச்சப் படுத்தப் போகிறோம் - பாக்ஸ்டன்
தன் கண்டு பிடிப்பான ஸோனிக் ஷாக் இன்டியூஸரின் செயல் திறனை மற்றவர்கள் வியக்கும் வகையில் நிரூபித்துக் காட்டினான் செவன்.


எல்லோருடைய கவனமும் டி. வி. மானிட்டரில் இருந்த சந்தர்ப்பத்தில் காவலாக நின்றவனை அடித்து வீழ்த்திவிட்டு ஓட்டம் பிடித்தார்
பிடியுங்கள் அவனை - படிகட்டில் ஏறி ஓடு முன்!
பதறவேண்டாம்... என் ஆட்கள் சுலபமாக மடக்கி விடுவார்கள்
அவனை உயிரோடு பிடிக்க வேண்டும்... ஒரு மானிடனின் மீது ஷாக் இன்ட்யூஸரின் ஆதிக்கம் எவ்வளவு என்று காட்ட அவனை பயன்படுத்த உத்தேசம்!
தப்பி வெளியேறி ஓடுவதல்ல காரிகனின் நோக்கம்
இதோ.... நான் எதிர் பார்த்து ஓடி வந்த மெயின் சுவிட்ச்!
பக்ஸ்டனின் ஆட்கள் நெருங்கி வந்து விட்ட கணத்தில் சுவிட்சை போட்டார் காரிகன்


ஹோட்டல் விளக்குகள் அனைத்தும் பளீரென்று எரியத் தொடங்கின.
வெளியில் இருப்போர் கவனத்தை வெளிச்சம் ஈர்க்கு முன் விளக்குகள் அணைக்கப்பட்டு விடும் காரிகன்...
தப்பியோடும் வாய்ப்பை கோட்டை விட்டு விட்டாய் - மடத்தனமாக!
மீண்டும் எதிரிகளின் பிடியில் இருந்தார் காரிகன்
இவனை என்ன செய்ய.... பாஸ்!
சுவரோடு சுவராக நிறுத்தி கட்டிப் போடுங்கள்
அதிர்வலைகளை வாங்கும் கருவி இது காரிகன், அதிர்வு அலைகளை வாங்கிய பாலம் எப்படி தகர்ந்து நொறுங்கியது என்று பார்த்தாய் அல்லவா....
பக்ஸ்டனின் சுவர்கள் இன்ஷ்யூர் செய்யப் பட்டிருக்கும் என்று நம்புகிறேன்..
நுட்பமாக கண்ட்ரோல் செய்யப் பட்டிருப்பதால் உன்னைத் தவிர சுவருக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது - புரிந்து கொள்
ஐயோ... பிலிப்!



பாலத்துக்கு நேர்ந்த கதியை பார்த்தீர்களல்லவா. இப்போது காரிகனின் தயவால், மானிடர்கள் மீது இது எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை சோதனை மூலம் நிரூபித்துக் காட்டுகிறேன்
இது அநியாயம்.... அக்கிரமம்!
ஸோனிக் கருவியை செவன் அட்ஜஸ்ட் செய்து கொண்டிருந்த வினாடியில்-
ஏய்... பெண் குரங்கே.. வீணாக கூச்சல் போடாதே!
உன்னையும் சேர்த்து நிறுத்தவில்லையே என்பதை எண்ணி சந்தோஷப்படு!
மோசம் போனோம்... போலிஸார் கேட்டை தகர்த்துக் கொண்டு உள்ளே புகுந்து விட்டார்கள்...
காட்டாற்று வெள்ளமாக உள்ளே ஓடி வருகிறார்கள்


எப்படி? இங்கே நடப்பதை அவர்கள் தெரிந்து கொண்டிருக்க வாய்ப்பே இல்லையே!
விளக்கை நீ போட்டது அவர்களுக்கு சமிக்ஞை காட்ட என்று வைத்துக் கொண்டால்..
...முன் கூட்டி அவர்களோடு இது பற்றிப் பேச உனக்கு அவகாசம் இருந்ததில்லையே - பின்னே எப்படி?
போலிஸார் சுற்றி வளைத்துக் கொண்டு விட்டனர்...
இதை எப்படி நீ சாதித்தாய் காரிகன்?
யூகித்திருப்பாய் என்றல்லவா நினைத்தேன் - பக்ஸ்டன்
மூளையை கொஞ்சம் உபயோகித் திருந்தால் இங்கே பரிசோதனையில் நேரத்தை வீணடிக்காமல் நீங்கள் எப்போதோ பறந்தோடிப் போயிருப்பீர்கள் -
நானும் லிஸாவும் வந்த டாக்ஸி ஞாபகம் இருக்கிற தல்லவா!
ஆனால் அதைத் தான் வழியில் மடக்கி விட்டோமே


அதில் இரு வழி - ரேடியோ அமைப்பு உள்ளது. லிஸாவை பிரியுமுன் அதன் மூலம் நான் உள்ளூர் F. B. I. தலைமையகத்திற்கு தகவல் கொடுத்து விட்டேன்
பக்ஸ்டன்... விலகி நில்! காரிகனை பலி கொண்டு விடலாம்!
ஆனால் செவனின் கூச்சல் பக்ஸ்டனின் செவியில் விழவேயில்லை
முட்டாள்..! F. B. I. யை வரவழைத்த சமார்த்தியத்தைப் பற்றி விசாரித்துக் கொண்டு நிற்கிறான் - தவறை சரி செய்ய ஒரு வாய்ப்பை வீணடித்துக் கொண்டு!
முக்கூட்டு இனி உருப்படாது..! பக்ஸ்டனும் சேர்ந்து மடிந்தால் எதுவும் நஷ்டமாகி விடாது
ஆனால் -
ஏய்.. லிஸா! விலகிப் போ அப்பால் - இல்லையேல்...
செவனின் கருவியிலிருந்து ஸோனிக் அதிர்வலைகள் வெளிப்பட்ட தருணத்தில், காரிகனை பிடித்துத் தள்ளி அதன் இலக்கிலிருந்து அப்புறப்படுத்தி விட்டாள்...
ஆனால் பக்ஸ்டனுக்கு அதிர்ஷ்டமில்லை.
போலீஸை கண்டதும் என்னை காத்து
நின்ற காவலாளிகள் ஓட்டம் பிடித்து விட்டதால் நான் இங்கேவர முடிந்தது..
நீ மட்டும் தள்ளிவிட்டிராவிடில் இந்நேரம் நான் சாம்பலாகிப் போயிருப்பேன்



பக்ஸ்டனுக்கு இன்னும் சுயவுணர்வு பெறவில்லை.. டாக்டர் செவனை கவனிப்போம் வா..!
எங்கோ மாயமாக மறைந்தோடி விட்டான்!
பின்னர் - F. B. I அதிகாரிகளுடன் சேர்ந்து கொண்டபோது
ஹோட்டலை சுற்ற நம் ஆட்கள் காவ நிற்கிறார்கள் செவன் எப்ப தப்பிச் சென்றிருக்க முடியும்?
தப்பிக்க உத்தர வாதமான வழிமுறை களை முன்கூட்டியே ஏற்பாடு செய்து கொள்ளாமல் செவன் எந்த ஒரு இடத்திற்கும் செல்வதில்லை
அவனோடு நடந்த ஒவ்வொரு மோதலிலும் இவ்வுண்மை நிரூபிக்கப் பட்டிருக்கிறது லிஸா..!
அதே சமயம்-
இந்த ராட்சஸ கழிவு நீர் குழாய்க்கு ஒரு நுழைவு இருப்பதை அந்த சண்டாளர்கள் கண்டு பிடிப்பதற்குள் நான் வெளியேறி வெகு தொலைவு போய்விட வேண்டும்.. அடேய் காரிகன் - மீண்டும் வருவேனடா உன்னை சந்திக்க!




முற்றும்.

## இலங்கை வாசக நண்பர்கள் கவனத்திற்கு :

சமீப காலமாகவே பல இலங்கை வாசகர்கள் நமது வெளியீடுகளின் சந்தா விபரம் பற்றிக் கேட்டு
ருகின்றனர். ஏர்-மெயில் கட்டணங்கள் மிக அதிகமாக இருப்பதால் மாதம் ஒன்றிற்கு தபால் செலவு +
ரதிகளின் விலை சேர்ந்து மொத்தம் ரூ. 27/- ஆகிறது. அவ்வளவு பணம் செலுத்தி புத்தகங்களைப் பெறுவது
ல்லா வாசகர்களுக்கும் சாத்தியப்படாது. என்பதால் இலங்கையிலேயே நமது பிரதிகள் கிடைத்திட ஏற்
டு செய்து வருகிறோம். இலங்கையில் கீழ்க்கண்ட முகவரியில் நமது பிரதிகள் அனைத்தும் கிடைக்கும்
ன்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**M/s. L. முத்தையா அன் கோ,**

155, பிரின்ஸ் தெரு, 2 வது மாடி,

கொழும்பு - 11 தொலைபேசி - 549099.


அந்த இத்தாலிய இராணுவ அணி வகுப்பில் அனைவரின் கவனத்தையும் ஈர்த்துக்கொண்டு கம்பீரமாக பவனி வந்த ராட்சஸ வெடிகுண்டு வாகனத்தை ஓட்டிச் சென்றவர்கள் பெருச்சாளிப் பட்டாளம் என்ற பெயர் பெற்ற பிரிட்டிஷ் கமாண்டோக்கள் என்றஉண்மை அங்கிருந்தோர் எவருக்குமே தெரியாது
பெருச்சாளிப் பட்டாளம்!
வாழ்க டாக்கெட்டோ... வாழ்க டாக்கெட்டோ...
இவர்கள் தான் 'பெருச்சாளிகள்'!
மாத்யூ டான்ஸர்-கத்தி வீச்சு இவனுடைய சிறப்பாற்றல்... இது வரைகுறி தவறியதாக பேச்சே கிடையாது கொள்ளையடித்த குற்ற -திற் காக ஏழாண்டு சிறைவாசம்பெற்றவன்
ரொனல்டு வீஸல்- பெட்டகத்தை உடைத்து திறப்பதில் நிபுணன். இராணுவ கருவூலத்திலேயே தன் கைவரிசைய்ய காட்டி யதற்கு பலன்-எட்டா- ண்டு சிறைவாசம்
லான் 'ஸ்கார் பேஸ்' ரோஜன்- விளையாட்டு வீரன். படையைவிட்டு சொல்லாமல் கொள் ளாமல் ஓட்டம் பிடித்த குற்றத்திற்காக 15 ஆண்டு சிறைவாசம் பெற்றவன்.
காபூல் ஹாஸன்-திடீர் ஆவேசத்தில் மேலதி- காரிகளை தாக்கிய குற்றத்திற் காக 10- ஆண்டு சிறைவாசம் பெற்றவன்
மேஜர் டக்கார்ட்- பெருச்சாளிப் பட்டாளத்தை உருவாக்கியவர்... அதன் தலைவர்...


அணிவகுப்பு தொடங்க 24மணி நேரம் முன்னதாக ஒருசவக் கிடங்கில் பெருச்சாளிப் பட்டாளத்தினருக்கு பணியின் விபரம் விளக்கப்பட்டது.
யார் ஸார் இது?
என்ன இது-மேஜர்?கிண்டல் பண்றீங்களா? இன்றைக்கு ஏப்ரல் 1 இல்லையே
கிண்டல் சமாச்சாரம் இல்லை... ரொம்ப சீரியசான விஷயம்.இவர்-ஜார்ஜ் ஹாஸ்லே... உளவுத் துறையில் பெரும்புகழ் ஈட்டியவர். இன்று காலையில் திடீரென்று மாரடைப்பால் இறந்து விட்டார். நமது பணி இவரையும் உயிரோடு இருக்கும் இத்தாலிய இராணுவ தலைவன் டாக்கெட்டோவையும் இடம் மாற்றுவது!
பிணத்தையா? சரியான கேலி கூத்து!
அப்படியே வைத்துக்கொள் டான்ஸர்... ஆனாலும் நாம் இதை செய்து முடிக்கிறோம்.ஜார்ஜ் தோற்றத்தில் அச்சாக டாக்கெட்டோ மாதிரியேஇருக்கிறார்.எனவே யாருக்கும் சந்தேகம் வராது
இன்று இங்கே நடைபெறும் இராணுவ அணிவகுப்பில் நாமும் கலந்து கொள்கிறோம்எனவே தான் பிரேதம் இருக்கிற ஐஸ் பெட்டி ராட்சஸ வெடிகுண்டு வடிவத்தில் உருவாக்கப் பட்டிருக்கிறது.
திட்டத்தின்படி ஒரு விமானம் அந்த வெடி குண்டுடிரக்கை ரோமுக்குவெளியே உள்ள ஒரு ரகசிய விமான தளத்தில் கொண்டு வந்துஇறக்கிசென்றது
எதிரே-செக்போஸ்ட் மேஜர்!


பதருதீர்கள்... நாம் அணிந்திருக்கும் இத்தாலிய இராணுவ சீருடை சந்தேகம் எழாமல் பார்த்துக் கொள்ளும்
வாழ்க டாக்கெட்டோ
நா...நான்...கொஞ்சம் பதட்டம் அடைந்து விட்டேன் ...பரபரப்பில் மிக குறைந்த டெம்ரேச்சரில் மீட்டரை வைத்து விட்டேன் போலிருக்கிறது!
என்ன அது— பனிப் பிசிறு?
ஆமாம்... ஏதோ விவகாரம்? ஏய்ய்... எல்லோரும் கீழே இறங்கி வாருங்கள்!
டேய் வீஸல... என்ன இது பொறுப்பில்லாமல்? பனிப் பிசிறு வெளியே உருவாகிறமாதிரியா காரியம் பண்ணுவது?
உங்களை விசாரிக்கவேண்டும். கைகளை உயர்த்துங்கள்!
இனி... கத்தியை உருவி எடுக்க வசதி இல்லை!


ஆனால்... உறைந்தபனி எஃகுக்கு ஈடானஉறுதி படைத்தது என்பதால் இந்த பனிப்பிசிறு கத்தி யின் வேலையை கச்சிதமாக செய்து முடிக்கும்!
ஆஆஆ...
விஷமிகள்...!வாஓடிப் போய் போன் செய் வோம்உதவிகோரி!
அவர்களை தடுத்து நிறுத்து ஹாசன் _ எப்படியாவது!
எப்படியாவது? ஓ.கே... இப்படி செய்கிறேன்!
ஆஆஆ...
ணொங்!


இன்னொருமுறைஇப்
படிஏதாவதுதப்பு
பண்ணினாயோ
உன்னே உயிரோடு
சமாதி வைத்து
விடுவேன்—
ஜாக்கிரதை!
ஸாரி... மேஜர்!
ரோம் நகரினுள் வந்த
டைந்தபிறகு—
நைஸாக அணிவகுப்பினுள்
நுழைந்து கலந்து விட
வேண்டும்.ரோஜன்,டான்
ஸர்,உங்களுடையபங்குப்
பணி பற்றி சந்தேகம்
ஏதுமில்லையே?
நோ
இத்தாலியர்களுக்கு எவ்வித
சந்தேகமும் எழவில்லை!
அனைவரும் கவனிக்
கும்படியான நிலைக்கு
வந்து விட்டோம்
துணிச்சலாக்
செயல்பட வேண்டும்!
ஹே... எவ்ளோ
பெரிய வெடிகுண்டு!
வாழ்க டாக்கெட்டோ!


டான்ஸர் சரியான தருணத்தை எதிர்பார்த்து காத்திருந்த வேளையில்....
அணிவகுப்பு படு அட்டகாசம்... நம் பெருந்தலைவரின் நலன் கருதி இதை பருகுவோம் காம்ரேட்!
எனக்கு அதில் சம்மதமில்லை... காம்ரேட்! எனவே .........
ஹேய்.... நீ?
இனி வேறு யாராவதுவந்து தொலைக்காத வரை சரி. இம்மாதிரி கத்திகள். இப்போது ஏகப்பட்ட விலை விற்கின்றன....
ரோஜன்எவ்விதஎதிர்ப்புமின்றி தன்முயற்சியில்முன்னேறிக் கொண்டிருந்தான்.
இந்தசுற்றுச்சுவரில்ஏறுவது கடினமானகாரியமாக இருக்கும் என்று சொன்ஞர்டக்கார்ட்...என்திறமையைப் பற்றிரொம்பவும் இளப்பமாக நினைத்து விட்டார்!


சுடுவதற்கு ஏற்றநிலே இந்த இடம்! காத்திருந்து உரியதருணத்தில் நான் செயல்பட வேண்டும்!
என்ன ஒரு கண்கொள்ளாக் காட்சி நம் படையின் வலிமைக்குஇந்த அணிவகுப்பு எடுத்துக் காட்டு—இல்லேயா... கமாண்டர் டக்கெட்டோ
நம்மை எவராலும் முறியடிகக முடியாது!
டாக்கெட்டோ நிற்கு மிடத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது!
தயாராக இருங்கள்! முதலில் டான்ஸர்... அடுத்து ரோஜன் பின்னர்தான் நாம் செயல் பட வேண்டும்..
கொசுக்களேப் போல் இங்கிலீஷ் படையினரை நாம் சுலபமாக நசுக்கிவிடலாம்.ஒரு பெரிய தாக்குதலுக்கான அனேத்து முன்னேற்பாடுகளேயும் நாம் செய்து முடித்து விட்டோம். எதிரிகள் நம்முடைய அதிரடி தாக்குதலே கொஞ்சமும் எதிர் பார்த்திருக்கப் போவதில்லே



தோட்டாவை அனுப்பிக் கொல்லாமல் ஏன் மயக்கமருந்தை ஊசிமூலம் செலுத்தச் சொன்ஞர்களோ? நமக்கென்ன வந்தது! மேலிடத்து உத்தரவு அப்படி!
வெற்றிநம்முடைய— ஆவ்... ஹஹ...
கமாண்டர்—
மறுகணம் ரோஜன்-
அந்ததுப்பாக்கி முழக்கத்திற்காகத்தான் நான்காத்துக்கொண்டிருந்தேன்.இதோ-
புகைக் குண்டை ரோஜன் வெடிக்கச்செய்துவிட்டான். முகமூடியை அணிந்து கொண்டு உருளையை திறங்கள்!
இதோ புறப்பட்டு விட்டோம்!


எ...எ...என்ன
தான் நடக்கிறது?
ஆவ்வ்... வாகன
ங்கள் ஒன்றோ
டொன்றுமோதிக்
கொள்கின்றன!
புகையினுல்
நாம் எதிர்பார்
த்தகுழப்பம்
நிலவுகிறது
இங்கே...!
குளிர் பதனசவப்
பெட்டியிலிருந்து
இதோ ஜார்ஜை
வெளியே
கொண்டு வந்
தாயிற்று!
மேடைமீது மயங்கி
விழுந்துகிடக்கும்
டாக்கெட்டோவை
யும்ஜார்ஜையும்
இடமாற்றம் செய்ய
வேண்டும்...!


இடமாற்றம் செய்தாயிற்று...!நன்றி ஜார்ஜ் ! இதைத்தானே உயிரோடிருந்த போது நீ சாதிக்கத்துடித்தாய்!
சற்றைக்கெல்லாம்
ம்ம் - சீக்கிரம்! பிழை ஏதும் நேர்ந்துவிடலாகாது
ரோஜன் எங்கே?
அங்கே ரோஜனுக்கு சிறுபிரச்னை
யாரடா நீ, பெருச்சாளிமாதிரி இங்கே கொட்டமடித்துக் கொண்டிருப்பது?
ஆகா.. பரபரக்கும் என் கைகளுக்கு அரியவாய்ப்பு வலியகிட்டியிருக்கிறது!


ஒற்றைக்குஒற்றைஎன்றில்லாமல்இருவரையும் நான்ஒருவனே எதிர்த்துபோரிடுவதுமுறையில்லைதான்.ஸாரி தம்பிகளா!
ஹீஈஈ... ஆவ்வ்!
புகைமூட்டம் விலகி விட்டது!ரோஜன் ஏன் இன்னமும் வரக் காணோம்!
இனியும் அவனுக்காக காத்திருப்பதில் அர்த்தமில்லை... உடனடியாகஓடிப்போகாவிடில் எதிரிகளிடம் அகப்பட்டுக்கொள்ளும் ஆபத்துஉண்டு
ஓ.கே- வண்டியை கிளப்பு!
விஸல்-நிறுத்து! அதோ...அந்த கட்டிட உச்சியில் ரோஜன் நிற்கிறுன்பார்!
அவன் இறங்கி வரும்வரைகாத்திருந்தால் நமக்கு ஆபத்தாகிவிடும்..எனவே நான் நிற்கப் போவதில்லை!



ஆனால்
அடேய்.. வீஸல்... சுயநலப்பிண்டமே யானைக்குஒரு காலம்வந்தால் பூனைக்கு ஒருகாலம் வராமலாபோகும் ... அப்போது கவனித்துகொள் கிறேன் - உன்னை
ஸ்டாப்...!ஸ்டாப்... சாலையில் குழப்பம் தீருகிறவரை நீங்கள் செல்லமுடியாது... நில்லுங்கள் அப்படியே!
அவகாசம்இல்லை அப்பனே-நாங்கள் அவசரமாகப்போக வேண்டும்! ஹாஸன்
இப்போதுஉன்னுடையமுறை- திறமையைக்காட்டு!
வந்தகாரியம் முழு வெற்றி...இனிஇங்கிருந்துதப்பியோடிப் போவதுஒன்றுதான் நாம் சாமர்த்தியமாகசெய்யவேண்டியகாரியம்!


ஆவ்வ...
டாங்!
தூள்கிளப்பிவிட்டாய் ஹாஸன்...! சபாஷ்!
இதற்கிடையே—
டாக்கெட்டோ... ஐயோ-செத்து விட்டாரா?
நடக்கக்கூடாதது நடந்து விட்டது இன்று...ஆனால் நம்வீரத் தலைவருக்குஏற்பட்டமரணம் சாதாரணமானது-ஆமாம்,...ஹார்ட் அட்டாக்தான் காரணம்!
பின்னர்-இங்கிலாந்தில்.
யார் நீங்கள்...? நான்... நான் இங்கே எப்படி-
எங்களை கேட்காதே! அவரைக்கேள்...!உன்னை எதற்காக இங்கேகொண்டு வந்தோம்என்றுஎங்களுக்கே இன்னமும்தெரியாது!
உன் இரகசிய அதிரடித் திட்டத்தைப் பற்றி எங்களுக்கு இப்போது நீ சொல்லப் போகிறாய்! நீ செத்து விட்டதாக எண்ணம் உன் இராணுவம் அந்தத் திட்டத்தை செயல்படுத்த முனையும்! அப்போது சரியான மரண அடி கொடுக்கும் எங்கள் இராணுவம்! அது சரி, நாங்கள் யார் என்று கேட்டாயல்லவா? நாங்கள் தான் "பெருச்சாளிப் பட்டாளம்"!
முற்றும்.


மறையும் மாயாவி தோன்றும்
வைர வேட்டை!
தென் ஆப்ரிக்காவின் தென் கோடியிலிருந்த அந்த வைர சுரங்கத்திற்கு வந்த நோக்கம் முற்றுப் பெறவே, மறுநாள் கேப் டவுனுக்கு சென்று விமானத்தைப் பிடித்து பிரான்ஸ் திரும்ப தீர்மானித்தார் ரிப்போர்ட்டர் பிளாஷ்!
கைக் கடிகாரத்தில் மறைத்து வைத்திருக்கும் அதிசய மாத்திரைகளை விழுங்கினால் மாயமாகி விடும் அபார ஆற்றல் கொண்டவர் ஜாக் பிளாஷ்!
பல இலட்சம் பெறுமானமுள்ள வைரங்கள் தினசரி இவர்களுடைய கைகளில் புழங்கினாலும் இந்தக் கூலிகள் என்றைக்குமே தரித்திர நாராயணர்கள்தான்!
ஐயோ... பாவம்!
மிஸ்டர் ஸாண்டர்ஸ்! மிஸ்டர் வில்க்கிங் உங்களை அழைக்கிறார்.
மறுகணம்
எக்ஸ்யூஸ் மீ...
ஹே...!




உடம்புக்கு ஒன்றுமில்லையே?
சேச்சே.... அப்படியெல்லாம் ஏதுமில்லை!
ஜாக்கை ஒருகணம் இறுகப் பிடித்தான் ஸான்டர்ஸ்
சற்று நேரம் கழித்து-
என்ன.... மிஸ்டர் ப்ளாஷ்....! இங்கே உன் வரவு திருப்தியாக அமைந்ததல்லவா?
ஓ.... நிறைய புதிய தகவல்கள் கிடைத்தன ஸார்!
கேப்பில் இரயிலை பிடிக்க உடனே நான் வ்ரியர்க் போக வேண்டும்!
ரொம்ப அவசரமோ...? ஆனால் இங்கிருந்து கிளம்பு முன் ஒரு சின்ன மரபுக்கு நீ உட்பட வேண்டும்!
காவலாளி உன்னை சோதனை போடுவார்... இங்கே அப்படியொரு ஏற்பாடு...
வேண்டா வெறுப்பாக சம்மதித்தார் பிளாஷ்...
ம்ம்.... காலை உயர்த்துங்கள்
என் பாதத்தின் அடிப்பாகத்தில் வைரத்தை ஒட்டி வைத்திருப்பேனோ என்ற சந்தேகமா?
பாண்ட் பின்பகுதி பாக்கட்டில் இருந்தது இந்த வைரம்!
சார்!
என்ன.... என்ன விஷயம்?
இந்த வைரம் இவருடைய பையில் இருந்தது ஸார்


கேலிக்கூத்து!
என் பையினுள் எந்த சைத்தான் இதை போட்டதோ - சத்தியமாக நான் அறியேன்!
நெருடலான சங்கதி....! ஜோகன்னஸ் பர்க்கினுள்ள டைரக்டர்கள் குழுவுக்கு விஷயத்தை தெரிவிக்க வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது!
ப்ளாஷ் எவ்வளவோ மறுத்தும், ஸாண்டர்ஸின் அலுவல் அறை அருகே இருந்த சிறு அறையினுள் தள்ளி பூட்டி வைக்கப்பட்டார்
கடத்த ல்காரன் என்று சந்தேகிக்கிறார்களோ?
என்ன விவகாரம் .... பாஸ்?
போலீஸாரிடம் அவனை ஒப்படைக்க வேண்டும்... கேஸ் பதிவு செய்ய அவர்கள் தயங்குவார்களோ என்று ஒரு சந்தேகம்!
இவன் தப்பி ஓடிவிட்டால் வழக்கை அப்படியே கைகழுவிவிடுவார்கள்...
இங்கே ஏதோ குளறுபடி.....! உரையாடலை நான் ஒட்டுக் கேட்கிறேனோ என்ற சந்தேகம் வரவேண்டாமோ அவர்களுக்கு?
... வெளியே தயாராக காத்து நிற்கிறது ஒரு கார்.... ஒரு ஆள் சுலபமாக நுழைந்து வெளியேறும் அளவுக்கு இதோ அகல திறந்து கிடக்கிறது கம்பியில்லா ஜன்னல்....
தன் வாட்சினுள் ஒளிந்து கிடந்த நுண்ணிய மாத்திரைகளில் ஒன்றை எடுத்து வாயினுள் போட்டதும் ப்ளாஷ் அருபமாகிப் போனார்
மூன்று நிமிடங்களுக்குப் பின்-
வாட்?
தப்பி விட்டான்!
ஆனால் அவனுடைய கார் அதோ! அவன் அதிக தொலைவு போயிருக்க முடியாது!


அபாய எச்சரிக்கை அலாரம் ஒலிக்கட்டும்! கண்ணில் பட்டதும் சுட்டு வீழ்த்தச் சொல்! சுரங்கப் பகுதியை விட்டு அவன் வெளியேறவே கூடாது!
அடக்கடவுளே-- மின்சார வேலி!
ஓ கோ. இதை எதிர் பார்த்துத்தான் நான் தப்பிக்க சலுகை தந்தார்களாக்கும்? தப்பியோட முயலும் போது சுட்டுக் கொல்லப்பட்டான் என்று போலீஸாரிடம் சொல்லி விடலாம்!
மோப்ப நாய்கள்! என்னைக் கண்டுபிடித்து நார் நாராக கிழித்துப் போடப் போகின்றன!
செய்வதறியாது ப்ளாஷ் ஒரு கணம் தடுமாறிப் போனார்!
உபகரணங்கள் வைக்கும் அறை.....! வெளியே ஒரு தண்ணீர் டிரம்!
பிழைத்துக் கொள்வேன்!
என்னைக் கண்டு கொண்டு விட்டது..... சனியன்!
இந்த நாய்க்கு மறை கழன்று விட்டதோ? அங்கேதான் யாரும் இல்லையே!


என்ன விஷயம்... ஸார்!
இந்த வழியாக வளர்த்தியாக எவனாவது போனானா ரிக்கி!
ஆமாம் ஸார்.....! நேற்றுப் பார்த்தேன்-
வா.... திரும்பலாம்.....! அவனுடைய வாடையை தொடர்ந்து மோப்பம் பிடிக்க இயலவில்லை உனக்கு!
ரிக்கி!
வந்தார்கள்... கேட்டார்கள்.... போய்விட்டார்கள் - ஒரு இழவும் புரியவில்லையே!
ஙே.....!
ரிக்கி
பீதியில் அப்படியே மண்டியிட்டு விழுந்தான் அந்தக் கிழவன்..
சப்தம் வருகிறது... ஆனால் யாரையும் காணோமே
பயப்படாதே ரிக்கி.... எழுந்திரு
ஆனாலும் இப்படியா இந்தக் கிழவனை பயமுறுத்துவது... ஸார்? உங்களுடைய குரலை இனம் கண்டு கொண்டுவிட்டேன்!
தான் யார் என்பதையும், தன் ஆற்றலையும் கிழவனிடம் விளக்கினார் ப்ளாஷ்
ப்ளாஷுக்கு ஏகப்பட்ட மகிழ்ச்சி
ஹா....ஹா..... ரொம்பவும் பயந்துவிட்டாயா ரிக்கி ?
நானும் சாதாரண மனுஷன் தானே ஸார்.... முதலில் மிரண்டு விட்டேன்...


அங்கே ஏதோ விவகாரம்- அதனால் உங்களை துரத்தி வருகிறார்கள்- இல்லையா? அபாய எச்சரிக்கை அலாரத்தை கேட்டேன்..... காவலாளிகள் பிசாசென நாலா திசைகளிலும் பாய்ந்தோடக் கண்டேன்...
நடந்ததை ரிக்கியிடம் விவரித்தார் ப்ளாஷ்
ஸாண்டர்ஸ் குழு இங்கிருந்து வைரக் கற்களை கொஞ்சம் கொஞ்சமாகக் கடத்தி வருகிறது! அவ்வப்போது உங்களைப் போன்ற அப்பாவிகள் மீது பழியைப் போட்டு வருவது இவன்களுக்கு கைவந்த கலை!
தற்காலிகமாக அரூபமாகிக் கொள்ளும் சக்தி தனக்கு இருப்பதாக ப்ளாஷ் ரிக்கியிடம் சொன்னதும் ரிக்கி உற்சாகமாகிவிட்டான்-
ஸார்.... சொல்லுங்க- உங்களுக்கு நான் என்ன உதவி வேண்டுமானாலும் செய்கிறேன்! .... தினசரி நான் டவுனுக்கு சிறிய லாரியில் காய்கறி மளிகை சாமான்கள் எடுத்துப் போவேன்.... சோதனை போட்டுத்தான் செய்வார்கள்.... ஆனால் அவர்கள் உங்களை காண முடியாதல்லவா?
மறைவதற்கான மாத்திரை வேண்டும் என்றால் வாட்சை நான் வைத்துவிட்டு வந்த இடத்துக்கு போகவேண்டும்.
ப்ளாஷ் சிறை வைக்கப் பட்டிருந்த அறையின் அருகே கொண்டு போய் லாரியை நிறுத்தினான் ரிக்கி.... அங்கிருந்த காவலனின் கவனத்தை பேச்சுக் கொடுத்து திசை திருப்பி வைத்தான்....
மூன்றே வினாடியில் தன் துணி மூட்டையை கைப்பற்றி விட்டார் ப்ளாஷ்
ஜன்னல் எப்போதும்போல் திறந்தே கிடப்பது என் அதிர்ஷ்டம்தான்!




லாரியை கிளப்பிய ரிக்கி முகப்பு வாசலை சென்றடைந்த போது-
நிறுத்து-
உள்ளே யாரும் இல்லை...! அவன் இன்னமும் இங்கேதான் எங்கோ பதுங்கிக் கிடக்கிறான்!
சரி.. நீ போகலாம்
ஓ... ரிக்கி, நன்றி - உனக்கு!
நகருக்குள் சென்ற பிறகு நாம் ரொம்ப ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் ஸார்
ப்ளாஷ் - சுய உருவில் இருந்தாலும் அருபமாக இருந்தாலும் பிரான்ஸினுள் நுழைய முடியாது. காரணம்- அவர் விட்டுவிட்டு வந்த மேல் அங்கியில் இருந்தன- அவருடைய அடையாள அட்டையும், மொத்தப் பணமும்!
என்ன ஸார் செய்யப் போகிறீர்கள்...? என்னிடம் ஒரே ஒரு பவுண்டு இருக்கிறது... அதை நான் தருகிறேன்!
ஜோகன்னஸ் பர்க் செல்லும் இரவு இரயிலுக்காக காத்திருக்கும் வேளையில் பிரான்ஸிலுள்ள தூதரகத்தோடு டெலிபோனில் பேசப் போகிறேன்!
ப்ளாஷ் கேட்டுக் கொண்டபடி, அவரை டவுனுக்கு வெளியே இறக்கி விட்டுச் சென்றான் ரிக்கி.
சுய உருவம் திரும்பிய பிறகே நகருக்குள் நுழைந்து ஸ்டேஷனை சென்றடைய வேண்டும்
ஒரு மணி கழித்து, அந்த ரிப்போர்ட்டரை தேடும் முயற்சியை போலீஸ் கைவிட்டுவிட்டது...
ஜோகன்னஸ் பர்க் தூதரக அதிகாரிகள் இங்குள்ள காவல் துறையினரிடம் என்னைப்பற்றி நல்லவிதமாக சொல்லிவிட்டால் தீர்ந்தது பிரச்னை..


பிரான்ஸ் தூதரகத்தோடு தொடர்பு கேட்டது நீங்கள் தானே - போய் பேசுங்கள்!
ஹலோ..! நான் தூதரக மேலதிகாரியோடு பேச வேண்டும்..
காத்திருங்கள்.. அவர் வேறொரு போனில் பேசிக் கொண்டிருக்கிருர்
இந்த போலீஸ்காரர்களுக்கு இங்கே என்ன வேலை?
சட்டென்று புரிந்து விட்டது
நாம் நுழைவதை பார்த்ததும் ஓடிவிட்டான்
சாலைக்கு ஓடி வா
எப்படி... மறைந்தார்?
போலீஸார் தீவிரமடைந்தனர்.
நைஸாக பின்புற வாசல் வழியாக நான் ஓடிப் போய்விட வேண்டும்!
இதோ.. இருக்கிருர் - ஓடி வாருங்கள்!
எதிரே வந்தவர்களை மோதித் தள்ளிவிட்டு விரைந்தார் ப்ளாஷ்!
அதோ... தபால் வேன் ஒன்று ஆளின்றி நின்று கொண்டிருக்கிறது
STORE
போலீஸாரின் பிடியில் அகப்படாமல் எப்படியாவது தப்பித்துக் கொள்ள வேண்டும்
POSTAGE


நடமாட்டமில்லாத சாலை வழியே ப்ளாஷ் வேனை வேகமாக செலுத்திச் சென்ற வேளையில் தொலைவில் போலீஸ் சைரன் நாலா திசைகளிலும் எதிரொலிக்கத் தொடங்கியது
கலஹரி பாலைவனம் வழியில் குறுக்கிட்டது...
அவர்கள் என்னை பின்தொடர்வது எப்படி சாத்தியம்!
விரைவிலேயே ஓர் உண்மை பளிச் சென்று உறைத்தது
போலீஸார் என்னை நகருக்குள் தேடிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் ஹெலிகாப்டர்கள் புறநகர் சாலைகளில் கண்காணிப்பு பணியில் ரோந்து வருகின்றன போலும்
நான் மீண்டும் அரூபமாகிவிட வேண்டிய நெருக்கடி வந்துவிட்டது
கோழிக் குஞ்சை நோக்கிப் பாயும் பருந்தைப் போல் வேனை நோக்கி பாய்ந்து இறங்கி வந்தது அந்த ஹெலிகாப்டர்
திடீரென்று-!
கொலைகார பாவிகள்!



குறி தப்பிவிட்டது!
அவனுக்கு என்ன பைத்தியமா? வேனை விட்டு இறங்கி வெளியே வருகிறுன் பார்!
மாத்திரையை எடுத்து விழுங்க ப்ளாஷுக்கு அவகாசம் கிடைக்கவில்லை
ஐயோ... என்னை குறி வைத்து வருகிறது! - தொலைந்தேன்!
ஆவ்வ்...!
பிடியிலிருந்து அவன் இனி தப்பவே முடியாது... ஓட ஓட துரத்தி கொஞ்ச நேரம் வேடிக்கைதான் பார்ப்போமே!
திடீரென்று தரையோடு தரையாக படுத்துக் கொண்டார் ப்ளாஷ்.
எலியை பிடிக்குமுன் போக்குகாட்டி விளையாடும் பூனை போல் கொக்கரிக்கும் கோமாளிகளின் மூஞ்சியில் அசடு வழியப் போகிறது.
ஹெலிகாப்டர் எழுப்பிய தூசிப்படலம் விலகியபோது -
அட... அவனைக் காணுேமே!
எப்படி மாயமாக மறைந்தான்..? சாத்தியமேயில்லை!


ஹெலிகாப்டர் தன் அருகே தரை இறங்குக்கூடும் என்று ப்ளாஷ் எதிர்பார்த்தார்
ஆனால் ஹெலிகாப்டரில் இருந்தவர்கள் கூடுதல் உதவி வந்து சேர காத்திருந்த வேளையில் வேனை சுட்டுத் தள்ளிவிட்டனர்
இனியும் இங்கே நிற்பதில் அர்த்தமில்லை
நகரை நோக்கி கால் நடையாகவே கிளம்பி விட்டார் ப்ளாஷ்.
மணலில் ஒரு சிறு கல்லையும் விடாமல் புரட்டிப் பார்த்துவிடுவார்கள்..
சிக்கலாகிவிட்டதே! எங்கே பார்த்தாலும் போலீஸின் தலைதான்... சாத்தியமே இல்லை என்றாலும் என்னை பிடிக்காமல் ஓயமாட்டார்கள் போலிருக்கிறதே!
பிளாஷ், பசி, தாகம் மற்றும் களைப்பினால் சோர்ந்து தள்ளாடினார் ..
ஆள் நடமாட்டமில்லாத ஒரு சிறிய சந்துக்குள் நுழைந்து துவண்டு போய் ஒரு மூலையில் முடங்கிக் கிடந்தபோது ஒரு குரல் அவரை உசுப்பியது..
ப்ளென்டி! ஓ.. மே.. ப்ளென்டி...!
.. மே... ப்ளென்டி..
யார் - ரிக்கியா?



ரிக்கி...! நான்தான் - ப்ளாஷ்!
ரிக்கி பாடுவதை நிறுத்தினன்... குரல் வந்த திசையில் திரும்பி நடந்தான்
உங்களை எங்கேயெல்லாம் தேடுவது...? என்னை பின் தொடர்ந்து வாருங்கள் ஸார்.
சற்று தூரம் நடந்த பிறகு இருவரும் நின்றனர்.
உங்களை கோட்டை விட்டு விட்டார்கள் என்பதை கேள்விப்பட்டேன்... உங்களைத் தேடித்தான் இங்கே வந்தேன்
நீங்கள் சமர்த்து என்பதால் நிச்சயம் டெலினுக்கு திரும்பி வருவீர்கள் என்று கணித்தேன். எனவேதான், உங்களுடைய கவனத்தை ஈர்க்க குடிகாரன் போல் ஒரு பழைய பிரெஞ்ச் நாடோடி பாடலை உளறிக் கொண்டே வந்தேன்.
நல்ல காரியம் செய்தாய் ரிக்கி... மிக்க நன்றி
உங்களை எங்கே கொண்டு போய் பத்திரப்படுத்துவது என்றுதான் எனக்கு விளங்கவில்லை!
ஸாண்டர்ஸின் வீட்டிற்கு கூட்டிச் செல். என்னை அங்கே தே எவருக்குமே தோன்ருது!
நகருக்கு வெளியே இருந்த அந்த அழகிய பங்களாதான் ஸாண்டர்ஸுடையது.
விளக்கு எரிகிறது!
உள்ளே போய் நோட்டம் விடுகிறேன்... பதுங்கிக் கிடக்க வசதி இல்லை என்று தோன்றிஞல் திரும்பி விடுகிறேன்...
மீண்டும் நாம் சந்திக்கிறேம்... மேஜர்!



அந்த பிரெஞ்ச் ரிப்போர்ட்டர் எப்படித்தான் நழுவினுனே... ஆனுல் அவன் இன்னமும் வெளியேறிவிடவில்லை என்று தான் நான் நினைக்கிறேன்.
காப்டன் ப்ரோஸன்... அவனை போஸ்ட் ஆபீஸில் உங்களுடைய ஆட்கள் பார்த்தது நிச்சயம்தானு?
அவனுடைய பாஸ்போர்ட்டிலிருந்த புகைப்படம் பெரிதாக்கப்பட்டு பரவலாக விநியோகிக்கப் பட்டிருந்ததால் அங்கிருந்த ஊழியர் அவனை அடையாளம் கண்டு கொண்டுவிட்டார்... ஆனுல் ஏனே எல்லாமே எனக்கு புதிராக தோன்றுகிறது.
பாலைவனப் பகுதியில் அவன் மயங்கி விழுந்தான்... இங்கே முகாமில் மாயமாக மறைந்து போனுன்... அவன் என்ன மறையும் மாயாவியா!
நியாயமான சந்தேகம்!
உங்களையும், கிழட்டு ரிக்கியையும் தவிர வேறு எவரும் முகாமைவிட்டு வெளியேறவில்லை என்பது உறுதிதானு?
ஆமாம்... கார்களினுள்ளே கூட அவனைத் தேடி விட்டோம்!
ரிக்கியை தனியே கூப்பிட்டு விசாரிக்க வேண்டும். அவன் இங்கேதான் முகாமில் இருக்கிருன்.


ரிக்கியை கைது செய்யப் போகிறீர்களா?
அவன் நமக்கு துரோகம் இழைத்திருப்பான் என்று நினைக்கிறீர்கள்?
இந்த ப்ரோஸன் ஊமையையும் பேச வைத்து விடுவான்
ஆபீஸுக்கு சென்று ரிக்கியின் வருகைக்கு காத்திருக்கப் போகிறேன்..
ரிக்கியின் இருப்பிடத்திற்கு ஓடி வந்தார் பிளாஷ்
என்ன... ப்ரோஸன் என்னை கைது செய்ய தீர்மானித்திருக்கிருனு... அவன் கிராதகன் ஸார்... நான் தொலைந்தேன்.
நீயும் என்னேடு ஸாண்டர்ஸின் வீட்டில் ஒளிந்து கொள்ளலாம்.. வா!
ஸாண்டர்ஸும், வில்க்கிங்கும் ப்ரோஸனிடம் விடைபெற்று அகன்றதும் ப்ளாஷும், ரிக்கியும் நைஸாக உள்ளே புகுந்தனர்.
குட் ஈவ்னிங்.. ஸாண்டர்ஸ்!
பக்கவாட்டில் ஒரு சிறு நுழைவாசல் உண்டு ஸார்
ரிக்கிக்கு அந்த இடம் அத்துபடி... ப்ளாஷை உள்ளே அழைத்துச் சென்ருன்.
யாரும் இங்கே வரமாட்டார்கள் ஸார்.
எல்லோரும் தூங்கிய பிறகு, கீழே போய் நான் டெலிபோன் செய்ய வேண்டும்.



ப்ரோஸன் ஸ்விட்ச் போர்டில் நிச்சயம் ஆள் போட்டிருப்பார்... நீங்கள் பேசி முடிக்குமுன் போலீஸ் தயாராக வந்து நிற்கும்-உங்களை கைது செய்ய!
ப்ரிட்ஜில் ஏதாவது அகப்படுகிறதா பார்ப்போம் எனக்கு அகோரப் பசி!
எனக்கும் தான் ஸார்!
இரவு நன்ருக ஓய்வெடுத்த பின் தன் முயற்சியை தொடர தீர்மானித்திருந்தார் பிளாஷ்!
நான் இங்கே முடங்கிக் கிடக்கிறேன். ஆனல் தடயங்களை ஸாண்டர்ஸுக்கு எதிராக திருப்பிவிட முடியும் என்ளுல்!
கண்ணில் பட்ட ஒரு டேப் ரிக்கார்டரை ஸோபா மறைவில் வைத்தார் பிளாஷ்..
அவர்களுடைய உரையாடலை மட்டும் இரகசியமாக இதில் பதிவு செய்ய முடிந்தால் எவ்வளவு நன்ருக இருக்கும்!
மறுநாள் காலை பெரும் கூட்டம் ஒன்று அங்கே வந்தது..
காப்டன்... ரிக்கியை எங்கு தேடியும் காணேம்
நல்ல கதை! இதென்ன மாயாஜால விவகாரமா?
அவனை குடிபோதையில் நகரில் பார்த்திருக்கிருர்கள்... பிறகு எங்கே தொலைந்தானே? அந்த ப்ரெஞ்ச்காரனோடு தான் சுற்றியலைந்து கொண்டிருப்பான்... முகாமை விட்டு அவர்கள் வெகு தொலைவு போய்விடவில்லை என்று நம்பலாம்!
இன்று நாம் எப்படியும் ஒரு முடிவு கட்டியாக வேண்டும் காப்டன் ப்ரோஸன்... இதில் உங்களுக்கும் பங்கு இருப்பதை மறந்து விடாதீர்கள்.


வைரத் திருடனைப் பிடித்து போலீஸில் ஒப்படைக்கத் தவறினால் நம் தலைதான் உருளும் - ஜாக்கிரதை!
மிஸ்டர் ஸாண்டர்ஸ்! உங்களுடைய திருட்டுகளை மூடி மறைக்க நீங்கள் இன்னொரு பலி ஆட்டை தேட வேண்டியிருக்கும் - வேறென்ன?
அவகாசம் இல்லை ப்ரோஸன்.. டைரக்டர்கள் குழு இன்று மாலையில் இங்கே வருவதாக இருக்கிறது.
நாம் அவனை விரட்டிப் பிடித்திருந்தால், கையும் களவுமாக அவர்களிடம் ஒப்படைத்திருக்கலாம் பிரச்னை தீர்ந்து போயிருக்கும் நமக்கு
எனக்குத் தெரியாதா... என்ன?
டேப் ரிகார்டரின் ஓட்டத்தை நிறுத்தினார் ப்ளாஷ்..
நம்பிக்கையோடு இருங்கள்... டைரக்டர்கள் வரும்போது ப்ளாஷையும், ரிக்கியையும் அவர்கள் முன் கொண்டு வந்து நிறுத்த நானாயிற்று!
இந்த கேப்டன் ஒரு முட்டாள்...
இந்த டேப்பைக் காட்டி சின்னதொரு விளையாட்டை பார்க்கலாம் இப்போது
மீண்டும் அவர்களை முழு மூச்சாக தேடப்போகிறேன்
சபாஷ்...! என்னையுமா?
லைட்டர் இருக்கிறதா?



ப்ரோஸன் தன் பையிலிருந்து லைட்டரை எடுக்க யத்தனித்தபோது-
என்ன அது?
அதுதான் எனக்கும் புரியவில்லை!
மாக்னெடிக் டேப்!
இது அந்த டேப் ரிகார்டரில் இருந்தது. ப்ரோஸன் என்ன சூழ்ச்சி இது - எங்களுக்கு எதிராக?
ஏய்... அளந்து பேசு-வார்த்தைகளை!
நம் உரையாடலை நீ பதிவு செய்திருக்கிறாய்!
ஸாண்டர்ஸ்... அமைதியாக இரு! பொறுமையாக ஆலோசனை செய்வோம்!
அவர் டேப் ரிகார்டரின் பக்கமே செல்லவில்லை.. அப்படி என்னதான் டேப்பில் பதிவாகியிருக்கிறது என்று முதலில் கேட்டுப் பார்ப்போமே!
ஆமாம்... சந்தேகம் தீர அதுதான் வழி!
ஊஹும்... நிலவரம் சரியில்லையே!
துரோகி!
மிஸ்டர் ஸாண்டர்ஸன்! உங்களுடைய திருட்டுக்களை மூடிமறைக்க நீங்கள் இன்னொரு பலி ஆட்டை-
ஏன்... என் மீதும்தான் பழி வருகிறது!
ஆமாம்... ஏதோ குளறுபடி நடந்திருக்கிறது!


வில்க்கிங் சொல்வது சரிதான். அந்த ப்ரெஞ்சுக்காரன் தப்பியோடியதிலிருந்து நடப்பவை எல்லாமே! புதிராக இருக்கின்றன. வீட்டை சோதனை போடுவோம் - வாருங்கள்.
கெட்டது காரியம்! ரிக்கியை கண்டுபிடித்து விடப் போகிருர்கள்!
ப்ளாஷ் துணிந்து தோட்டத்தில் இறங்கி ஓடினு - அப்போது காலில் கல் ஒன்று தடுக்கிவிடவே...
ஆவ்வ்...
ரிக்கி... ஆபத்து - வா... ஓடிப் போய்விடுவோம்!
கேட்டீர்களா?
ஆமாம்... அவர்களேதான்!
விரட்டிப் பிடிப்போம்... வாருங்கள்!
மூவரும் சப்தம் வந்த திசை நோக்கிப் பாய்ந்தார்கள்.
ஸாண்டர்ஸ்... அந்தப் பக்கமாக தேடுங்கள்.
வீணுக அலட்டிக் கொள்கிறீர்கள்... தம்பிகளே!
எதிரிகள் தோட்டத்தில் அலைந்து கொண்டிருந்த போது
இந்த அருமையான டேப் இப்போது மீண்டும் என் வசம்!



வழியில் குறுக்கீடு ஏதுமில்லை. காப்டன் ப்ரோஸனின் காரை நோக்கி ஓடினூ ப்ளாஷ்
தப்பிவிட்டார்கள்!
நான் போலீஸ் தலைமையகம் சென்று வழக்கு பதிவு செய்யப் போகிறேன்.
காத்திருக்கும் வேளையில் டேப்பை இங்கே பதுக்கி வைக்கிறேன்!
நாங்களும் உன்னோடு வருகிறோம்.. ப்ரோஸன்
காரின் மேல் படுத்துக் கொண்டார் ப்ளாஷ்!
விர்ர்ர்ர்
POLICE CHIEF
போலீஸ் தலைமையகத்தை சென்றடைந்த கார் நின்றது
பயணம் முடிந்தது போலும்.. எல்லோரும் இறங்குகிறுர்கள்!
பைலட்டுகள் கிளம்ப ஆயத்தமாகிக் கொண்டிருந்த வேளையில், மறைவிடத்தில் இருந்த டேப்பை கையில் எடுத்தார் ப்ளாஷ்...
இனி - ஒரு கை பார்த்துவிடுவேன் அவர்களை!
அசரீரியாக ஒலி வருவதைக் கேட்டு திடுக்கிட்டான் அந்த போலீஸ் பைலட்...
இந்தா...! நீ கண் விழிக்க பல நிமிடம் பிடிக்கும் - தோழனே!
கும்


ப்ளாஷ் ஹெலிகாப்டரை மேலே ஏற்றினார்
ஊஹூம்... இவன் இப்போதைக்கு எழப் போவதில்லை!
முட்டாள்...! புறப்படச் சொல்லி யாரும் அவனுக்கு உத்தரவிட வில்லையே!
வாருங்கள்... நாமும் அவனோடு சேர்ந்து கொள்வோம்!
இவர்கள் என்னை துரத்தி வருவதாக தெரியவில்லை.
ஆனாலும் பின் தொடர்ந்து வருகிறார்கள் - என்ன குழப்பமோ?
நெருங்கி விட்டார்கள்! ஆகா...! அதோ... ஜோகன்னஸ் பார்க் ரயில்!



ஆபத்தானது...! ஆனாலும் இப்படி குதிப்பதை தவிர வேறு வழியில்லை!
தாழ்வான நிலையிலிருந்து ஹெலிகாப்டர் தரையில் விழுந்தது
அந்த பைலட் லேசான காயங்களோடு தப்பித்துவிடுவான்
இங்கே பதுங்கிக் கொள்ளலாம்
ஐயோ... டேப் அந்த பெண்ணின் தலைமீது விழுந்துவிட்டதே!
அந்தப் பெண்ணின் அலங்காரத் தொப்பியில் இழைந்து கொண்டது டேப்!
பாலைவனப் பகுதியில் இரயில் நின்றது..
என்னைதேட வந்தவர்கள் திரும்பி சென்றிருக்க மாட்டார்கள் என்று எதிர்பார்க்கிறேன்!


சற்றைக் கெல்லாம் -
எக்ஸ்யூஸ் மீ... மிஸ்! இந்த கம்பார்ட்மெண்ட்டை சோதனை போட வேண்டும்!
பெட்டிகளையும் திறந்து பார்க்க வேண்டும்
இது - அநியாயம்!
இங்கே இல்லை! - அந்த மாய மனிதனை தேடிக் கண்டு பிடிக்க வேண்டும்!
இரயில் பயணத்தை தொடர்ந்தது..
இரயில் ஜோகன்னஸ் பர்க் சென்றடைந்ததும் -
எல்லோரையும் சோதனை செய்து அனுப்புங்கள்
ஓ.கே.! பயணிகளை சோதனையிடுவோம். ஒரு கருவி கம்பார்ட்மெண்ட்டுகளை துருவி ஆராயும்
அந்த பழைய தொப்பியின் மீது யார்தான் அக்கறை கொள்வார்கள்?
ஏற்கனவே என் பெட்டியை சோதனை போட்டுவிட்டார்களே- இப்போது.. மறுபடியுமா?
சோதனையைத் தாண்டி கிழவி வெளியே வந்த மறுகணம் ப்ளாஷ் அவளது தொப்பியிலிருந்த டேப்பை எடுத்துக் கொண்டார்.
இனி பிரெஞ்சுத் தூதரகத்திற்குத் தைரியமாகப் போகலாம்.
நடந்தவை அனைத்தையும் விளக்கி, ஆதாரமாக டேப்பையும் ஒப்படைத்தார் ப்ளாஷ்! அதைத் தொடர்ந்து வீசப்பட்ட வலையில், சதிகாரர் கும்பல் முழுவதும் சிக்கியது!

- முற்றும்


லயன்
காமிக்ஸின்
எட்டாவது
பிறந்த நாளைக்
கொண்டாடும் வகையில்
ஜூலை 1.ல்
வருகிறது
ஆண்டு
மலர்!

# ஹாட்-லைன்

லயன் ரசிகர்களே! ஏகப்பட்ட கதைகளுக்கு மத்தியில் ஹாட்-லைனுக்கு இடம் ஒதுக்குவது சிரமமாகி விட்டது!

உங்கள் அபிமான ஸ்பைடரின் முழு நீள சாகஸத்தோடு தொடங்கும் இந்த 'சூப்பர் ஹாலி-டே ஸ்பெஷல்' நிச்சயம் உங்கள் அனைவரையும் கவரும் என்று நினைக்கிறேன்!

எழுதுவதற்கு இன்னும் ஏராளமான விஷயங்கள் உள்ளன. அடுத்த வெளியீடான 'மரண யாத்திரை'-யில் விரிவாக எழுதுகிறேன்!

இதற்கிடையே இதழின் நிறை-குறைகளைச் சுட்டிக் காட்டும் கடிதங்களை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

Happy Reading!

அன்புடன்,

ஆசிரியர்.

**கைவசம் உள்ள முந்தைய வெளியீடுகள்**

லயன் காமிக்ஸ்:

i) பொக்கிஷம் தேடிய பிசாசு - ரூ. 3/-
ii) Operation அலாவுதீன் - ரூ. 3/-
iii) ஒரு பனிமலை பயங்கரம் - ரூ. 3/-
iv) பழி வாங்கும் புயல் - ரூ. 6/-

திகில்:

i) காணாமல் போன கழுகு - ரூ. 3/-
ii) சிரிக்கும் மரணம் - ரூ. 3/-

மினிலயன்:

i) கொலைகாரக் காதலி - ரூ. 4/-

English:

i) Pushpa Chithra Katha - - Rs.4-50.

மேற்கண்ட புத்தகங்கள் மட்டுமே கைவசம் உள்ளன. பிரதி ஒன்றிற்கு தபால் செலவு 0-50 பைசா சேர்த்து M. O. அனுப்பி பிரதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

– நிர்வாகி.


பாட்டில் பூதம்!